

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 211 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 29 – செவ்வாய்க்கிழமை 12 மார்ச் 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 211 : Thiruvalluvar Year - 2055 - Maasi 29 - Tuesday 12 March 2024 - Madurai 12 Pages ₹ 5.00


## மக்களுக்கு நலம் பயக்கும் 'திராவிட மாடல்' ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டில்

# பிரதமரின் சுற்றுப் பயணம் வெற்றுப் பயணம்தான்!

## தருமபுரியில் நடைபெற்ற அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விமர்சனம்!

தருமபுரி, மார்ச் 12-

**தருமபுரியில் நடைபெற்ற அரசு விழாவில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "மக்களுக்கு நலம் பயக்கும் 'திராவிட மாடல்' ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டில் பிரதமரின் சுற்றுப் பயணம் வெற்றுப் பயணம்தான்" என விமர்சித்துள்ளார்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.3.2024) தருமபுரியில் நடைபெற்ற அரசு விழாவில், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மாவட்டங்களில் 350 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 993 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 114 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 75 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் செ.செந்தில்குமார், ஏ. செல்லக்குமார், எஸ்.ஆர். பார்த்திபன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே. மணி, எஸ்.பி. வெங்கடேஸ்வரன், ஒய். பிரகாஷ், டி. மதியழகன், பி. ராமச்சந்திரன், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கி. சாந்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும், சேலத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் இரா. ராஜேந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மாநகராட்சி ஆணையர் எஸ்.பாலசந்தர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.03.2024) தருமபுரியில் நடைபெற்ற அரசு விழாவில், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மாவட்டங்களில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைக்கும் விழா, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

சேலம் தருமபுரி - கிருஷ்ணகிரி என்று மூன்று மாவட்டங்களுக்குமான முத்தான விழா இது!

'முத்துக்கள் மூன்று' என்று சொல்லக் கூடிய வகையில் நேரு - பன்னீர்செல்வம் சக்கரபாணி ஆகியோரது செயல்பாடுகள் இதில் அடங்கியிருக்கின்றன! இவர்களுடைய செயல்பாடுகளால் இந்த மாவட்டங்களின் மக்களின் அன்புக்கு அவர்கள் சொந்தமாகிவிட்டார்கள்.

கட்சிப் பணியாக இருந்தாலும் ஆட்சிப் பணியாக இருந்தாலும் - அதே வேகத்துடனும், விவேகத்துடனும் செய்து முடித்து காட்டுகிற ஆற்றல் உரியவர்களாக இருக்கக்கூடியவர்கள் அவர்கள். இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிற அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களுக்குதுணைநிற்கக்கூடிய அனைவருக்கும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அதிகாரிகளுக்கும் அலுவலர்களுக்கும், உங்களுக்கும் என்னுடைய அன்பார்ந்த வாழ்த்துகளையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

புலவர் அவ்வையாரின் ஆயுள் வளர்ந்தால், தமிழ் வளரும் என்று எண்ணி, நெல்லிக்கனியை தந்த கடையேழு வள்ளல்களில் ஒருவரான அதியமான் ஆட்சி செலுத்திய, தமிழ் ஊரான தகடூர் தான், இந்த தருமபுரி மண்!

### தருமபுரி என்றதும் ஒகேனக்கல் நினைவிற்கு வருகிறது

தருமபுரி என்று சொன்னதுமே என்னுடைய நினைவுக்கு வருவது, ஒகேனக்கல்!

1928 கோடி ரூபாயில் உருவாக்கப்பட்ட, ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டத்துக்கு, 2008ஆம் ஆண்டு, உள்ளாட்சித் துறை அமைச்சரான நான், ஜப்பான் நாட்டிற்குச் சென்று, நிதி வசதிகளையும், திட்டமிடுதல் களையும் செய்தேன்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அந்த திட்டத்தை அன்றைக்கு தொடங்கி வைத்தார். ஆனால், ஆட்சி மாறியதும், காட்சி மாறியது. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்துக்கு முட்டுக்கட்டை போட்டார்கள். உடனே நானே இங்கே நேரில் வந்து போராட்டம் நடத்தினேன். அதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அந்த வகையில், தருமபுரி மாவட்டத்து மக்களுக்கு நல்ல குடிநீர் கிடைக்க காரணமானவன் நான் என்ற மகிழ்ச்சியோடு உங்களிடையே நான் நின்று கொண்டிருக்கிறேன்.

அவ்வையின் வரலாற்றில் தருமபுரிக்கு எப்படி பங்கு இருக்கிறதோ, அதேபோல, தமிழ்நாட்டு மகளிர் முன்னேற்றத்திலேயும் தருமபுரிக்கு முக்கிய பங்குண்டு!

1989ஆம் ஆண்டு இதே தருமபுரியில் தான் மகளிர் சுய உதவிக் குழுக்கள் என்ற அமைப்பை தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார். அவர் பேரால் ஏராளமான மகளிர் வாழ்வில் மகிழ்ச்சியை உருவாக்கியிருக்கிறது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் விண்ணப்பிக்கின்ற முகாமும் இங்கேதான் கடந்த ஆண்டு தொடங்கப்பட்டது.

இந்த ரெண்டு திட்டங்களும் மகளிர் வாழ்வுல ஒளிவிளக்காக திகழ்ந்து கொண்டிருக்கிறது! பெண்களுக்கு சொத்தில் சமபங்கு என்ற சட்டம் அதை இயற்றியவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

### பெண்ணினத்திற்கு கழக ஆட்சியின் அதிகாரக் கொடை!

இது பெண்ணினத்திற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வழங்கிய மாபெரும் அதிகாரக் கொடை! அதன் அடுத்தகட்டம்தான் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

உரிமைத் தொகை வழங்குவோம் என்று தேர்தலில் சொன்னோம்; அதை நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம். ஏனென்றால், உங்கள் எல்லாருக்குமே தெரியும், இது, "சொன்னதைச் செய்யும் ஆட்சி!"

இந்த திட்டத்தால் இன்றைக்கு ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு, மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம் என்றால், அவர்களை பொருளாதார அதிகாரம் உள்ளவர்களாக மாற்றியிருக்கிறோம் என்று பொருள்!

கொஞ்ச நாளைக்கு முன்னால், டிவியில் ஒரு பேட்டி பார்த்தேன். இந்த உரிமைத் தொகையைப் பெற்ற சகோதரி ஒருவர், "இது ஸ்டாலின் அண்ணன் கொடுத்த சீர்" என்று சொன்னார்கள். அப்போது எனக்கு என்ன தோன்றியது என்றால், நம்ம திராவிட மாடல் அரசுக்கும் தமிழ்நாட்டு மகளிருக்கும் இந்த திட்டத்தால் ஏற்பட்டுள்ள குடும்ப பாசத்தை எண்ணி மனம் நெகிழ்ந்து போனேன்.

இதுமட்டுமல்லாமல், இந்த திராவிட மாடல் அரசு இதுவரை நிறைவேற்றியிருக்கிற திட்டங்களை பட்டியலிட வேண்டும் என்றால், நாள் முழுக்க நான் பேசிக் கொண்டே இருக்க வேண்டும், சொல்லிக் கொண்டே இருக்கவேண்டும். அதனால், முத்தான சில திட்டங்களை பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

### முத்தான சில திட்டங்கள்

"விடியல் பயணத் திட்டம்" மூலமாக நமது சகோதரிகள் மாதந்தோறும் 888 ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் நாள்தோறும் 16 லட்சம் குழந்தைகள் வயிறார சாப்பிடுகிறார்கள்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் "புதுமைப்பெண்" திட்டம் மூலமாக மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் போய்ச் சேருகிறது.

இரண்டே ஆண்டில், 'நான் முதல்வன்' திட்டம் மூலமாக

28 லட்சம் இளைஞர்கள் திறன் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

'இல்லம் தேடிக் கல்வி' திட்டம் மூலமாக 24 லட்சத்து 86 ஆயிரம் பள்ளிக் குழந்தைகள் பயனடைந்திருக்கிறார்கள்.

2 லட்சம் உழவர்களுக்கு புதிய இலவச மின் இணைப்பு கொடுத்திருக்கிறோம். உயர்த்தப்பட்ட ஓய்வூதியத்தில் 30 லட்சம் முதியோரும் 5 லட்சம் மாற்றுத்திறனாளிகளும் மாதந்தோறும் பயனடைந்து கொண்டு வருகிறார்கள்.

'நம்மைக் காக்கும் 48' திட்டம் மூலமாக 2 லட்சம் உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறது.

"மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தால் ஒரு கோடி பேர் பயனடைந்திருக்கிறார்கள்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### முத்துக்கள் மூன்று!







**சேலம் தருமபுரி - கிருஷ்ணகிரி என்று மூன்று மாவட்டங்களுக்குமான முத்தான விழா இது**

**'முத்துக்கள் மூன்று' என்று சொல்லக் கூடிய வகையில் நேரு - பன்னீர் செல்வம் சக்கரபாணி ஆகியோரது செயல்பாடுகள் இதில் அடங்கியிருக்கின்றன! இவர்களுடைய செயல்பாடுகளால் இந்த மாவட்டங்களின் மக்களின் அன்புக்கு அவர்கள் சொந்தமாகிவிட்டார்கள். கட்சிப் பணியாக இருந்தாலும் ஆட்சிப் பணியாக இருந்தாலும் - அதே வேகத்துடனும், விவேகத்துடனும் செய்து முடித்து காட்டுகிற ஆற்றல் உரியவர்களாக இருக்கக்கூடியவர்கள் அவர்கள்.**

# பொன்முடியின் 3 ஆண்டு சிறைத் தண்டனை நிறுத்தி வைப்பு!

## உச்சநீதிமன்றம் அதிரடி உத்தரவு!


புதுடெல்லி, மார்ச் 12-

**சொத்துக் குவிப்பு வழக்கில் முன்னாள் அமைச்சர் க.பொன்முடிக்கு விதிக்கப்பட்ட 3 ஆண்டு சிறைத் தண்டனையை நிறுத்தி வைத்து உச்சநீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.**

சொத்துக் குவிப்பு வழக்கில் பொன்முடிக்கு விதிக்கப்பட்ட 3 ஆண்டு சிறைத் தண்டனையை நிறுத்தி வைத்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் பொன்முடி, அவரது மனைவி விசாலாட்சி ஆகியோருக்கு தலா 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 50 லட்சம் ரூபாய் அபராதமும் விதித்து கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 21ந் தேதி சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

இதை எதிர்த்து பொன்முடி சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் இ.சி. அகர்வலாவும், விசாலாட்சி சார்பில் வக்கீல் புல்கித் தாரேவும் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்தனர்.

இந்த மனுவில் சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும், தண்டனை தீர்ப்பை நிறுத்தி வைக்கவும் கோரியிருந்தனர். மேலும் இடையீட்டு மனுவில் சிறையில் சரண் அடைவதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் எனவும் கோரப்பட்டது.



இந்த நிலையில், முன்னாள் அமைச்சர் பொன்முடியின் மேல்முறையீட்டு மனு நேற்று உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது சொத்துக் குவிப்பு வழக்கில் பொன்முடிக்கு விதிக்கப்பட்ட 3 ஆண்டு சிறை தண்டனையை நிறுத்தி வைத்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் சொத்துக்குவிப்பு வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் அளித்த சிறைத் தண்டனையை உச்சநீதிமன்றம் நிறுத்தி வைத்ததால்,

பொன்முடி மீண்டும் எம்.எல்.ஏ. ஆக தொடர வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

உச்சநீதிமன்றத்தின் மேற்காணும் தீர்ப்பின் நகலை, தமிழ்நாடு சட்டப் பேரவை செயலகத்தில் காண்பித்து, மீண்டும் சட்டமன்ற உறுப்பினராக நீடிக்க க.பொன்முடி அவர்களுக்கு வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே, தமிழ்நாடு சட்டப் பேரவை செயலகம் வெளியிட்டுள்ள விளக்கத்தில், திருக்கோவிலூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினராக தன்னை அறிவிக்க வேண்டும் என்று தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ள க.பொன்முடி பேரவை செயலகத்தை அணுகலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னொரு மூத்த வழக்கறிஞர் இதுபற்றி குறிப்பிடும்போது, க.பொன்முடி அவர்கள், உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், தம்மை மீண்டும் எம்.எல்.ஏ.வாக அறிவிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தை அணுகலாம் என்றும் தெரிவித்தார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் கீழமை நீதிமன்றத்தில் விடுவிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் க.பொன்முடியும் அவரது துணைவியார் திருமதி விசாலாட்சி அம்மையார் ஆகியோரை, தாமாக முன்வந்து வழக்கை எடுத்துக் கொண்ட சென்னை உயர் நீதிமன்றம், அவர்களுக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனையும் ரூ.50 லட்சம் அபராதமும் விதித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 12-03-2024

# ‘குட்கா’ பழனிசாமி!

**போ**தைப் பொருள் அதிகமாகி விட்டதாகச் சொல்லி போராட்டம் நடத்தப் போகிறாராம் ‘குட்கா’ பழனிசாமி!

ஜாபர் சாதிக் என்பவர் எந்த மாநிலத்தில் மாட்டினார்? எங்கோ மாட்டினார். அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்பதால் தமிழ்நாட்டில் போதை மருந்து பரவி விட்டது என்று சொல்ல முடியுமா? என்ன புத்திசாலிகள் இவர்கள்? இந்த மாதிரியான கற்பனைகள் எல்லாம் அ.தி.மு.க., பா.ஜ.க.வுக்குத்தான் வரும். அவதூறுகளை அள்ளித் தெளிப்பதன் மூலமாக பிழைப்பு நடத்தும் பேர்வழிகள் இவர்கள்.

**போதைப் பொருள் நடமாட்டத்தை தடுக்க ஆளுநர் ரவியிடம் போய் மனுக்கொடுத்துள்ளார் பழனிசாமி. அவர் என்ன டி.ஜி.பி.யா? அவரால் எப்படி தடுக்க முடியும்? மாநிலத்தில் போதைப் பொருள்கள் நடமாட்டம் அதிகமாகவும் இல்லை. அதைத் தடுக்க இன்றைய அரசு மெத்தனமாக இருக்கவும் இல்லை. ஆனால் தனது ஆட்சி காலத்தை ‘குட்கா’ காலமாக வைத்திருந்தவர் பழனிசாமிதான். குட்கா வியாபாரிகளிடம் லஞ்சம் வாங்கி அவர் கட்சி நடத்தினார் என்பதை சி.பி.ஐ. நடத்தி வரும் வழக்கு முடியும் போது தெரியவரும்.**

சென்னையில் சட்டவிரோதமாக தடை செய்யப்பட்ட குட்கா பொருள்களை விற்பனை செய்ய அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள், ஐ.பி.எஸ். அதிகாரிகள், வணிக வரித்துறை அதிகாரிகள் மற்றும் சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு லஞ்சம் தரப்பட்டதாக 2017-ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் குற்றச்சாட்டு எழுந்தது.

குட்கா வியாபாரிகளிடம் வருமான வரித்துறை விசாரணை நடத்துகிறது. அப்போது தங்களது வியாபாரத்துக்கு துணை நின்றவர்கள் அ.தி.மு.க. ஆட்சியில் யார் யார் என்பதை டைரி எழுதி வைத்திருந்தார்கள் வியாபாரிகள். அந்த நிறுவனத்தில் இருந்து 40 கோடி ரூபாய் வரை லஞ்சம் பெறப்பட்டுள்ளது அ.தி.மு.க. ஆட்சியில்.

இது தொடர்பான வழக்கில் மத்திய கலால் வரித்துறை தாக்கல் செய்த பதிலில், **“டெல்லியில் இருந்து தமிழ்நாட்டுக்கு ஏராளமான குட்கா பொருள்கள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதை விற்பதற்காக ரூ.55 கோடி வரை ஹவாலா முறையில் பண பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது”** என்று கூறப்பட்டு இருந்தது.

வருமான வரித்துறையும் இதனை வலிமைப்படுத்துவது மாதிரியான ஆதாரங்களைக் கொடுத்தது. தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி, அப்துல் குத்தூஸ் அமர்வு, சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டது. இவை அனைத்தும் பழனிசாமி ஆட்சியில் நடந்தவை ஆகும்.

ரூ.40 கோடிக்கு மேல் லஞ்சம் பெற்றது தொடர்பாக வருமான வரித்துறை அ.தி.மு.க. ஆட்சியில் தலைமைச் செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பியது. அதில் அ.தி.மு.க. ஆட்சி காலத்து அமைச்சரான விஜயபாஸ்கர், இரு டி.ஜி.பி.க்கள் பெயர்கள் இருந்தன. ஆனால் லஞ்ச ஒழிப்புத் துறையின் முதல் தகவல் அறிக்கையில் இவர்கள் பெயர் இடம் பெறாத வகையில் பழனிசாமி இவர்களை காப்பாற்றினார். சில ஊழியர்களை மாட்டி விட்டு அ.தி.மு.க. அமைச்சர்களை தப்பிக்க வைத்தார் பழனிசாமி.

அ.தி.மு.க. அமைச்சர் லஞ்சம் பெற்றதற்கான ஆதாரங்கள் கொண்ட ஒரு கோப்பு ஒன்றை வருமான வரித்துறை அனுப்பி இருந்தது. அந்த ஆவணங்களையே காணாமல் ஆக்கினார்கள் பழனிசாமி ஆட்சியில்.

குட்கா வழக்கை விசாரித்த லஞ்ச ஊழல் தடுப்புத்துறை கூடுதல் டி.ஜி.பி. மஞ்சுநாதா திடீரென்று மாற்றப்பட்டார். அவர் இருந்தால் இந்த வழக்கை முறையாக நடத்தி விடுவார் என்று பயந்து தூக்கி அடித்தார் பழனிசாமி.

உயர்நீதிமன்ற ஆணையின்படி விஜிலென்ஸ் ஆணையராக நியமிக்கப்பட்டு - குட்கா வழக்கை விசாரித்து வந்த வி.கே.ஜெயக்கொடி ஐ.ஏ.எஸ். 5 மாதங்களில் பழனிசாமியால் மாற்றப்பட்டார்.

குட்கா வழக்கில் தொடர்புடைய சிவக்குமார், செந்தில் முருகன் - ஆகிய இரண்டு அரசு ஊழியர்கள் மீது ‘வழக்குத் தொடர’ சி.பி.ஐ. அனுமதி கோரியது. அதற்கு பழனிசாமி அரசு அனுமதி தரவில்லை. திரும்பத் திரும்ப கேட்ட பிறகு 20 மாதங்கள் கழித்து அனுமதி அளித்தார் பழனிசாமி.

அமைச்சர் விஜயபாஸ்கர், முன்னாள் டி.ஜி.பி. டி.கே.ராஜேந்திரன் உள்ளிட்டவர்கள் மீதான நடவடிக்கைக்கு பழனிசாமி இறுதிவரை அனுமதி தரவே இல்லை.

எந்த அதிகாரிகள் மீது புகார் எழுந்ததோ, அவருக்கே பணி நீட்டிப்பு தரப்பட்டது பழனிசாமி ஆட்சியில். தன் மீதான குற்றச்சாட்டுக்கு பரிகாரம் தேட வழக்கு போட அவருக்கே அனுமதியும் தரப்பட்டது. இதுதான் பழனிசாமி, தனது ஆட்சி காலத்தில் போதைப் பொருட்களை ஒழித்த லட்சணம் ஆகும். இப்போது போதைக்கு எதிராக போராட்டம் நடத்த வந்திருக்கும் பழனிசாமியின் லட்சணம் இதுதான்.

மனுவை யாரிடம் கொடுக்கிறார்? பா.ஜ.க.வின் கிண்டி கிளைச் செயலாளரைப் போலச் செயல்படும் ஆளுநரிடம் கொண்டு போய் கொடுக்கிறார் பழனிசாமி.

போதைப் பொருள் கடத்தியதாக பா.ஜ.க.வைச் சேர்ந்த 14 பேர் சிறையில் இருக்கிறார்கள்.

* Narcotics drugs and Psychotropic Substances act 1985 (NDPS Act) என்கிற **போதை மருந்துகள் மற்றும் உளவெறியூட்டும் பொருட்கள் சட்டத்தின் கீழ் சென்னை, தாம்பரம், ஆவடி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருச்சி, பெரம்பலூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, மதுரை உள்ளிட்ட காவல் பகுதிகளில் கைதானவர்கள் பட்டியல் இது...**

**1. சரவணன் (பா.ஜ.க. உறுப்பினர்).**

**2. ராஜேஷ் (சென்னை 109 வார்டு பா.ஜ.க வட்டத் தலைவர்)**

**3. விஜய நாராயணன் (பா.ஜ.க., மத்திய சென்னை மேற்கு மாவட்டச் செயற்குழு உறுப்பினர்).**

**4. விஜயலட்சுமி (பா.ஜ.க. செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர், நெடுகுன்றம் துணை தலைவர்).**

**5. மணிகண்டன் (பா.ஜ.க. தாழ்த்தப்பட்டோர் பிரிவு மண்டல தலைவர்).**

**6. ஆனந்த் ராஜ் (திருவள்ளூர் மேற்கு மாவட்ட பா.ஜ.க. SC/ST பிரிவு மாவட்ட துணைத் தலைவர்).**

**7. ராஜா என்ற வசூல் ராஜா (காஞ்சிபுரம் மாவட்ட பா.ஜ.க. இளைஞர் நலன் அபிவிருத்தி பிரிவு செயலாளர்).**

**8. குமார் @ குணசீலன் (பா.ஜ.க. உறுப்பினர்).**

**9. மணிகண்டன் (திருச்சி பா.ஜ.க. உறுப்பினர்).**

**10. லுவிங்கோ அடைக்கலராஜ் (பெரம்பலூர் மாவட்ட பா.ஜ.க. முன்னாள் செயலாளர்).**

**11. சிதம்பரம் என்ற குட்டி (தஞ்சாவூர் வடக்கு மாவட்ட பா.ஜ.க. துணைத் தலைவர்).**

**12. ராஜா என்கிற சூரக்கோட்டை ராஜா (பா.ஜ.க. விவசாய பிரிவு மாநிலச் செயற்குழு உறுப்பினர்).**

**13. சத்யா என்கிற சத்யராஜ் (பா.ஜ.க. உறுப்பினர்).**

**14. காசிராஜன் என்கிற காசி (மதுரை நகர பா.ஜ.க. இளைஞர் பிரிவு செயலாளர்).**

- போதைக்கு எதிராக அறிக்கை கொடுக்க முழுத் தகுதி உடையவர்தான் பா.ஜ.க. கால ஆளுநர் ரவி!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.3.2024) தருமபுரியில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் 8,736 பயனாளிகளுக்கு 95 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் செ.செந்தில்குமார், ஏ.செல்லக்குமார், எஸ்.ஆர்.பார்த்திபன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி, எஸ்.பி.வெங்கடேஸ்வரன், ஒய்.பிரகாஷ், டி.மதியழகன், பி.ராமச்சந்திரன், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கி.சாந்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும், சேலத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் இரா.ராஜேந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி ஆணையர் எஸ்.பாலசந்தர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.14.85 கோடியில் – தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை –

# கவின் கலைப் பல்கலைக் கழகத்திற்கு புதிய கட்டிடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மார்ச் 12 -**

**தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.14.85 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் சார்பில் சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், அரசு இசைக் கல்லூரி வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்திற்கு தரை மற்றும் நான்கு தளங்களுடன் 14 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டடத்தை திறந்து வைத்தார்.

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தின் கீழ், சென்னை, மதுரை, கோவை மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் உள்ள அரசு இசைக் கல்லூரிகள், சென்னை மற்றும் கும்பகோணத்தில் உள்ள அரசு கவின்கலைக் கல்லூரிகள், மாமல்லபுரத்தில் இயங்கும் அரசு கட்டடக் கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி, மதுரை மற்றும் திருச்சியில் இரு சுயநிதி உதவி கல்லூரிகள், சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் மற்றும் 13 சுயநிதி கல்லூாரிகள், என மொத்தம் 23 கல்லூரிகள் இணைவுப் பெற்றுள்ளன.

மேற்குறிப்பிட்ட இணைவுப் பெற்ற கல்லூரிகளை தவிரவும் இப்பல்கலைக்கழகத்தின் கீழ் 20-ற்கும் மேற்பட்ட அங்கீகாரம் பெற்ற வெளிக்கல்வி வளாக (Off Campus) மையங்களும் இணைவுப் பெற்று செயல்பட்டு வருகின்றன.

இப்பல்கலைக்கழகம் தோற்றுவித்த ஆண்டு முதல் இதுநாள் வரை எந்த பல்கலைக்கழகத்திற்கும் இல்லாத சிறப்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வேந்தராக கொண்டு செயல்பட்டு வருகிறது.

இப்பல்கலைக்கழகத்திற்கு சொந்த கட்டடம் இல்லாத நிலையில் தமிழ்நாடு அரசால் 14 கோடியே 85 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தரை மற்றும் நான்கு தளங்களுடன், 45,800 சதுர அடி பரப்பளவில் நவீன வசதிகளுடன் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இப்புதிய கட்டடத்தில் முதுகலை பட்டப் படிப்பாக இசைத் துறையில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், நாதஸ்வரம் மற்றும் பரதநாட்டிய படிப்புகளையும், கவின்கலையில் ஓவியம் மற்றும் காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு படிப்புகளையும், இசை மற்றும் கவின்கலைப் பிரிவுகளின் கீழ் ஆராய்ச்சி படிப்பு பயின்று வரும் மாணவ, மாணவியர்களுக்கான வகுப்பறைகள், நூலகம் மற்றும் மின்னணு நூலகம், நவீன வசதியுடன் கூடிய ஸ்டூடியோ அறை, செயல்முறை பயிற்சிக்கான கருவிகள் மற்றும் உபகரணங்கள், அலுவலர்கள், ஆசிரியர்கள், ஆசிரியரல்லா அலுவலகப் பணியாளர்களுக்கான அறைகள், நவீன வசதியுடன் கூடிய கூட்ட அரங்கு, ஆட்சிமன்றக் குழு கூட்ட அரங்கு, திரையரங்கம், ஆராய்ச்சி படிப்புகளுக்கான மையம் போன்ற பல்வேறு வசதிகளுடன் இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கலை மற்றும் பண்பாட்டுத் துறை இயக்குநர் எஸ்.ஆர். காந்தி, தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழக துணை வேந்தர் டாக்டர் சீ. சௌமியா, பதிவாளர் திருமதி சிவசௌந்தரவல்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி மாவட்டம் - பேரூரணி கிராமம் அருகே நீராவி குளத்தில் மூழ்கி

# உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 12 -**

**தூத்துக்குடி மாவட்டம் பேரூரணி கிராமம் அருகே நீராவிக்குளத்தில் மூழ்கி உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவரது அறிவிப்பு வருமாறு :-

தூத்துக்குடி மாவட்டம் மற்றும் வட்டம், பேரூரணி கிராமத்தைச் சேர்ந்த லெட்சுமணன் என்பவரது குழந்தைகள் செல்வி. சந்தியா (வயது 13), செல்வி. கிருஷ்ணவேணி (வயது 10) மற்றும் செல்வன். இசக்கிராஜா (வயது 8) ஆகிய மூவரும் நேற்று 09.03.2024 மாலை தனது உறவினருடன் பேரூரணி கிராமத்தில் உள்ள நீராவிக்குளத்தில் குளிக்கச் சென்ற போது எதிர்பாராத விதமாக தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும், வேதனையுமடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### 3251 பயனாளிகளுக்கு

# திண்டுக்கல்லில் ரூ.29.96 கோடியில் அரசின் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் இ.பெரியசாமி வழங்கினார்!

*திண்டுக்கல், மார்ச் 12-*

*திண்டுக்கல்லில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 3251 பயனாளிகளுக்கு ரூ.29.96 கோடி மதிப்பீட்டிலான அரசின் நலத்திட்ட உதவிகளை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி வழங்கினார்.*

*நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பூங்கொடி தலைமை வகித்தார். கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார், திண்டுக்கல் நாடாமன்ற உறுப்பினர் வேலுச்சாமி ஆகியோர் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தனர்.*

*இந்த விழாவில் அமைச்சர் இ.பெரியசாமி தெரிவித்ததாவது:-*

*தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் செயல்படுத்தி வருகிறார். பொதுமக்கள் வாழ்க்கைக்குத் தேவையான கல்வி, குடிநீர் வசதி, சாலை வசதி, போக்குவரத்து வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் நிறைவேற்றிட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.*

*அந்த திட்டங்களின் பயன்கள் கடைகோடி கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கும் சென்றடைகிறதா என்பதை உறுதிப்படுத்தும் வகையில் “நீங்கள் நலமா” என்ற திட்டத்தை 6.3.2024 அன்று தொடங்கி வைத்துள்ளார்கள்.*

*ஏழை, எளிய மக்களுக்கு வீடு கட்டி வழங்கும் வகையில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் 8.00 இலட்சம் வீடுகள் கட்டி வழங்கப்படவுள்ளது. அதே போல் தமிழகத்தில் ஏற்கனவே தொகுப்பு வீடுகள் திட்டத்தில் கட்டப்பட்ட பழைய வீடுகளை பழுது பார்த்து வழங்குவதற்காக ரூ.2000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

**மகளிர் மேம்பாட்டிற்கு எண்ணற்ற திட்டங்கள்!**

*மகளிர் மேம்பாட்டுக்காக எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் தமிழகம் முழுவதும் 1.15 கோடி மகளிர் பயனடைந்து வருகின்றனர்.*

*இத்திட்டத்தில் விடுபட்டவர்கள் உரிய ஆவணங்களுடன் மேல்முறையீடு செய்தால், அவர்களுடைய விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியுடைய அனைவருக்கும் இத்திட்டத்தின் பயன்கள் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*முதலமைச்சர் கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.4000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 10,000 கி.மீட்டர் நீளம் சாலைகள் மேம்படுத்தப்பட்டு குக்கிராமங்கள் இணைக்கப்பட்டு வருகின்றன.*

*திண்டுக்கல் மாவட்டத்தில் மாணவ, மாணவிகளின் கல்வி மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. திண்டுக்கல் மாவட்டத்திற்கு மட்டும் 2 ஆண்டுகளில் 7 கல்லுாரிகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

*வீடற்ற ஏழை, எளிய பொதுமக்களுக்கு நிரந்தர குடியிருப்புகள் வழங்குவதற்காக இலவச வீட்டு மனைப்பட்டா, வீடு கட்டி வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒரு இலட்சம் ஏழை, எளிய பொதுமக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தை மயிலாடுதுறையிலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்கள்.*

*அதனைத்தொடர்ந்து, திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக நடைபெற்ற நிகழ்ச்சிகளில் வேடசந்துார், குஜிலியம்பாறை, திண்டுக்கல் கிழக்கு, நத்தம், ஒட்டன்சத்திரம், பழனி ஆகிய வட்டங்களைச் சேர்ந்த மொத்தம் 4593 பயனாளிகளுக்கு ரூ.37.54 கோடி மதிப்பீட்டிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.*

**இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்!**

*விழாவில் திண்டுக்கல் மேற்கு வட்டத்தில் 392 பயனாளிகளுக்கு ரூ.1.82 கோடி மதிப்பீட்டிலும், திண்டுக்கல் கிழக்கு வட்டத்தில் 34 பயனாளிகளுக்கு ரூ.49.23 இலட்சம் மதிப்பீட்டிலும், நிலக்கோட்டை வட்டத்தில் 273 பயனாளிகளுக்கு ரூ.81.90 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் 699 பயனாளிகளுக்கு ரூ.3.12 கோடி மதிப்பீட்டிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.*

*கல்வி, சுகாதாரம், குடிநீர் என கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, 8 கோடி மக்களும் பயன்பெறும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி வரும் முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் ஆதரவு அளிக்க வேண்டும், என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி பேசினார்.*

## தேர்தல் பத்திர விவரங்களை இன்று மாலைக்குள் வெளியிட வேண்டும்!

# ஸ்டேட் பேங்கிற்கு உச்சநீதிமன்றம் அதிரடி உத்தரவு!

## கால அவகாசம் கேட்ட மனுவைத் தள்ளுபடி செய்து சரமாரி கேள்விக் கணை!

**புதுடெல்லி, மார்ச் 12-**

**தேர்தல் பத்திர விவரங்களை இன்று (மார்ச் 12) மாலைக்குள் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வெளியிட வேண்டும் என்றும், இது தொடர்பாக கால அவகாசம் கேட்டு எஸ்.பி.ஐ. தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து உச்சநீதிமன்ற அமர்வு அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.**

அரசியல் கட்சிகள் வாங்கிய மற்றும் மீட்டெடுக்கப்பட்ட பத்திரங்களின் விவரங்களை எஸ்.பி.ஐ. வெளியிட வேண்டும். அதுவும் மார்ச் 15 ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் பத்திரங்களின் பொது விவரங்களை தேர்தல் ஆணையம் பொதுவில் வெளியிட வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிடப்பட்டு உள்ளது.

முன்னதாக தேர்தல் பத்திரங்களின் விவரங்களை வெளியிட எஸ்.பி.ஐ. வங்கிக்கு மார்ச் 6ஆம் தேதி வரை காலக்கெடு விதிக்கப்பட்டது. இதை ஜூன் 30, 2024 வரை நீட்டிக்க எஸ்.பி.ஐ. கோரிக்கை வைத்தது.

ஜூன் வரை கால அவகாசம் கேட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவின் மனு நிராகரிக்கப்பட்டதாக உச்ச நீதிமன்றம் தெரிவித்தது.

### எஸ்.பி.ஐ.க்கு உச்சநீதி மன்றம் சரமாரி கேள்வி!

தேர்தல் பத்திர விவகாரங்களை தேர்தல் ஆணையத்தில் வழங்க கால அவகாசம் கோரி எஸ்.பி.ஐ. வங்கி சார்பாக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சந்திரசூட் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வந்தது.



இதில் தேர்தல் பத்திர விவரங்களை வெளியிட அவகாசம் கேட்ட எஸ்.பி.ஐ.க்கு உச்ச நீதிமன்றம் சரமாரி கேள்வி எழுப்பியது. அரசியல் கட்சிகள் பெற்ற தேர்தல் பத்திர நன்கொடை விவகாரங்கள் மிக சுலபமாக சேகரிக்கக் கூடியது, அதை வெளியிட எஸ்.பி.ஐ. ஏன் கால அவகாசம் கேட்கிறது என உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

ஏன் அவகாசம் கேட்கிறீர்கள் என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் மீண்டும் மீண்டும் கேள்வி எழுப்பினர். நாடு முழுவதும் பல வங்கிக் கிளைகளில் தேர்தல் பத்திரங்கள் விற்பனை செய்யப்பட்டாலும் அதன் அனைத்து விவரங்களும் மும்பையில் உள்ள எஸ்.பி.ஐ. மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

### 26 நாட்களாக என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?

எல்லாம் ஒரே இடத்தில் தானே இருக்கிறது. தேர்தல் பத்திரங்களை வெளியிடுவது தொடர்பாக மிக எளிமையான ஒரு உத்தரவை தான் எஸ்.பி.ஐ. வங்கிக்கு கொடுத்தோம் அதனை பின்பற்றுவதற்கு கால அவகாசம் கோருவது ஏன்? தேர்தல் பத்திர விவகாரத்தில் உத்தரவு பிறப்பித்து 26 நாட்கள் ஆகிறது இந்த 26 நாட்களாக என்ன செய்து கொண்டு இருந்தீர்கள்?

தேர்தல் பத்திர விவரங்களை எளிதாக எடுக்க முடியுமே. அப்படி இருக்கும் பொழுது அதன் தகவல்களை கொடுப்பதில் எஸ்.பி.ஐ. வங்கிக்கு என்ன சிரமம் இருக்கப் போகிறது. எங்களுக்கு புரியவில்லை.. உங்களுக்கு இதில் என்ன பிரச்சினை எஸ்.பி.ஐ. வங்கியால் செய்ய முடியாத வேலையை ஏதும் நாங்கள் கொடுக்கவில்லை. ஏற்கனவே நீங்கள் செய்து கொண்டிருக்கும் வேலையைதான் நாங்கள் வழங்கி இருக்கிறோம். சரியாக அவகாசம் முடியும் 2 நாட்களுக்கு முன் வீம்பிற்கு புதிய மனு தாக்கல் செய்தது ஏன்?, என உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சரமாரியாக கேள்வி எழுப்பினார்.

மார்ச் 12 ஆம் தேதிக்குள் தேர்தல் பத்திர விவரங்களை வெளியிட வேண்டும் என்று எஸ்.பி.ஐ.க்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இன்று (மார்ச் 12) மாலை வரைதான் டைம். அதற்குள் பத்திரங்களை வெளியிடுங்கள் என்று எஸ்.பி.ஐ.க்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

---

# ஒன்றிய அரசு மாநிலங்களை - மொழி - இன - பண்பாட்டை அழிக்கிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

'முதல்வரின் முகவரி திட்டம்', 'மக்களுடன் முதல்வர் திட்டம்' ஆகியவற்றின் மூலமாக 23 லட்சத்து 9 ஆயிரம் பேர் பயனடைந்திருக்கிறார்கள்.

இந்த திட்டங்களின் பயன்கள் எல்லாம் முறையாக சென்று சேருகிறதா என்று உறுதிசெய்ய இப்போது "நீங்கள் நலமா? திட்டத்தைத் தொடங்கி வைத்து, நானே மக்களிடம் பேசிக் கொண்டிருக்கிறேன்.

**மக்களின் குறைகளுக்கு உடனுக்குடன் தீர்வு!**

மக்களின் குறைகளை தீர்த்து வைப்பதற்காக இப்படி அடுத்தடுத்து திட்டங்களை அறிவித்து, உடனுக்குடன் தீர்வு காணுகின்ற அரசுதான், இந்த திராவிட மாடல் அரசு! என்பதை பெருமையோடு நான் கம்பீரமாக சொல்ல விரும்புகிறேன். அதனால்தான், இந்த அரசை மக்களின் மனச்சாட்சி என்று சொன்னேன்.

இப்படி மகளிர் – மாணவர்கள் – இளைஞர்கள் – முதியோர் –உழவர்கள் – உழைப்பாளர்கள் என்று தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு குடும்பமும் பயனடைகின்ற வகையில் திட்டங்களை பார்த்து பார்த்து செயல்படுத்தி வருகிறோம்.

இப்படி எந்த அரசாவது செயல்பட்டதா? பத்தாண்டுகளாக தமிழ்நாட்டையே சுரண்டினார்களே, அவர்களால், இப்படியெல்லாம் ஏதாவது ஒரு திட்டத்தை நிறைவேற்ற முடிந்ததா?

உங்களுக்காக பாடுபட முடிந்ததா? அவர்களால் இப்படி பட்டியலிட முடியுமா? முடியாது! ஏனென்றால், இந்த தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மக்களுக்கான ஒகேனக்கல் திட்டத்தையே முடக்கியதுதான் அ.தி.மு.க. ஆட்சியின் சாதனை! சாதனைதான் இல்லையென்றால், அவர்களால் ஏற்பட்ட வேதனை உங்களுக்கே நன்றாக தெரியும்!

வேளாண் கல்லூரி மாணவிகளின் குடும்பத்துக்கு ஏற்பட்ட வேதனையை மீண்டும் விரிவாக நான் இங்கே சொல்ல விரும்பவில்லை! உங்களுடைய திராவிட மாடல் அரசு ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டே இருக்கிறது!

**தருமபுரி மாவட்டத்துக்கான திட்டங்களின் பட்டியல்!**

தருமபுரி மாவட்டத்துக்கான திட்டங்கள் சொல்ல வேண்டும் என்றால், முத்தமிழறிஞர் கலைஞர் அமைத்த 'வள்ளல் அதியமான் கோட்டம்' 1 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு திறக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் போராட்ட தியாகி சுப்பிரமணிய சிவாவுக்கு தலைவர் கலைஞர் மணிமண்டபம் எழுப்பினார். அந்த தியாகியின் விருப்பமான பாரத மாதா நினைவாலயம் இந்த தனயனின் ஆட்சியில்தான் திறக்கப்பட்டது!

அரசு தருமபுரி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்–ஒருங்கிணைந்த பேறுகால அவசர கிசிச்சை மற்றும் சிசு தீவிர கிச்சை பராமரிப்பு மையத்தை திறந்து வைத்திருக்கிறேன்.

பேருந்து வசதியே இதுவரை இல்லாத 8 மலைக் கிராமங்கள் பயன்பெற வத்தல்மலைக்கு முதன்முதலாக புதிய பேருந்து கடந்த ஆண்டு தொடங்கி வைத்தேன்.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகள் 7 ஆயிரத்து 890 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும்.

17 கோடியே 58 லட்சம் ரூபாய் செலவில் ஒகேனக்கலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்காக பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

தருமபுரியில், கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடப் பணிகள் முடிவடைய போகிறது.

மொரப்பூர் – தருமபுரி புதிய அகல ரயில் பாதைக்கு நில எடுப்புப் பணிகள் நடைபெறுகிறது.

இதேமாதிரி, கிருஷ்ணகிரி மாவட்டத்துக்கு சொல்ல வேண்டும் என்றால், மூன்றாண்டுகளில், ஊரக வளர்ச்சித் துறை மூலம் குடியிருப்புகள், ஊரக உட்கட்டமைப்பு பணிகள், ஓசூர் மாநகராட்சி, கிருஷ்ணகிரி நகராட்சி, பல்வேறு பேரூராட்சிகளுக்கு உட்கட்டமைப்பு பணிகள், பொதுப்பணித்துறை கட்டடங்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகள் என்று 927 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளும் – திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று மகிழ்ச்சியோடு நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## மாநில அரசிடம் பணம் பெற்றுத்தான் - தன்னுடைய ஸ்டிக்கரை ஒட்டிக் கொள்கிறார் பிரதமர்!

அடுத்த, சேலம் மாவட்டத்துக்கான பணிகள் சொல்லவேண்டும் என்றால், ஏற்கனவே சீலநாயக்கன்பட்டியில் நடந்த அரசு விழாவில் 1,242 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டங்களை அறிவித்தேன். அதுமட்டுமில்லாமல், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் மினி டைடல் பூங்காவுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன்.

அரியாகவுண்டம்பட்டியில் கொலுசு உற்பத்தியாளர்களுக்கான பன்மாடி உற்பத்தி மையத்துக்கான பணிகள் நடந்து கொண்டு இருக்கிறது.

ஜாகீர் அம்மாபாளையத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்க போகிறோம்.

சேலம் அரசு சட்டக் கல்லூரிக்கான விடுதிகளுடன் கூடிய நிரந்தரக் கட்டடத்தையும் – ஈரடுக்கு பேருந்து நிலையத்தையும் திறந்து வைத்திருக்கிறேன்.

போடிநாயக்கன்பட்டி ஏரி, அல்லிக்குட்டை ஏரி, மூக்கனேரி ஆகியவை புனரமைக்கப்பட்டிருக்கிறது.

பொதுமக்களின் நீண்ட கால கோரிக்கைய ஏற்று, அம்மாப்பேட்டை பகுதியில் இரயில்வே மேம்பால பணிகள் நடந்து கொண்டிருக்கிறது.

இதன் தொடர்ச்சியாகதான், இந்த நிகழ்ச்சி மூலமாக தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மாவட்டங்களுக்கு 560 கோடியே 23 இலட்ச ரூபாய் மதிப்பிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்திருக்கிறேன்.

8 ஆயிரத்து 736 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியிருக்கிறேன்.

**இன்னும் சில முக்கிய அறிவிப்புகள் வெளியிட விரும்புகிறேன்.**

**வெண்ணாம்பட்டி சாலையையும், தருமபுரி மாநில நெடுஞ்சாலையையும் இணைக்கின்ற வகையில் பாரதிபுரத்தில் 36 கோடியே 15 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.**

**வாச்சாத்தி முதல் கலசப்பாடி வரையிலான மலைப்பகுதிகளில்**

**12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை அமைக்கப்படும்.**

**தருமபுரி மாவட்டத்தில் ஐந்து சமுதாய நலக்கூடங்கள் நான்கு கோடியே நான்கு லட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

**வாச்சாத்தி கொடுமையை யாரும் மறந்திருக்க மாட்டீர்கள்! எந்த ஆட்சியில் நடந்தது என்றும் மறந்திருக்க மாட்டீர்கள்! ஆனால், பாதிக்கப்பட்ட பழங்குடியின மக்களுக்கு திராவிட மாடல் ஆட்சியில்தான் விடியல் பிறந்திருக்கிறது.**

**பாதிக்கப்பட்ட 18 நபர்களுக்கு தலா 10 லட்ச ரூபாய் என்று மொத்தமாக 1 கோடியே 80 லட்சம் ரூபாய் நிதியுதவியாக வழங்கப்பட்டிருக்கிறது. மற்ற வேலைவாய்ப்புகளும் விரைவில் வழங்கப்படும்.**

**இப்போது கிருஷ்ணகிரி மாவட்டத்துக்கான அறிவிப்புகளை வெளியிடுகிறேன்...**

**தொழிலாளர்கள் நிறைந்த ஓசூர் மற்றும் அதை சுற்றி இருக்கின்ற பகுதிகளில், அவர்களுடைய நலனுக்காக, நடமாடும் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தப்படும்.**

**கிருஷ்ணகிரி மாவட்ட மைய நூலகத்துக்கு 50 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் அமைக்கப்படும்.**

**தளி ஊராட்சி ஒன்றியத்தில் 10 கிலோ மீட்டருக்கு சாலை உட்பட, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 75 சாலைகள் சுமார் 78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 92 சாலைகள், 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 28 சிறுபாலங்கள் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**தேன்கனிக்கோட்டை வட்டத்தில் யானை தாக்குதலில் இருந்து மக்களை காப்பாற்ற 10 கிலோ மீட்டர் தூரத்துக்கு 3 கோடியே 50 லட்ச ரூபாய் செலவில் எஃகு கம்பி கயிறு வேலி அமைக்கப்படும்.**

**கெலமங்கலம் அரசு பல்தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் 100 மாணவர்கள் தங்கும் வகையில், 'புதிய பிற்படுத்தப்பட்டோர் நல பல்தொழில்நுட்ப கல்லூரி மாணவர் விடுதி' தொடங்கப்படும்.**

**கிருஷ்ணகிரி மாவட்டத்துல 3 சமுதாய நலக்கூடங்கள்**

**2 கோடியே 35 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

**கிராமப்புற பகுதிகளில், 5 துணை சுகாதார மையக் கட்டடங்களும், நகர்ப்புறத்தில், 2 துணை சுகாதார மையக் கட்டடங்களும் 3 கோடியே 15 லட்ச ரூபாய் செலவில் கட்டப்படும்.**

**உனிச்செட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 30 லட்ச ரூபாய் மதிப்பீட்டில், பழங்குடியினருக்கான புதிய பிறப்பு காத்திருப்பு கூடம் அமைக்கப்படும்.**

**கிருஷ்ணகிரி மருத்துவக் கல்லூரியில் சத்துணவு மற்றும் மறுவாழ்வு மையம் 25 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.**

**ஊராட்சி ஒன்றியங்களில், 30 பொது விநியோக அங்காடிகள் 28 அங்கன்வாடி மையங்கள் 9 கோடியே 26 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

**வன விலங்குகளுக்கு தண்ணீர் கிடைக்க ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் நீர்நிலைகள் தூர்வாரும் திட்டம் தொடங்கப்படும்.**

**அடுத்து, சேலம் மாவட்டத்துக்கான அறிவிப்புக்களை வெளியிடுகிறேன்.**

**210 கிலோ மீட்டர் நீளத்தில் 79 கிராமச் சாலைகள், 21 உயர்மட்டப் பாலங்கள், 127 கிலோ மீட்டருக்கு 211 ஓரடுக்கு கப்பி சாலைகள்,**

**76 கிலோ மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் சாலை, 47 கிலோ மீட்டர் நீளத்துக்கு பேவர் பிளாக் அமைக்கும் பணிகள் ஆகியவை, 164 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**செட்டிசாவடி வளாகத்தில் இருக்கின்ற குப்பைமேடு 'பயோமைனிங்' அப்புறப்படுத்தும் பணிகள், 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**நங்கவள்ளி குடிநீர் நீரேற்ற நிலையம் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

**சேலம் மாவட்டத்தில் 14 சமுதாய நலக்கூடங்கள் 11 கோடியே**

**46 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

**சேலம் மாநகராட்சியில், தனி குடிநீர் திட்டத்தின்கீழ் உள்ள மோட்டார் பம்புகள் மற்றும் V.F.D-களை மறு சீரமைக்கும் பணி,**

**15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**தெரு நாய்களால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பை தடுக்க, 'விலங்கு பிறப்பு கட்டுப்பாடு மையம்' கட்டும் பணி 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

இப்படி எப்போதும் உங்களுக்காகவே செயல்படுற அரசுதான், நம்முடைய திராவிட மாடல் அரசு!

**மாநிலங்களை அழிக்க நினைக்கும் பா.ஜ.க. அரசு!**

அனைத்து மாவட்டங்களையும் சமமாக மதித்து நாம் செயல்படுகிறோம். ஆனால், ஒன்றிய பா.ஜ.க அப்படி மாநிலங்களை சமமாக நினைக்கின்றதா?

ஒன்றிய அரசு என்றால், எல்லா மாநிலங்களையும் மதிக்கணும்! வளர்க்கணும்! ஆனால், இன்றைக்கு ஒன்றியத்தை ஆளுகின்ற அரசு அப்படி செயல்படவில்லை!

மாநிலங்களையே அழிக்க நினைக்குது. மாநிலங்களை அழிக்கிறது மூலமாக நம்முடைய மொழியை – இனத்தை – பண்பாட்டை அழிக்கப் பார்க்கிறது.

மாநிலத்தின் வளர்ச்சிக்கு மிக மிக முக்கியமானது நிதி. அந்த நிதி ஆதாரத்தை பறிப்பது மாநில வளர்ச்சிக்கான ஆக்சிஜனை நிறுத்துகின்ற மாதிரி! அதைத்தான் இப்போது செய்து கொண்டு இருக்கிறார்கள்.

மாநிலங்கள் ஒன்றிணைந்ததுதான் ஒன்றிய அரசு! இதை உணராமல் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

தேர்தல் நெருங்கி வருகிறது! மாண்புமிகு பிரதமரும் அடிக்கடி சுற்றுப்பயணம் வருகிறார்! இந்த சுற்றுப்பயணங்களைப் பற்றி தமிழ்நாட்டு மக்கள் என்ன நினைக்கிறார்கள். இதை வெற்றுப் பயணங்களாகதான் பார்க்கிறார்கள். இதை சுற்றுப்பயணமாக பார்க்கவில்லை. இந்த பயணங்களால் ஏதாவது வளர்ச்சித் திட்டங்கள் இருக்கிறதா?

2019ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டிய மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கே இப்போதுதான் கட்டுமானப் பணியை தொடங்கப் போவதாக நாடகம் நடத்துகிறார்கள். தேர்தல் முடிந்ததும் நிறுத்திடுவார்கள்.

தேர்தல் வருகிறது என்று சிலிண்டர் விலையை குறைத்ததுபோல அறிவிக்கிறார் பிரதமர்.

10 ஆண்டுகளாக 500 ரூபாய்க்கும் மேல உயர்த்திட்டு, இப்போது 100 ரூபாய் மட்டும் குறைக்கிறது, அப்பட்டமான மோசடி வேலையில்லையா இது? இதைவிட மக்களை ஏமாற்றுகிற செயல் இருக்க முடியுமா?

சென்னையில் வெள்ளம் வந்தபோது, பாதிக்கப்பட்ட மக்களை பார்க்க வராத பிரதமர் மோடி தூத்துக்குடியில் வெள்ளம் வந்தபோது பாதிக்கப்பட்ட மக்களை பார்க்க வராத பிரதமர் மோடி இப்போது மட்டும் அடிக்கடி வருகிறாரே? என்ன காரணம்? தேர்தல் வரப் போகிறது. ஓட்டு கேட்டுதான் வருகிறார் என்று மக்களுக்குத் தெரியும்.

'தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சி நிதியை கொள்ளையடிக்க நான் விடமாட்டேன்' என்று சொல்லி இருக்கிறார் பிரதமர் அவர்கள்.

தமிழ்நாட்டுக்கு அவர் என்ன வளர்ச்சி நிதியை கொடுத்திருக்கார்?

ஜி.எஸ்.டி வரி இழப்பீட்டு நிறுத்தியதால், தமிழ்நாட்டுக்குச் சேர வேண்டிய 20 ஆயிரம் கோடி ரூபாய் கிடைக்கவில்லை.

வெள்ள நிவாரணமாக நாம் கேட்ட 37 ஆயிரம் கோடிய தரவில்லை.

மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு பணம் தரவில்லை, ஒப்புதலும் வழங்கவில்லை.

பிரதமர் வீடுகட்டும் திட்டத்துக்கு முக்கால் பங்கு பணம் தருவது மாநில அரசுதான்.

வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்குகிறற ஜல்ஜீவன் திட்டத்துக்கு மாநில அரசின் பங்களிப்பு 50 விழுக்காடு.

இதை எல்லாம் வைத்து பார்க்கும் போது மாநில அரசிடம் பணம் வாங்கித் தான் தன்னுடைய ஸ்டிக்கரை பிரதமர் ஒட்டிக் கொள்கிறார் என்று அவருக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

இன்னும் கேட்கவேண்டும் என்றால், ஒன்றிய அரசுக்கு வரி வருவாய் எங்கே இருந்து வருகிறது? மாநிலங்களின் வரியாக இருந்தாலும், ஒன்றிய வரியாக இருந்தாலும் மாநிலங்களில் இருக்கின்ற மக்கள் கொடுக்கின்ற வரிதான்!

வெறும் கையால் முழம் போடுவது என்று சொல்லுவார்கள். அதுபோல, தமிழ்நாட்டுக்கு வந்து வெறும் கையால் முழம் போட்டுக் கொண்டு இருக்கிறார் நம்முடைய பாரதப் பிரதமர் மோடி அவர்கள். தேர்தல் நேரத்தில் மட்டும்தான் பிரதமருக்கு மக்கள் மேல பாசம் பொங்கும்... இதை தமிழ்நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். ஆனால், நாங்கள் உங்களுடன் இருக்கிறோம். மக்களான நீங்கள் எங்களோடு இருக்கிறீர்கள்.

மக்களும், அரசும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஒரே குடும்பமாக செயல்பட்டு வருகிறோம். இதைத்தான் குடும்ப ஆட்சி என்று விமர்சிக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் நடப்பது கோடிக்கணக்கான குடும்பங்களின் நலனுக்காக நடக்கின்ற ஆட்சி தான் இது! அதனால்தான் உங்கள் குடும்ப விழாவுக்கு வருகின்ற மாதிரி நீங்கள் எல்லாம் இங்கு உரிமையுடன் வந்திருக்கிறீர்கள்.

இதே உணர்வோடும், வளமோடும், நலமோடும் வாழ்வோம்! தமிழ்நாட்டையும் வாழ வைப்போம்! இந்தியாவுக்கும் வழிகாட்டியாக நாம் மாறுவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# மோடி வடித்த முதலைக் கண்ணீர்!

**நயா பைசாவுக்குப் பிரயோஜனம் இல்லை!**

நான், அலுவலகத்தை விட்டு இறங்கும் போது, அந்தச் சாலை முழுவதும் தண்ணீர். கால் முழுமையாக நனைந்து விட்டது. அப்புறம் ஏறின பிறகு தான் என்ன வென்று கேட்டால்? மழையும் பெய்யவில்லை வேறு எந்தக் குழாயும் உடையவில்லை, அது 'முதலைக் கண்ணீர்' என்று சொன்னார்கள்.

ஒரு நாற்பது பேர் வரை இறந்து போய் இருக்கிறார்கள். அமைச்சர்கள் களத்தில் நின்றார்கள். அதிகாரிகள் களத்தில் நின்றார்கள். ஒரு வேளை சோற்றுக்கு வாய்ப்பில்லாத ஒரு மனிதன் கூட, வெள்ளத்தின் காரணமாக சாப்பாடு இல்லாதவர்களுக்கு கொண்டு போய் சோறு கொடுத்ததைப் பார்த்திருக்கிறோம். அதைப் பற்றி ஒரு வார்த்தையும் பேசாத ஒரு மனிதர். தேசிய பேரிடர் கூட்டணியின் தலைவராக இருக்கக் கூடிய மோடி, வெள்ளப் பாதிப்புக்கு இன்றைக்கு தமிழ்நாடு அரசாங்கம் ஒன்றுமே செய்ய வில்லை என்று பேசுகிறார். அவர் வடித்த கண்ணீர் தான் 'முதலைக் கண்ணீர்'. அது ஒரு நயா பைசாவுக்கும் பிரயோசனப்படாது.

இந்த இடைப்பட்ட காலத்தில் உத்தரப்பிரதேசத்தில் ஒரு டிராக்டரில் சென்றவர்கள் அந்த டிராக்டர் கவிழ்ந்து, 22 பேர் இறந்து போனார்கள். உடனடியாக நிவாரணம் அறிவிக்கப்படுகிறது. குஜராத் வெள்ளத்திற்கு நிவாரணம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்நாட்டிற்கு ஒரு நயா பைசாவும் கொடுக்காத இவர் நமக்காக 'கண்ணீர் வடித்தார்' என்றால் அது 'முதலைக் கண்ணீரை' தவிர வேறு ஒன்றுமில்லை.

**நண்பருக்காக வருகிறார்...**

சென்னை மெட்ரோ, விமான நிலையம் மாதிரியான பெரிய திட்டம் 1000 கோடி ரூபாய் மதிப்பில் நகர்ப்புற மேம்பாட்டு திட்டங்களை சென்னைக்கு கொடுத்து இருப்பதாக மோடி பேசிகிறார். மெட்ரோ ரயில் இரண்டா வது கட்டத்திற்கு அவர் பணம் கொடுக்கவில்லை. தமிழ்நாடு அரசாங்கம் தான் இப்போது வரை பணம்கொடுத்துக் கொண்டு இருக்கிறது.

ஒரு பொய்யைப் பேசுவதற்காக ஒரு மனிதர் அங்கே இருந்து இங்கே வருகிறார், நமது செலவில். விமான நிலையம் விரிவாக்கத்திற்கு நிறைய காசு அவர் கொடுப்பார். அவர் அதனை அதானிக்குத் தான் விற்கப்போகிறார். 6 விமான நிலையங்களை ஏற்கனவே அவர் அதானிக்குத்தான் விற்றார். தன்னுடைய நண்பருக்காக கொடுப்பதற்காக - அதனைச் செய்திருக்கிறாரே தவிர வேறு ஒன்றுமில்லை.

**மதவெறி எனும் பெரும் போதை**

போதைப் பொருள் மொத்த விற்பனை வியாபாரியே மோடி தான். எப்படி? மதவெறி எனும் போதைப் பொருள் விற்பனை வியாபாரி. இந்தியா முழுவதும் அதைத்தான் அவர் செய்து கொண்டு இருக்கிறார். எந்தப் போதையால் நாடு அழியும் என்றால், மிகப் பெரிய போதை, மதவெறியை ஏற்றுவது தான்.

**டபுள் என்ஜின் மோசடி**

மோடி இப்போது நிறையப் பேசுகிறார். ஆன்லைனில் பணம் பரிவர்த்தனை செய்தால் மோசடி நடக்காதாம். அவர்களுடைய டபுள் என்ஜின் சர்க்கார் இருக்கக் கூடிய குஜராத், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், அசாமில் மோசடியின்றி ஏதேனும் நடந்துள்ளதா?

அசாம், தமிழ்நாட்டை விட சிறிய மாநிலம். ஆன் லைனில், மக்களுக்கு வருடத்திற்கு 6 ஆயிரம் ரூபாய் போடுவோம் என்ற திட்டத்தின் மூலம் 8 இலட்சத்து 35 ஆயிரம் போலி கணக்குகளில் பணம் போடப் பட்டுள்ளது. இதற்காக மோடி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.அசாம் முதலமைச்சர் விசார ணைக்கு உள்ளாக்கப்படவேண்டும். இவர்கள் இதனை எல்லாம் செய்ய மாட்டார்கள்.

குஜராத்தில் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்டோருக்கு, உத்தரப்பிரதேசத்தில் இரண்டு லட்சத்து 65 ஆயிரம் பேருக்கு, மத்தியப் பிரதேசத்தில் இரண்டு லட்சத்து 51 ஆயிரம் பேருக்கு அசாமில் 8 இலட்சத்து 35 ஆயிரம் பேருக்கு மொத்தம் இந்தியா முழுவதும் 42 லட்சம் பேருக்கு என மூவாயிரம் போலியான நபர்க ளுக்கு, கோடி ரூபாயை நமது வரிப்பணத்தை தன்னுடைய கூட்டாளிகளுக்கு தெரிந்தே 'டபிள் என்ஜின் சர்க்கார்' என்று வைத்துக் கொண்டு கொடுத்தவர் மோடி.

ஒரே ஒரு பேங்க் அக்கவுண்டில், ஏழரை இலட்சம் பேர்களுக்கு ஆயுஷ்மான் பாரத் நோயாளிகளுக்குக் கொடுத்த பணத்தை திருடியது யார்? இதனை நாம் சொல்லவில்லை சி.ஐ.ஜி.கேட்கிறது. இன்றைக்கு வரைஅந்தக் குற்றவாளிகளை எங்கே கொண்டு வந்து வைத்து இருக்கிறீர்கள்?

**கடல் அளவு பொய்**

தூத்துக்குடியில் துறைமுக விரிவாக்கம் 2013 இல் நிதி அமைச்சராக ப.சிதம்பரம் இருந்த போது அறிவித்தது. 2014 இல் ஐ.மு. கூட்டணியில் இப்போது இருக்கின்ற ஜி.கே. வாசன் கப்பல் போக்குவரத்து அமைச்சராக இருந்த போது திட்ட அறிக்கை வெளியிட்டார் ஜனவரியில். 2014 ல் அருண் ஜெட்லி அதற்கு பணமும் ஒதுக்கினார். அதற்குப் பிறகு பத்து வருடமாக அந்தத் திட்டத்தை கிடப்பில் போட்டவர் நரேந்திர மோடி. இப்போது அதே தூத்துக்குடிக்கு வந்து இதனை நாங்கள் தான் செய்தோம் என்று சொல்கிறார். அந்தப் பொய்யை என்ன சொல்வது?

**நம்பர் ஒன் குஜராத்**

பிப்ரவரி 28 ஆம் தேதி'எக்னாமிக் டைம்ஸ்' பத்திரிகையில் வந்திருக்கும் செய்தி ஒன்று... 3300 கிலோ, 3.3 டன் போதைப் பொருள் குஜராத்தில் பிடிக்கிறார்கள். அதில் ஐந்து வெளிநாட்டு நபர்களை பிடிக்கிறார்கள். அதன் மதிப்பு இரண்டாயிரம் கோடி ரூபாய்.

நரேந்திர மோடிக்கு இந்திய நாட்டின் இளைஞர்கள் மீது உண்மையிலேயே அக்கறை இருந்தால், போதைப் பொருள் பிடிபட்ட குஜராத்தில் போய் கோபத்துடன் பேசியிருக்க வேண்டும் அல்லவா?

ஒரு பிரதமர் என்கிற முறையில், இந்த நாட்டில் போதைப் பொருட்களை நான் அனுமதிக்க மாட்டேன் என்று சொல்ல வேண்டும். இந்தியாவில் இது வரை அதிகமாக எங்கேயாவது போதைப் பொருட்கள் பிடிபட்டு இருக்கிறது என்று சொன்னால், அவரே சொன் னார் 5 சதவிகிதம் தான் பிடிபடுகிறது, அந்த 5 சதவிகி தத்திலே இந்தியாவில் நம்பர் ஒன் மாநிலம் எது என்றால் குஜராத்.

எனவே போதைப் பொருள் வியாபாரிகளை வைத்து இருப்பவர்கள் பா.ஜ.க.வினர் தான்.

**எல்லாமே திருட்டுத்தனம்**

2014 பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் 12 இடங்களில் வெளிப்படைத்தன்மை என்கிற வார்த்தையை உபயோகித்து இருப்பார்கள். 2019 இல் 10 இடத்தில் வெளிப்படைத்தன்மை என்கின்ற வார்த்தையை உபயோகித்து இருப்பார்கள். இப்படி யாருமே சொல்லவில்லை.



**க.கனகராஜ்**
மார்க்சிஸ்ட்
மாநில செயற்குழு
உறுப்பினர்

இப்படி எழுதி வைத்துக் கொண்டு தேர்தல் பத்திர விவகாரத்தில் திருட்டுத்தனம். பி.எம்.கேர்ஸில் திருட்டுத் தனம். வெளிநாட்டில் இருந்து அரசியல் கட்சி பணம் வாங்கக் கூடாது என்பதில் திருட்டுத் தனம். இதை எல்லா வற்றையும் மறைப்பதற்கு ஒரு சட்டத்தை மாற்றுவது.

நீங்கள் ஒரு விரலை மற்றவர்களை நோக்கி நீட்டு கின்ற போது, உங்களை நோக்கி நான்கு விரல்கள் நீள்கிறது என்கின்ற உண்மையை உணராதவர்கள் பா.ஜ.க.வினரும், மோடியும்.

**யோக்கியதை என்ன?**

தர்மபுர ஆதினம் சாதாரண ஆள் இல்லை. செங்கோலை எடுத்துக் கொண்டு போய் மோடியைச் சந்தித்த பெரிய ஆள். அப்படிப்பட்டவரிமே பா.ஜ.க.வினர்போய் ஆபாச வீடியோ வெளியிடுவேன் என்று மிரட்டிக் காசு பார்க்கிறார்கள் என்றால் பா.ஜ.க.வினரின் யோக்கியதாம்சம் தான் என்ன? இந்தப் பிரச்சினையில், இதுவரை அவர்கள் எடுத்த நடவடிக்கை தான் என்ன? பா.ஜ.க.வினரிடம் அதற்குப் பதில் இல்லை.

**நன்றி: தீக்கதிர்**
**11.03.2024**



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர் அமைச்சசர் கே.என்.நேரு ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற தூத்துக்குடி மக்களவை தொகுதிக்கான கழக வேட்பாளர் நேர்காணலில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கலந்து கொண்டார். உடன் மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் கீதாஜீவன், அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் உள்ளனர்.

### சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்

# சிங்கம்புணரி ஒன்றியப் பகுதிகளில் முடிவுற்ற பணிகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார்!

*சிங்கம்புணரி, மார்ச். 12-* தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சிறப்பான ஆட்சியில் சிங்கம்புணரி ஒன்றியபகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் முடிவுற்ற பணிகள் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் திறந்து வைத்தார்.

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஒன்றியத்துக்கு உட்பட்ட எம் சூரக்குடி, கோழி குடிப்பட்டி, கல்லம்பட்டி, முறையூர் உள்ளிட்ட ஊராட்சிகளில் பயணியர் நிழற்குடை, கலையரங்கம் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் ஆகியவற்றின் திறப்பு விழா நடைபெற்றது. திறப்பு விழா நிகழ்ச்சிக்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரியகருப்பன் தலைமை ஏற்றார்.

சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு வழங்கியுள்ள நிதியை பயன்படுத்தி மிகவும் நேர்த்தியான முறையில் பாதுகாப்பு அம்சங்களோடு எம் சூரக்குடி ஊராட்சிக்குட்பட்ட எம். சூரக்குடி கிராமத்தில் புதிய பயணியர்நிழற்குடை, கோழிக்குட்டி ஊராட்சிக்கு உட்பட்ட ஆறுகுடிபட்டி கிராமத்தில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் பயணியர் நிழற்குடை, கல்லம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கல்லம்பட்டி பேருந்து நிறுத்ததில் பயணியர் நிழற்குடை, மற்றும் கல்லம்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட புதுப்பட்டி யில் கலையரங்கம், முறையூர் ஊராட்சியில் முறையூர் கிராமத்தில் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் போன்றவைகள் அரசு விதியின் கீழ் முதல்வர் ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சிறப்பாக கட்டி முடிக்கப்பட்டு அதன் திறப்பு விழா நடைபெற்றது திறப்பு விழாவிற்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டு குத்துவிளக்கு ஏற்றி வைக்கப்பட்டது தொடர்ந்து அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசுகையில் .....

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற கடந்த இரண்டரை ஆண்டுகளில் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தி, பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியான முதலமைச்சராக திகழ்ந்து வருகிறார்கள்.

பொதுமக்களுக்கு அரசின் நலத்திட்டங்களை வழங்கிவருவது மட்டுமன்றி, தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் பொது மக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை கட்டமைப்புக்களை மேம்படுத்திடும் பொருட்டு, அதற்கான செயல் திட்டங்களையும் அறிவித்து , அதனடிப்படையில் தமிழகத்தின் அனைத்து பகுதிகளி லும் அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும், பாராளுமன்ற, சட்டமன்ற மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் பல்வேறு நிதியின் கீழ் பல்வேறு வளர்ச்சி பணிகள் மாவட்ட முழுவதும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிவகங்கை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம், கோழி குடிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட ஆறுகுடிபட்டி கிராமத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.06.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட பயணியர் நிழற்குடை, கல்லம்பட்டி ஊராட்சி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.06.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட பயணியர் நிழற்குடை மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.08.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கலையரங்கம், முறையூர் ஊராட்சி பகுதியில் ரூ.25.99 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம்,

எம். சூரக்குடி ஊராட்சிக் குட்பட்ட சூரக்குடி கிராமத்தில் 20212022ம் ஆண்டு தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.07.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட பயணியர் நிழற்குடை என சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் பொது மக்களின் பயன்பாட்டிற்கென திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று, அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்களை தொலைநோக்கு பார்வையுடன் முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக செயல்படுத்தி, தனது நிர்வாக திறமையால் தமிழகத்தினை முன்னேற்ற பாதையில் சிறப்பாக வழிநடத்தி செல்கிறார்கள்.

மேலும், பொதுமக்கள் தங்களது தேவைகளை அந்தந்த பகுதிக்குட்பட்ட மக்கள் பிரதிநிதிகள் வாயிலாக எடுத்துரைத்து, தங்களின் வாழ்வாதாரம் முன்னேற்றத்திற்கும் மற்றும் தங்களது பகுதியின் மேம்பாட்டிற்கும் அடிப்படையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

எம் சூரக்குடி ஆறு குடி பட்டி கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள பயணியர் நிழற்குடை கிரானைட் கற்கள் பதிக்கப்பட்டு மிகவும் நேர்த்தியான முறையில் பாதுகாப்பு அம்சங்களோடு ஆண் பெண் இருபாலர்களுக்கும் தனித்தனியான இருக்கைகள் மாற்றுத் திறனாளிகள் பாதுகாப்புகளுடன் பயணியர் நிழற்குடைக்குச் செல்லும் வழிகள், இரவு நேரங்களில் ஒளிரக்கூடிய சோலார் மின் விளக்குகள் என பொதுமக்களின் நலன் பாதுகாப்பை கருத்தில் கொண்டு சிறப்பான முறையில் கட்டிய ஒப்பந்தக்காரர் சிங்கம் புணரி நகர அவை தலைவருமான சிவக்குமார் ரெங்கநாதனுக்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வாழ்த்துக்களை தெரிவித்தார். வருங்காலங்களில் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இதே போன்று பயணியர் நிழற்குடை அமைத்து பொதுமக்களுக்கு பயன்படும் படி அமைத்திட வேண்டும் என வாழ்த்துக்களை அவர் தெரிவித்தார். மேலும் முறையூர் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தை திறந்து வைத்து குத்து விளக்கு ஏற்றி ஊராட்சி மன்ற தலைவர் என்.எம். சுரேஷை அவர்களை தலைவர் இருக்கையில் அமர வைத்து கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வாழ்த்துத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட அவைத் தலைவர் கணேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் அம்பலமுத்து, சோமசுந்தரம், ஒன்றியச் செயலாளர்கள் பாலசுப்பிரமணியன், பூமி நாதன், சிங்கம் புணரி நகரச் செயலாளர் கதிர்வேல், நகர அவை தலைவர் சிவக் குமார், ஒன்றிய அவைத் தலைவர் ராசு, சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட துணைத் தலைவர் ஆனந்த கிருஷ்ணன், அயலக அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் புகழேந்தி, சிவசுப்பிரமணியன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் ஷீலா சொக்கநாதன், முத்துக் குமார், சிவபுரி சேகர், நகரத் துணைச் செயலாளர் அலாவுதீன், முறையூர் ஊராட்சி மன்ற தலைவர் என்.எம். சுரேஷ், எம் சூரக்குடி ஊராட்சி மன்றத் தலைவர் ஜெயமணி செல்லையா, கல்லம் பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் மெய்யப்பன், முறையூர் கிளைச் செயலாளர் கரு. கோபாலன், சாமியாடி சொக்கநாதன்,

ஒன்றிய பொருளாளர் பாஸ்கரன், நகர பொருளாளர் செந்தில் கிருஷ்ணன், ஒன்றிய இளைஞரணி மனோகரன், மாவட்டப் பிரதிநிதி செல்வகுமார், பிரதிநிதி குடோன்மணி, சூரக்குடி சிவா, அருண், ராஜா, சரவண பிரியன், பரிஞ்சி சரவணன், தி.மு.க. பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### போதைப் பொருள்:

# ஆளுநர் ரவி கேவலமான அரசியல் செய்வதா?

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி.,எஸ்.டி. பிரிவுத் தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார் கண்டனம்!

*சென்னை, மார்ச் 12-* "போதைப் பொருள் கடத்தல் குறித்து ஆளுநர் ரவி கேவலமான அரசியல் செய்வதா?" என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி., எஸ்.டி.பிரிவுத் தலைவர் எம்.பி.ரஞ்சன்குமார் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் எஸ்.சி., எஸ்.டி., பிரிவு தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

போதை தடுப்பு வழக்கில் ஜாபர் சாதிக் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் கைது செய்யப்பட்டதுமே தி.மு.க.விலிருந்து நீக்கப்பட்டார். கோடிக்கணக்கான தொண்டர்கள் கொண்ட ஒரு கட்சியில் ஒவ்வொருவரையும் ஸ்கேன் செய்தா சேர்க்க முடியும். இந்தச் சூழல் எல்லா கட்சிகளிலுமே உள்ளது. ஊழல்வாதிகள், கடத்தல் பேர்வழிகள், மோசடிப் பேர்வழிகளை தேடிச் சென்று கட்சியில் சேர்ப்பது பா.ஜ.க. மட்டுமே. கைது செய்யப்பட்டதுமே உடனே நடவடிக்கை எடுத்தது தி.மு.க.

இந்தச் சூழலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீதும் தி.மு.க. மீதும் இந்தியா கூட்டணி மீதும் களங்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் பா.ஜ.க.வும் அதன் அடிமை எடப்பாடியும், பா.ஜ.க. தலைவர் போல் செயல்படும் ஆளுநர் ஆர்.என்.ரவியும் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி பெண்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் இதயத்திலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இடம்பிடித்துள்ளார். இது எதிர்க்கட்சிகளுக்குப் பொறுக்கவில்லை. அதோடு அனைத்துத் தேர்தல் கணிப்புகளும் 40 இடங்களிலும் தி.மு.க. கூட்டணி வெல்லும் என்று கூறுகின்றன. இது பா.ஜ.க., அ.தி.மு.க.வுக்கு வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது.

இதன் காரணமாகவே அபாண்ட குற்றச்சாட்டை சுமத்தி வருகின்றனர். ஆர்.என்.ரவி ஏதோ தமிழ்நாட்டில் போதைப் பழக்கம் அதிகமாக ஏற்பட்டது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த முயல்கிறார். ஆளுநரே, முதலில் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் நடக்கும் போதை கடத்தலை தடுத்து நிறுத்துங்கள். அங்கிருந்து தான் நாட்டின் பிற பகுதிகளுக்கு விநியோகிக்கப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக போதைப் பொருள் கடத்தலின் தலைநகராக குஜராத் திகழ்கிறது. 2015 ஆம் ஆண்டு ராஜஸ்தானில் பஞ்சாப் பா.ஜ.க. தலைவராக இருந்த கமல் சர்மா என்பவர் ரூ.20 கோடி மதிப்புள்ள போதைப் பொருட்களைக் கடத்தி பிடிபட்டார்.

2019 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேசத்தில் பா.ஜ.க. எம்.பி. சம்பத்தியா உக்கேயின் மகன் சத்யேந்திரா வீட்டில் ரூ.12 கோடி மதிப்புள்ள போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

2020 ஆம் ஆண்டு சத்தீஸ்கரில் பா.ஜ.க. தலைவர் ரமேஷ் உஷேந்தி ரூ.10 கோடி மதிப்புள்ள போதைப் பொருட்களை கடத்தி சிக்கினார்.

2020 ஆம் ஆண்டு ஹரியானாவில் ரூ.10 கோடி மதிப்புள்ள போதை பொருட்களை கடத்தி பா.ஜ.க. மாவட்ட மாலைவர் ஜக் மோகன் லால் குமார், மகன் அமித் குமார் கைது செய்யப்பட்டார்.

2021 ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் பிரதமர் மோடியின் நெருங்கிய நண்பர் கவுதம் அதானி துறைமுகத்தில் ரூ.30 ஆயிரம் கோடி மதிப்புள்ள போதைப் பொருட்கள் சிக்கின.

மேற்கு வங்கத்தில் பாஜக தலைவர் பமீலா கோஸ்வாமி வீட்டில் ரூ.15 கோடி மதிப்புள்ள போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

2024 ஆம் ஆண்டு இமாச்சலப்பிரதேசத்தில் பா.ஜ.க. முன்னாள் முதலமைச்சரின் பேரன் சேத்தன் பார்மர் வீட்டில் ரூ.15 கோடி மதிப்புள்ள போதைப் பொருட்கள் சிக்கின.

போதைப் பொருள் கடத்தில் தொடர்புடைய பா.ஜ.க. தலைவர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இதுபோன்ற பா.ஜ.க. தலைவர்கள் தான் போதைப் பொருட்களை அனைத்து மாநிலங்களுக்கும் கடத்துகின்றனர். உண்மை இப்படியிருக்க ஆளுநர் ரவி பொய்யை உண்மையாக்கப் பார்க்கிறார். தைரியம் இருந்தால் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் நடக்கும் போதைக் கடத்தலைத் தடுத்து நிறுத்த அவரும் முயல வேண்டும்.

அப்படித் தடுத்து நிறுத்தினால் நாடு முழுவதும் விநியோகம் நின்று போகும். அதைவிடுத்து அமைதி மாநிலமாகத் திகழும் தமிழ்நாட்டில் குட்டையைக் குழப்பி மீன் பிடிக்க ஆளுநரும், எடப்பாடியும், அண்ணாமலையும் முயல்வது கேவலமான அரசியலன்றி வேறென்ன?

எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோதே அப்போதைய அமைச்சர் விஜயபாஸ்கர் மீதான குட்கா ஊழலை வெளிப்படுத்தியவர் இன்றைய முதலமைச்சர். எதிர்க்கட்சிகளின் தொடர் அழுத்தத்துக்குப் பிறகு அனுமதி கொடுத்தார் ரவி. விஜயபாஸ்கருக்கு ஆதரவாக செயல்பட்டு அனுமதி தராமல் இழுத்தடித்தது ஏன்? என்பதற்கு ஆளுநரிடம் பதில் இருக்கிறதா?

இவ்வாறு எம்.பி. ரஞ்சன் குமார் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**நன்னிலம் நடராசன்**
**மார்ச் 12 (2002)**



**நன்னிலம் கிளைக் கழகத்தைக் கட்டிக்காக்க செயலாளர் பொறுப்பினை ஏற்று இருபது ஆண்டுகள் நன்னிலம் வட்டத்தில் கழகம் ஆல்போல் வளர்த்தவர். கழகக் கொள்கைப் பரப்பு இணைச் செயலாளராக பணியாற்றியவர்.**

**தி.மு.கழகம் நடத்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல போராட்டங்களில் பங்கேற்றவர். நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.**

**இளமைப்பருவம் முதல் இறுதிநாள் வரை கழகத்தின் கொள்கை முழக்கம் செய்தவர். தன்னுடைய நகைச்சுவை பேச்சால் தமிழகத்தின் பட்டிதொட்டியெங்குமுள்ள கழகத் தோழர்களின் அன்பைப் பெற்றவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் 1991ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகச் சார்பில் "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## மகளிர்க்கு பாதுகாப்பு இல்லாத

# மோடி ஆட்சியை அகற்ற மகளிர் உறுதி எடுத்துக் கொள்வீர்!

## திண்டுக்கல்லில் - சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**திண்டுக்கல், மார்ச் 12–**

**"மகளிர்க்கு பாதுகாப்பு இல்லாத மோடி ஆட்சியை அகற்றிட மகளிர் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று கழகத் துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற மக்களவை கழகக் குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் திண்டுக்கல்லில் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது கூறினார்.**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிரணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில், 09 03 2024 அன்று திண்டுக்கல்லில் உள்ள அங்குவிலாஸ் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது :

"இப்போதெல்லாம் மகளிர் தினம் என்றால் ஜவுளிக்கடைகளில் டிஸ்கவுன்ட் போடுகிறார்கள். பாத்திரக்கடைகளில் தள்ளுபடி விற்பனை என்கிறார்கள். பூக்கடைகளில் கூட ஏதோ காதலர் தினம் போல மகளிர் தினத்திற்கு விளம்பரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

### மகளிர் தினம் என்றால் என்னவென்று மோடிக்குத் தெரியுமா?

நம்முடைய பிரதமர் மோடி பெண்கள் தினத்தை ஒட்டி இந்தியாவிலே இருக்கும் பெண்களுக்கு தந்திருக்க கூடிய பரிசு என்னவென்றால் கேஸ் சிலிண்டர் விலையை 100 ரூபாய் குறைத்து இருக்கிறார். சிலிண்டர் விலை ஆயிரம் ரூபாயை தாண்டி விட்டது. மானியம் தருகிறேன் என்று சொன்னார். ஆனால் யாருக்கும் மானியம் வரவில்லை.

இத்தனை வருஷமாக இழுத்தடித்து விட்டு தேர்தல் வரும் நேரத்தில் மகளிர் தின பரிசாக 100 ரூபாய் சிலிண்டர் விலையை குறைக்கிறார். ஏன் பெண்கள் மட்டும்தான் அந்த சிலிண்டரை பயன்படுத்த வேண்டுமா? சிலிண்டரை பயன்படுத்தி சமையல் கட்டிலேயே இரு. சிலிண்டரும் சமையல் கட்டும்தான் தான் உன் வாழ்க்கை என்று சொல்லாமல் சொல்கிறார் பிரதமர் மோடி.

பிரதமர் மோடிக்கும் மகளிர் தினம் என்றால் என்னவென்று தெரியாமல் இருப்பவர்களுக்கும் சேர்த்து நான் சொல்கிறேன். மகளிர் தினம் என்றால் பெண்களை சமையல் அறையில் அடைத்து வைக்கக்கூடிய தினம் இல்லை. நியூயார்க் நகர வீதிகளில் கிட்டத்தட்ட 15,000 பெண்கள் ஒன்று கூடி எங்களுக்கு நியாயமான வேலை நேரம் வேண்டும், எங்களுடைய உழைப்புக்கு நியாயமான சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று 15,000 மகளிர் ஒன்று திரண்டு போராடினார்கள். அந்த தினம் தான் மகளிர் தினமாக கொண்டாடப்படுகிறது.

தந்தை பெரியார், பெண்களின் கைகளில் இருக்கக்கூடிய கரண்டிகளை பிடுங்கி விட்டு அவர்களுக்கு புத்தகங்களை கொடுங்கள் என்று சொன்னார். அதை செய்யக்கூடிய தினம் தான் மகளிர் தினம்.. அதனால் கேஸ் சிலிண்டர் விலை குறைப்பதெல்லாம் மகளிர் தினம் இல்லை. அது மகளிரை இழிவுபடுத்தக்கூடியது.

### தமிழ்நாட்டு, இந்திய பெண்கள் ஏமாற மாட்டார்கள்!

தேர்தல் நேரத்தில் சிலிண்டர் விலையை 100 ரூபாய் குறைத்தால் எல்லா பெண்களும் நம்பி உங்களுக்கு ஓட்டு போடுவார்கள் என்று ஒரு கணக்கு. ஆனால் தமிழ்நாட்டுப் பெண்கள் இந்திய பெண்கள் இனி ஏமாற தயாராக இல்லை. அவர்களுக்கு தெரியும் பெண்களுக்காக நடத்தப்படக்கூடிய ஆட்சி எது? பெண்களின் முன்னேற்றத்திலே அக்கறை கொண்டிருக்க கூடிய கருத்தியல் எது? அது, தந்தை பெரியாரின் வழியிலே பேரறிஞர் அண்ணாவின் வழியிலே தலைவர் கலைஞரின் வழியிலே நடந்து கொண்டிருக்க கூடிய நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதியின் திராவிட மாடல் ஆட்சி தான் என்பதை தமிழ்நாட்டுப் பெண்கள் மட்டுமல்ல, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அத்தனை பெண்களும் உணர்ந்து இருக்கிறார்கள்.

### அஸ்ஸாம் வரை சென்ற மோடிக்கு மணிப்பூர் செல்ல ஏன் மனமில்லை?

இங்கே பேசியவர்கள் மணிப்பூர் பற்றி பேசினார்கள். இன்று செய்தித்தாளை பார்க்கும்போது பிரதமர் மோடி அசாம் சென்றிருக்கிறார் என்று தெரிந்தது. அங்கே யானை மேல் சவாரி செய்து கொண்டிருக்கிறார். இதுபோல சில நாட்களுக்கு முன்பு துவாரகா சென்றார். அங்கே ஸ்விம்மிங் சூட் எல்லாம் போட்டுக்கொண்டு தண்ணீருக்கு அடியில் தியானம் எல்லாம் செய்தார். அது அவருடைய நம்பிக்கை. அதைப்பற்றி நமக்கு எந்த பிரச்சினையும் இல்லை.

இத்தனை நாடுகளுக்கு இத்தனை நகரங்களுக்கு ஏன் அஸ்ஸாமுக்கு செல்லக்கூடிய பிரதமர் மோடிக்கு. அருகிலே இருக்கக்கூடிய மணிப்பூர் செல்ல மனமில்லை.

உங்களுடைய சாதி அரசியல், மத அரசியல் வெறுப்பால் மணிப்பூரில் நீங்கள் மூட்டிய தீ, நீங்கள் பிரித்தாண்ட அந்த மக்கள் இன்றுவரை படாத பாடு பட்டு கொண்டிருக்கிறார்கள். வீடு இல்லாமல் உணவு இல்லாமல் எதிர்காலம் என்னவென்றே தெரியாமல் அங்கே இருக்கக்கூடிய மக்கள், பெண்கள் தினம் தினம் அவதிப்பட்டு கொண்டிருக்கிறார்கள். அங்கே முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய பெண்களை நான் சந்தித்தேன். சாப்பாடு இல்லை, வயது முதிர்ந்தவர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள் இல்லை. மாத்திரை மருந்து வாங்க வழியில்லை.



கிட்டத்தட்ட 1000 பேர் இரண்டு பெண்களை குரூரமாக மனிதத் தன்மை இல்லாமல் அசிங்கப்படுத்தி, அவமானப்படுத்தி, கொடுமைப்படுத்தி இழுத்து வந்தார்கள். அந்தப் பெண்களுக்கு என்ன நியாயம் கிடைத்திருக்கிறது? நீங்க பாரத் மாதா கி ஜே என்று சொல்கிறீர்கள். நாமும் தமிழை அன்னையாக பார்க்கிறோம். நாட்டையே ஒரு பெண்ணாக போற்றுகிறோம் என்று சொல்லக்கூடியவர்கள், இந்த நாட்டிலே வாழக்கூடிய பெண்களுக்கு என்ன பாதுகாப்பை தந்திருக்கிறார்கள்?

### பெண்களுக்கு என்ன பாதுகாப்பு பா.ஜ.க. ஆட்சியில்?

உத்தரப்பிரதேசத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷா சொல்கிறார். 16 வயது பெண் உத்திரபிரதேசத்தில் நகைகளை அணிந்து கொண்டு நள்ளிரவிலே சென்றாலும் அவர் பாதுகாப்பாக இருப்பார் என்று. ஆனால் அங்கே உண்மையிலே நடந்து கொண்டிருக்க கூடிய நிலை என்ன? அங்கே இருக்கக் கூடிய பெண்களின் நிலை என்ன? கடந்த ஐந்து வருடங்களில் பெண்கள் மீதான குழந்தைகள் மீதான வன்முறை, பாலியல் குற்றங்கள் இரண்டு மடங்கு அதிகரித்து இருக்கிறது. அதுவும் சாதாரண குற்றங்கள் இல்லை, மிகக் கொடுமையான சொல்ல துணியாத நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு பயங்கரமான குற்றங்கள் அங்கே இருக்கக்கூடிய ஒடுக்கப்பட்ட சமூகத்து பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது.

ஆனால் அதையெல்லாம் யாரும் கணக்கு வைத்துக் கொள்வதில்லை, விசாரிப்பதில்லை, என்னவென்று கேள்வி கேட்பதில்லை. அங்கே ஒரு பெண் மில்லில் வேலை செய்தவர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு கிடக்கிறார். ஒரு கை வெட்டப்பட்டு அவளுடைய உடல் மீது வைக்கப்பட்டிருக்கிறது. தலை வெட்டப்பட்டு வெளியே வைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட கொடுமையான குற்றங்கள் உத்தர பிரதேசத்தில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இதை நிறுத்துவதற்கு அந்த பாஜக அரசாங்கத்தால் முடியவில்லை.

பில்கிஸ் பானு குஜராத்தில் நடந்த கலவரங்களிலே தன் கண் முன்னால் குடும்பமே அழிக்கப்பட்ட ஒரு பெண். பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட பெண். அந்த வன்முறையை செய்தவர்களுக்கு தண்டனை கொடுக்கப்படுகிறது. இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு அவர்கள் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். ஆனால் பத்து வருடங்கள் கழித்து குஜராத் அரசாங்கம் இவர்கள் இவ்வளவு நாள் சிறையில் இருந்து விட்டார்கள் என்று விடுதலை செய்கிறது. ஒரு குடும்பத்தையே அழித்து ஒரு பெண்ணின் வாழ்க்கையை அழித்து அவளுடைய நம்பிக்கைகளை அழித்து அவளை கொடுமைப்படுத்திய குற்றவாளிகளை அந்த அரசாங்கம் விடுதலை செய்கிறது. இதில் உச்சநீதிமன்றம் தலையிட்டு மறுபடியும் அவர்கள் சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். இது பற்றி பில்கிஸ் பானு, 'அவர்கள் விடுதலை செய்யப்பட்ட நாள் முதல் ஒரு நாள் கூட நான் தூங்கவில்லை. இன்று தான் தூங்கச் செல்கிறேன்' என்று கூறுகிறார். இது தான் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பாஜக அரசு பெண்களுக்கு தரக்கூடிய மரியாதை.

### மோடி சொன்ன பக்கோடாவும் தளபதியின் நான் முதல்வன் திட்டமும்!

இளைஞர்களுக்கு இளம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை, வேலை வாய்ப்பு வேண்டும் என்று கேட்டால் பக்கோடா போட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் நம்முடைய முதலமைச்சர் நான் முதல்வன் என்ற திட்டத்தை கொண்டு வந்தார். நம் வீட்டுப் பிள்ளைகள் படித்துவிட்டு. தொழில் முனைவோர்கள் என்ன எதிர்பார்க்கிறார்களோ, அதை தெரிந்து கொண்டு அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்ற காரணத்துக்காக நான் முதல்வன் என்ற திறன் மேம்பாட்டு பயிற்சியை அரசே செய்கிறது. இதை அந்த மாணவர்கள் வெளியே சென்று கற்றுக் கொள்ள வேண்டும் என்றால் குறைந்தபட்சம் 50 ஆயிரம் ரூபாய் கட்டணம் ஆகும். அதை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு இளைஞர்களுக்கு இளம்பெண்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தக்கூடிய பயிற்சியை தருவது நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள்.

### ஒன்றியத்திடம் இருந்து ஒரு ரூபாய் கூட வரவில்லை!

இங்கே அமைச்சரும் மாவட்ட செயலாளருமான சகோதரி கீதா ஜீவன் பேசினார். அவருக்குத் தெரியும் வெள்ளத்திலே தூத்துக்குடி மாவட்டம் எவ்வளவு மோசமாக பாதிக்கப்பட்டது என்று. முதலமைச்சர் ஸ்டாலின் தூத்துக்குடிக்கு வந்து, 'நான் இருக்கிறேன்' என்று வெள்ள பாதிப்புகளை பார்வையிட்டு ஆறுதல் சொல்லிச் சென்றார். அதற்குப் பிறகு ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் வருகிறார்கள். பல இடங்களுக்கு சென்று பார்வையிடுகிறார். மிக முக்கியமாக ஒரு கோயிலுக்கு போய் அதைச் சுற்றிலும் சகதியாக இருக்கிறது என்று சொல்லிவிட்டு போகிறார். மக்களுக்காக ஏதாவது செய்வார் என்று எதிர் பார்த்தால் இன்று வரை ஒரே ஒரு ரூபாய் கூட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடிக்கோ சென்னைக்கோ நிவாரணமாக ஒன்றிய அரசிடமிருந்து வரவில்லை.

### இந்தியாவிலேயே இல்லாத வகையில் நிவாரணம் வழங்கிய முதலமைச்சர்!

நீ கொடுத்தால் கொடு என் மக்களை நான் பாதுகாப்பேன் என்று சொல்லி பாதிக்கப்பட்ட மக்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் உடனடி நிவாரணமாக வழங்கியது நம்முடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். இதே போல இடிந்த வீடுகளை எல்லாம் கட்டித் தருகிறேன் என்று இந்தியாவிலேயே முதல் முறையாக ஒரு மாநில அரசு அறிவித்தது. இடிந்த வீடுகளுக்கு நான்கு லட்சம் ரூபாய் மீண்டும் கட்டுவதற்காக அறிவித்து இருக்கிறார் நம்முடைய முதலமைச்சர். ஒன்றிய அரசை பார்த்து கேட்கிறேன்... நீங்கள் என்ன செய்தீர்கள்? எங்களிடம் இருக்கிற நிதியை எல்லாம் வரி என்று சொல்லி வாங்கிக்கொண்டு போய் ஒரு ரூபாய்க்கு 26 பைசா தான் திருப்பி அளிக்கிறீர்கள். ஜிஎஸ்டியால் பாதிக்கப்படாத மக்களே இந்த நாட்டில் இல்லை என்ற நிலை.

### 100 நாள் திட்டத்தை ஒழித்துக் கட்டுவதே பா.ஜ.க.வின் திட்டம்!

இங்கே 100 நாள் வேலையைப் பற்றி சிலர் பேசினார்கள். விவசாயம் அல்லாத காலங்களில் கிராமப்புற விவசாயத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பெற வேண்டும் என்பதற்காக யுபிஏ காங்கிரஸ் கூட்டணி அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட திட்டம் தான் 100 நாள் வேலை திட்டம். இந்தத் திட்டத்திற்கான நிதியை இப்போதைய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஒவ்வொரு பட்ஜெட்டிலும் குறைத்துக் கொண்டே வருகிறார்.

சென்ற ஆண்டு 60000 கோடி ரூபாய் தான் இந்த திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. நான் பட்ஜெட் மீதான விவாதத்தின் போது, '100 நாள் வேலை திட்டத்திற்கு இவ்வளவு குறைவான நிதி ஒதுக்கினால் எப்படி சம்பளம் கொடுக்க முடியும்? எப்படி இந்தத் திட்டம் நடக்கும்? ' என்று கேட்டேன். அப்போது நாங்கள் தேவைக்கு ஏற்ப அதிகரித்துக் கொடுப்போம் என்று பதில் சொன்னார். ஆனால் இப்போது வரை அதிகரித்துக் கொடுக்கவில்லை.

இன்று வரை இந்தியாவில் எந்த மாநிலத்திலும் 100 நாள் வேலை திட்டம் நடக்கவில்லை. ஏற்கனவே கொடுக்கப்பட்ட வேலைக்கும் சம்பளம் தரப்படவில்லை. 100 நாள் வேலைத் திட்டத்தை கொஞ்சம் கொஞ்சமாக ஒழித்து கட்டுவது தான் மோடி அரசின் திட்டமாக இருக்கிறது.

### யாருடைய வருமானம் உயர்ந்தது? பா.ஜ.க.வின் ஊழல் இதுதான்!

பா.ஜ.க. காரர்களை கேட்டால் ஜி.டி.பி. அதிகரித்துள்ளது. தனநபர் வருமானம் அதிகரித்துள்ளது என்று சொல்வார்கள். நாட்டில் மூன்று பேருக்கு தான் வருமானம் அதிகரித்துள்ளது. அம்பானி, அதானி, பாஜக. இவர்கள் ஊழலை பற்றி பேசுகிறார்கள். ஊழலை சட்டபூர்வமாக தேர்தல் பாண்டு என்று கொண்டு வந்தவர்கள் இவர்கள். யார் வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் அரசியல் கட்சிகளுக்கு நிதி கொடுக்கலாம், அதை வெளியே கணக்கு காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று தேர்தல் பாண்டு சட்டத்தை கொண்டு வந்தார்கள்.

நாட்டிலே இருக்கக்கூடிய அத்தனை கட்சிகளையும் ஒரு பக்கம் வைத்துக் கொண்டால் அனைத்து கட்சிகளுக்கும் தேர்தல் பாண்டு மூலமாக கிடைத்திருக்கிற நிதி கால்வாசிதான். ஆனால் பாஜக என்ற ஒரே ஒரு கட்சிக்கு மட்டும் ஒட்டுமொத்த கட்சிகளை விட மூன்று மடங்கு அதிகமாக முக்கால்வாசி நிதி கிடைத்திருக்கிறது. இது ஊழலா இல்லையா?

இவர்களுக்கு மற்றவர்களை பற்றி பேச என்ன அருகதை யோக்கியதை இருக்கிறது? இப்படி தொடர்ந்து சாதாரண சாமானிய மக்களுக்கு விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு சிறுபான்மை மக்களுக்கு பெண்களுக்கு இளைஞர்களுக்கு எதிராக இருக்கும் ஆட்சிதான் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி.

இப்போது கூட போராட்டம் நடத்தும் விவசாயிகள் டெல்லிக்கு வந்து விடக்கூடாது என்பதற்காக கம்பிகள், சிமெண்ட் சுவர் என்று தடுக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட ஆட்சி இந்த நாட்டை மதத்தின் பெயரால் ஜாதியின் பெயரால் பிரித்தாள நினைக்கக்கூடிய ஒரு ஆட்சி மறுபடியும் இந்த நாட்டிலே வந்து விடக்கூடாது.

முதலமைச்சர் அண்ணன் தளபதி சொன்னதைப் போல இந்த தேர்தல் என்பது இரண்டாவது சுதந்திரப் போராட்டம் என்பதை புரிந்து கொண்டு நாம் பாடுபட வேண்டும். இப்படிப்பட்ட ஆட்சி ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாத ஆட்சி மறுபடியும் வந்தால் முதலில் பாதிக்கப்படுவது பெண்கள், பெண்களின் உரிமைகள் நமது குழந்தைகள்தான் என்பதை நாம் புரிந்து கொண்டு எல்லா தேர்தலையும் விட இந்த தேர்தல் களத்திலே நாட்டைக் காப்பாற்ற நம் பிள்ளைகளின் எதிர்காலத்தை காப்பாற்ற மிகப்பெரிய போராட்டம் நடத்தி நாம் பெற்றிருக்கக் கூடிய உரிமைகளை காப்பாற்ற இந்த மகளிர் தின நிகழ்ச்சியில் ஒவ்வொருவரும் எடுத்துக் கொள்ள வேண்டும்".

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.

உடன், அமைச்சர் பெருமக்கள் ஐ.பெரியசாமி, கீதா ஜீவன், அர.சக்கரபாணி, கயல்விழி செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார், மாநகராட்சி மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், மாநில மகளிரணி தலைவர் விஜயா தாயன்பன், மாநில மகளிரணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



மதுரை தெற்கு மாவட்டம் உசிலம்பட்டியில் திராவிட மாடல் ஆட்சி நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா, கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம் மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமையில் நடைபெற்றதில் கழக தேர்தல் பணி குழு செயலாளர் கம்பம் பி.செல்வேந்திரன் சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் எஸ்.ஓ.ஆர். தங்கப்பாண்டியன், ஏர்போர்ட் பாண்டியன், கே.ஐ.மகிழன், முத்துராமன், வழக்கறிஞர் ஆர்.பாலாஜி, சிவனாண்டி, கொம்பாடி தங்கம், எம்.முத்துராமலிங்கம், சரவணன், முருகன், சுதாகரன், ஜெயசந்திரன், அஜித் பாண்டி, சின்னான் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் உள்ளனர்.

## மேல்மலையனூர் ஒன்றியத்தில்

# ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கட்டிடங்கள்!

### மக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்!

செஞ்சி, மார்ச் 12–

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியத்தில்கட்டப்பட்ட பல்வேறு கட்டடங்களை சிறு பான்மையர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் கன்னலம் ஊராட்சியில்மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 15.27லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க அலுவலக கட்டிடம்,

குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு நிதி திட்டத்தில் 28. 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட இரண்டு கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள்,

பறையன் தாங்கள் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 22.65லட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய ஊராட்சி மன்ற கட்டிடம் மற்றும் 5.42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய சமையலறை கட்டிடம்,

கப்பளாம்பாடி ஊராட்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் 11.77மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலை கடை கட்டிடம், கீழ் தாங்கள்கிராமத்தில் 7.00லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நியாய விலை கடை கட்டிடம்,

தாழங்குணம் ஊராட்சியில்அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 11.77லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலை கட்டிடம்,

எதப்பட்டு ஊராட்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டத்திற்கு 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நாடக மேடை கட்டிடம்,

தேப்பிராம்பட்டுஊராட்சியில் சத்துணவு திட்டத்தின் கீழ் 6.10லட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டபுதிய சமையலறைகட்டிடங்கள் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்குமேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமைதாங்கினார்.

ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன்,ஒன்றிய கவுன்சிலர் கள்சியாமளா ஜெய்சங்கர்,செந்தாமரை கம்பீரம், கிருஷ்ணமூர்த்தி, செல்வி ரகுபதி,ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



மதுரையில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா, வருகிற நாடாளுமன்றத் தேர்தல் பணி குறித்து எட்டாவது மண்டல கழக இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார் முன்னிலையில் நடைபெற்றதில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர், மண்டல பொறுப்பாளர் ஜி.பி.ராஜா சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட அமைப்பாளர்கள் ஆஜிப்கான், செல்வம் மற்றும் குமார், முகேஷ், கிருஷ்ணராஜா, சம்பத் ராஜா, செந்தில்குமார், முத்துச்செல்வம் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.

## போதைப் பொருள் கடத்தல்! 68,200 கிலோ ஹெராயின் மாயம்!

# பா.ஜ.க. ஆட்சியில் ரூ.5 லட்சம் கோடி மெகா ஊழல்!

## ஆதாரங்களுடன் அம்பலப்படுத்திய ‘சத்யம்’ தொலைக்காட்சி!

**போதைப் பொருளுக்கு எதிரான ஒன்றிய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் என்ன என்பதுபற்றி ஒன்றிய அமைச்சர்கள் சொல்வது என்ன? 68 ஆயிரத்து 200 கிலோ ஹெராயின் சிக்கிம் மற்றும் மணிப்பூர் மாநிலத்தில் கைப்பற்றப்பட்டதாக உள்துறை அமைச்சர்கள் கூறக் கூடிய தகவல்கள் இரண்டையும் ஆதாரப்பூர்வமாக விளக்குகிறது இந்தத் தொகுப்பு: 5 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான இந்தியாவினுடைய மாபெரும் ஊழலின் மர்மத்தை ஆதாரத்துடன் தெரிந்துகொள்ள கொஞ்சம் பொறுமையுடன் படியுங்கள் இந்தத் தொகுப்பை; ஒரு மாபெரும் ஊழலின் மர்மம் உங்களுக்குப் புரிய வரும்.**

2022 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 30 ஆம் தேதி “நேஷனல் கான்பரன்ஸ் ஆன் ட்ரக்ஸ் டிராப்பிக்கிங் அண்ட் நேஷனல் செக்யூரிட்டி” என்ற தலைப்பில், பஞ்சாப் மாநிலம் சண்டிகரில் போதைப் பொருள் தொடர்பான தேசிய மாநாடு நடைபெற்றது.

**அந்த மாநாட்டினைத் தொடங்கி வைத்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, போதைப் பொருளுக்கு எதிரான போராட்டத்தில், இந்தியா முழு பலத்துடன் எதிர்த்து வருகிறது என்றும், இந்தியாவில் போதை மருந்து தயாரிக்கவும் அனுமதியில்லை. வெளியில் இருந்தும் இந்திய எல்லைக்குள் போதை மருந்து வராது; இந்தியாவிற்குள் இருந்தும் வெளியே செல்லாது என்று கூறினார்.**

போதைப் பொருள் வர்த்தகத்தின் மூலமாகப் புழங்கும் பணமும், பன்னாட்டு அளவில் தீவிரவாதத்தை வளர்க்கவும், ஊக்குவிக்கவும் உதவுகிறது. அதனால் தீவிரவாதத்திற்கு எதிராகவும், போதைப் பொருள் கடத்தலை தடுக்கவும், உலகில் உள்ள ஒட்டுமொத்த நாடுகளும் ஒன்றிணைந்து போராடி வருகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரையில், ‘ட்ரக்ஸ் ப்ரி இந்தியா’ என்ற முழக்கத்தை முன்வைத்து, ஒன்றிய உள்துறை அமைச்சகம், சட்ட விரோதமான போதைப் பொருள் கடத்தலைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.




இந்தியாவில் போதைப் பொருள் கடத்தலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நார்க்கோட்டிக் கண்ட்ரோல் பீரோ என்பது போதைப் பொருள் சட்ட அமலாக்கம் தொடர்பான விஷயங்களுக்கான நோடல் ஏஜென்சி ஆகும்.

என்.டி.டி.ஏ. சட்டத்தின்கீழ் ஒன்றிய அரசின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் மேற்கொள்ளும் ஒன்றிய ஆணையமான என்.சி.பி. போதைப் பொருள் கடத்தலுக்கு எதிரான நடவடிக்கைகளை மாநில அரசுகள் மற்றும் ஒன்றிய அரசுடன் இணைந்து பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதன்படி ஒவ்வொரு மாநிலத்திலும் தலைமைச் செயலாளரின் கீழ், மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு அதாவது ஸ்டேட் மல்டி ஏஜென்சி டிரேடிங் மிஷன், ரீஜினல் எகானமிக் இன்டலிஜென்ஸ் கவுன்சில், லீட் இன்டலிஜென்ஸ் ஏஜென்சி என பல விதமான தொடர் ஆலோசனைக் கூட்டங்களை என்.சி.பி. மேற்கொண்டு வருகிறது.

அதுமட்டுமின்றி, போதை மருந்து கடத்தலுக்கு எதிரான ஐ.நா. சபையுடனும், சார்க் நாடுகள் உடனான உடன்படிக்கையிலும் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. கூடவே, 24 நாடுகளுடன் இருதரப்பு ஒப்பந்தங்கள் மற்றும் 13 நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் போதைப் பொருள் கடத்தலுக்கு எதிரான கூட்டுப் பணிக்குழுக்கள் மூலம் 28 நாடுகள் பிராந்திய குழுக்களுடன் ஒத்துழைப்பு என, மிகத் தீவிரமான பணிகளை கவனத்துடன் செய்துவருகிறது ஒன்றிய அரசு.

இந்தியாவில் போதைப் பொருள் கடத்தல் தொடர்பான சட்டத்தை அமலாக்கம் செய்வது; போதைப் பொருள் டிஸ்பிரியோகம் தொடர்பான விஷயங்களில், ஒன்றிய, மாநில அரசாங்கங்களில் பல்வேறு ஏஜென்சிகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நார்கோட்டிக் கண்ட்ரோல் பீரோ அமைப்பு ஒருங்கிணைக்கிறது.

**சட்ட விரோதமாகக் கடத்தப்படும் போதைப் பொருள்களில் மிகவும் விலை உயர்ந்தது ஹெராயின், கொக்கைன். 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 மற்றும் 19 ஆகிய தேதிகளில், குஜராத் மாநிலம் முந்த்ரா துறைமுகத்தில் 2 ஆயிரத்து 988 கிலோ 21 கிராம் ஹெராயின் பிடிபட்டது. இந்திய வரலாற்றிலேயே இதுவரையில் இல்லாத அளவில், அதிகம் ஹெராயின் பிடிபட்டது முந்த்ரா துறைமுகத்தில்தான் என கூறுகிறது டைரக்டில்டாப் ரெவின்யூ இன்டலிஜென்ஸ்.**

15 நாள்கள் டி.ஆர்.ஐ. அதிகாரிகளின் தொடர்ச்சியான விசாரணைக்குப் பிறகு, இந்த வழக்கு தேசிய புலனாய்வு வசம் ஒப்படைக்கப்பட்டது. அதாவது என்.ஐ.ஏ. வசம் ஒப்படைக்கப்பட்டது. நீதிமன்றத்தின் அனுமதியுடன் முந்த்ரா துறைமுகத்தில் பிடிபட்ட 21 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள 2 ஆயிரத்து 988 கிலோ ஹெராயின் அகமதாபாத்தில், கடந்த ஜீன் மாதம் 8 ஆம் தேதி, ட்ரக் டிஸ்ட்ரக்சன் டே அன்று ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் முன்னிலையில், மிகவும் பாதுகாப்புடன் அளிக்கப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட ஹெராயின் அளிக்கப்பட்ட நடவடிக்கையை ஒன்றிய நிதியமைச்சர் பாராட்டுவதையும், போதைப் பொருள் இந்தியப் பொருளாதாரத்தையும், மக்களையும் எப்படி பாதிக்கிறது என்பதைப்பற்றி விவரித்து, குஜராத் மாநில நாட்டுப்புறக் கலைஞர் நீலேஷ் கஜ்ஜீவின் பாடல்கள், போதைப் பொருள் விழிப்புணர்வுக்கு உதவிகரமாக இருந்ததற்கும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பாராட்டுத் தெரிவித்தார்.

சட்ட விரோத போதைப் பொருள் வர்த்தகம் இந்தியாவின் பொருளாதாரத்தை மட்டுமல்ல, சமூகத்தையே கடுமையாகப் பாதிக்கிறது என்ற நிதியமைச்சர் சீதாராமன் கூறிய வார்த்தைகள் உண்மைதான்.

ஆனால், உண்மையில் இந்தியாவில் புலனாய்வு ஏஜென்சிகளால் குஜராத் மாநிலம் முந்த்ரா துறைமுகத்தில் பிடிபட்ட 2 ஆயிரத்து 988 கிலோ ஹெராயின்தான், முதன் முறையாக நாட்டில் அதிக அளவில் பறிமுதல் செய்யப்பட்ட ஹெராயினா?

ஒன்றிய அரசும், உள்துறை அமைச்சகமும் அரசின் இதர ஏஜென்சிகளும் சொல்லும் தகவல் உண்மையா? ஆயிரம் சதவிகிதம் இல்லை. அது தவறான தகவல் என்கிறது ஒன்றிய அரசின் ஆவணங்களே! இதோ அந்த ஆதாரங்களை நீங்களே பாருங்கள்! தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் 2018 ஆம் ஆண்டு ரிப்போர்ட் இது.

**2018 ஆம் ஆண்டில், இந்தியாவில் 22 ஆயிரத்து 263 கிலோ ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் 55 ஆயிரத்து 804 கிலோ ஹெராயின் இந்தியாவில் பறிமுதல் செய்யப்பட்டதாக என்.சி.ஆர்.பி. ரிப்போர்ட் கூறுகிறது. உண்மையில் உலகின் எந்த நாட்டிலும் இவ்வளவு அதிகமான ஹெராயின் இதுவரை பிடிபட்டது இல்லை.**

2020 ஆம் ஆண்டு என்.சி.ஆர்.பி. ரிப்போர்ட் வெளியான பிறகு, எந்த மாநிலத்தில் அதிக அளவு ஹெராயின் பிடிபட்டது என்பது அறிய ஆய்வில் இறங்கியது ஒரு தனியார் தொலைக்காட்சி.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் பிரிவு 24 இல், 26 ஏஜென்சிகளுக்கு ஊழல் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த தகவல்களைத் தவிர, வேறு எந்தத் தகவல்களையும் யாருக்கும் தரவேண்டியதில்லை என்று விலக்குத் தரப்பட்டுள்ளது.




அதனால், போதை பொருள் பறிமுதல் செய்யும் ஒன்றிய அரசின் எந்த ஏஜென்சிகளிடமிருந்தும் எந்த மாநிலத்தில், 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டில் அதிக அளவு ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டது என்பதை எவ்வளவு முயற்சித்தும் அந்தத் தனியார் தொலைக்காட்சியால் பெற முடியவில்லை. ஆனால், இரண்டாண்டு காத்திருப்பிற்குப் பலன் கிடைத்தது.

**எந்த மாநிலத்தில் அதிக அளவு ஹெராயின் பிடிபட்டது என்ற பதிலை நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சகமே எழுத்துப்பூர்வமாகக் கொடுத்தது. ஒருமுறை அல்ல மூன்று முறை எழுத்துப்பூர்வமாக உள்துறை அமைச்சகத்தின் இணையமைச்சர் நித்தியானந்தராய் அந்தப் பதிலைக் கொடுத்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் மாநிலங்களவையில் கொடுக்கப்பட்ட அந்த பதிலை வரிசைப்படுத்தி காட்டுகின்றோம். 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 8 ஆம் தேதி எந்தெந்த மாநிலத்தில் எவ்வளவு ஹெராயின் பிடிபட்டது என்ற கேள்வி, சுக்ராம் சிங் யாதவ், விஷம்பர் பிரசாத் நிஷாத் ஆகிய உறுப்பினர்களால் மாநிலங்களவையில் கேட்கப்பட்டது.

கேள்வி எண் 1173, ட்ரக்ஸ் சீசிடு இன் தி கண்ட்ரி என்று தலைப்பிடப்பட்ட அக்கேள்விக்கு, 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டில், எந்த மாநிலத்தில் அதிகம் ஹெராயின் பிடிபட்டது என்ற பதில் உள்துறை அமைச்சகத்தால் கொடுக்கப்பட்டது. எந்த மாநிலம் என்று பாருங்கள்.

**2018 இல் சிக்கிம் மாநிலத்தில் மட்டும் 15 ஆயிரம் கிலோ ஹெராயின் பிடிபட்டுள்ளது. அதேபோல, 2020 ஆம் ஆண்டில், சிக்கிம் மாநிலத்தில் 50 ஆயிரம் கிலோ ஹெராயினும், மணிப்பூர் மாநிலத்தில் 3 ஆயிரத்து 200 கிலோ ஹெராயினும் பிடிபட்டு இருக்கிறது.**

அதேபோல, 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் தேதி ராகேஷ் சின்கா என்ற மாநிலங்களவை உறுப்பினர் கேள்வி எண்: 3097, 2016 ஆம் ஆண்டுமுதல் 2020 ஆம் ஆண்டுவரையிலான காலகட்டத்தில், இந்தியாவில் நடந்த ஹெராயின் பறிமுதல் குறித்த கேள்வியை எழுப்பியிருந்தார்.

அந்தக் கேள்விக்கான பதிலை உள்துறை அமைச்சகம் சார்பில், ஒன்றிய இணை அமைச்சர் நித்தியானந்தராய் எழுத்துப்பூர்வமாக பதில் கொடுத்திருந்தார். அதிலும், 2018 ஆம் ஆண்டில் சிக்கிம் மாநிலத்தில் 15 ஆயிரம் கிலோ ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

**அதேபோல, 2020 ஆம் ஆண்டில், சிக்கிம் மாநிலத்தில் 50 ஆயிரம் கிலோ ஹெராயினும், மணிப்பூர் மாநிலத்தில் 3 ஆயிரத்து 200 கிலோ ஹெராயினும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது. இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில், தனித்த நிலப்பரப்பாக சிக்கிம் மாநிலத்து மக்கள் தொகை வெறும் 7 லட்சம் மட்டுமே. நாட்டிலேயே மிகக் குறைவான மக்கள் தொகைக் கொண்ட சிக்கிமில் 2018 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் மட்டும் மொத்தம் 65 ஆயிரம் கிலோ ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்ற உள்துறை அமைச்சகத்தின் பதில் மிகவும் அதிர்ச்சியைக் கொடுத்தது.**

அதனால், எந்த ஏஜென்சி சிக்கிம் மாநிலத்தில் ஹெராயினைப் பறிமுதல் செய்தது என்ற அறியக்கூடிய ஆய்வில் இறங்கியது அந்தத் தனியார் தொலைக்காட்சி. ஆனால், அவர்களுக்குக் கிடைத்த பதில் மிகவும் அதிர்ச்சிகரமானது. இந்தியாவில் போதைப் பொருள் கடத்தல் விவகாரத்தை ஒருங்கிணைக்கும் நோடல் ஏஜென்சி, ஏற்கெனவே குறிப்பிட்டபடி, நார்க்கோட்டிக்ஸ் கண்ட்ரோல் பீரோ மட்டுமே!

என்.சி.பி.யின் ஆண்டறிக்கையின்படி 2018 ஆம் ஆண்டு ஹெராயின் கடத்தல் தொடர்பாக இந்தியாவில் பறிமுதல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 748. பறிமுதல் செய்யப்பட்ட ஹெராயின் அளவு ஆயிரத்து 258 கிலோ. நார்க்கோட்டிக்ஸ் கண்ட்ரோல் பீரோ மட்டும் தனியாகப் பறிமுதல் செய்த ஹெராயின் 300 கிலோ.

என்.சி.பி.க்கு அடுத்தபடியாக, போதைப் பொருள் பறிமுதல் செய்யும் முக்கியமான மற்றொரு ஏஜென்சி, டைரக்டட்ரேட் ஆஃப் ரெவின்யூ இன்டலிஜன்ஸ் மற்றும் கஸ்டம்ஸ்.




நிதி மற்றும் வருவாய் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் டி.ஆர்.ஐ. வெளியிட்டுள்ள போதைப் பொருள் பறிமுதல் குறித்த ஆண்டறிக்கையில், 2018 ஆம் ஆண்டு 7.98 கிலோ மட்டுமே ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

> “அப்படி என்றால், கொஞ்சம் கவனமாகப் படியுங்கள், 2018ஆம் ஆண்டில் சிக்கிம் மாநிலத்தில் பிடிபட்டதாக உள்துறை அமைச்சகம் கூறும் 15 ஆயிரம் கிலோ ஹெராயின், 2020 ஆம் ஆண்டில் அதே சிக்கிம் மாநிலத்தில் பறிமுதல் செய்ததாக உள்துறை அமைச்சகத்தால் கூறப்பட்டிருக்கக் கூடிய 50 ஆயிரம் கிலோ ஹெராயின், அதே 2020 ஆம் ஆண்டில் மணிப்பூர் மாநிலத்தில் கைப்பற்றப்பட்டதாக உள்துறை இணையமைச்சர் நித்தியானந்தராயால் எழுத்துப்பூர்வமாகச் சொல்லப்பட்டு இருக்கக்கூடிய 3 ஆயிரத்து 200 கிலோ ஹெராயின் எங்கே சென்றது? என்ற கேள்வி எழுகிறது அல்லவா!”




‘சத்தியம்’ தொலைக்காட்சி பொறுப்பாசிரியர் பி.ஆர்.அரவிந்தாக்‌ஷன்

ஆக, நார்க்கோட்டிக்ஸ் கண்ட்ரோல் பீரோ, டைரக்டட்ரேட் ஆஃப் ரெவின்யூ இன்டலிஜன்ஸ் மற்றும் கஸ்டம்ஸ் அதிகாரிகள் சிக்கிம் மாநிலத்தில் பிடிபட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ள 15 ஆயிரம் கிலோ ஹெராயினை 2018 ஆம் ஆண்டில் பறிமுதல் செய்யவில்லை என்பது தெளிவாகிறது.

மீதம் இருக்கக்கூடிய எல்லைப் பாதுகாப்பு உள்ளிட்ட இதர ஏஜென்சிகள் ஏதேனும் 15 ஆயிரம் கிலோ ஹெராயினை சிக்கிம் மாநிலத்தில், 2018ஆம் ஆண்டில் பறிமுதல் செய்திருக்குமோ என்ற சந்தேகத்தில், அந்த ஆவணங்களையும் ஆய்வு செய்தனர். 2018 ஆம் ஆண்டில், என்.சி.ஆர்.பி. ரிப்போர்ட்டில் பதிவாகியுள்ள இதர ஏஜென்சிகளில் ஹெராயின் பறிமுதல் குறித்த விவரங்களைப் பார்ப்போம்.

**சி.பி.ஐ. 2018 ஆம் ஆண்டு ஒரு கிராம் ஹெராயினைக்கூட பறிமுதல் செய்யவில்லை. என்.ஐ.ஏ. 2018 ஆம் ஆண்டு ஒரு கிராம் ஹெராயினைக்கூட பறிமுதல் செய்யவில்லை. அசாம் ரைபிள்ஸ் 2018 ஆம் ஆண்டு 176 கிலோ 14 கிராம் ஹெராயினைப் பறிமுதல் செய்துள்ளது.**

**பார்டர் செக்யூரிட்டி ஃபோர்ஸ் 2018 ஆம் ஆண்டு 237 கிலோ 913 கிராம் ஹெராயினை பறிமுதல் செய்திருக்கிறது. சென்ட்ரல் இண்ட்ஸ்ட்ரியல் செக்யூரிட்டி ஃபோர்ஸ் 2018 ஆம் ஆண்டு ஒரு கிராம் ஹெராயினைக்கூட பறிமுதல் செய்யவில்லை. சென்ட்ரல் ரிசர்வ் போலீஸ் ஃபோர்ஸ் 2018 ஆம் ஆண்டு ஒரு கிலோ 430 கிராம் ஹெராயினை பறிமுதல் செய்திருக்கிறது.**

**இந்தோ திபேத்தியம் பார்டர் போலீஸ் 2018 ஆம் ஆண்டு 19 கிலோ 24 கிராம் ஹெராயினை பறிமுதல் செய்திருக்கிறது. சாஸ்த்ரா சிம்மபாய்ஸ் 2018 ஆம் ஆண்டில் 8 கிலோ 26 கிராம் ஹெராயினை பறிமுதல் செய்திருக்கிறது.**

**ஒன்றிய அரசின் எந்த ஏஜென்சிகளும், எல்லைப் பாதுகாப்புப் படையினரும் சிக்கிம் மாநிலத்தில் 2018 ஆம் ஆண்டில், 15 ஆயிரம் கிலோ ஹெராயின் பிடிபட்டதாகக் கூறும், உள்துறை அமைச்சக அறிக்கையின்படி அந்த ஹெராயினைப் பறிமுதல் செய்யவில்லை என்பது தெளிவாகிறது.**

ஒருவேளை சிக்கிம் மாநில காவல்துறை பறிமுதல் செய்திருக்குமோ என்பதை அறிய, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் சிக்கிம் மாநிலத்திற்கு விண்ணப்பம் செய்தனர். உண்மையில் அவர்கள் கொடுத்த பதில் பகிரங்கமானது.

**2018 ஆம் ஆண்டில், சிக்கிம் மாநில காவல் துறை ஹெராயின் பறிமுதல் தொடர்பாக, இரண்டு வழக்குகளை மட்டுமே பதிவு செய்துள்ளது.**

**இரண்டு வழக்குகளிலும் சேர்த்து 5 கிராம் ஹெராயின் மட்டுமே பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சரி, ஒன்றிய ஏஜென்சிகளும் பிடிக்கவில்லை; மாநில காவல்துறையும் பறிமுதல் செய்யவில்லை என்றால், 2018 ஆம் ஆண்டில் 15 ஆயிரம் கிலோ ஹெராயினை சிக்கிம் மாநிலத்தில் பறிமுதல் செய்தது யார்? பிடிபட்டதாக உள்துறை அமைச்சகத்தால் கூறப்படும் 15 ஆயிரம் கிலோ ஹெராயின் என்னவானது? என்ற கேள்வி எழுகிறது அல்லவா!**

**உண்மையில் 2018 ஆம் ஆண்டிலாவது 15 ஆயிரம் கிலோ ஹெராயின். ஆனால், 2020 ஆம் ஆண்டில் நடந்துள்ள விவகாரமோ இன்னும் அதிபயங்கரமானது. 2020 ஆம் ஆண்டில் என்.சி.ஆர்.பி. ரிப்போர்ட் இந்தியாவில் மொத்தம் 55 ஆயிரத்து 804 கிலோ ஹெராயின் பிடிபட்டதாகக் கூறுகிறது.**

**அதில் 50 ஆயிரம் கிலோ சிக்கிம் மாநிலத்திலும், 3 ஆயிரத்து 200 கிலோ மணிப்பூர் மாநிலத்தில் பறிமுதல் செய்யப்பட்டதாக உள்துறை அமைச்சகம் நாடாளுமன்றத்தில் எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்துள்ளது.**

அவ்வளவு ஹெராயினை எந்த ஏஜென்சியாவது பறிமுதல் செய்ததாகக் கணக்கில் காட்டியுள்ளதா என்று இப்போது பார்க்கலாம். நார்க்கோட்டிக்ஸ் கண்ட்ரோல் பீரோ ஆண்டறிக்கையின்படி, 2020 ஆம் ஆண்டு ஹெராயின் கடத்தல் தொடர்பாக இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 112. பறிமுதல் செய்யப்பட்ட ஹெராயின் அளவு 3 ஆயிரத்து 838 கிலோ.

என்.சி.பி. மட்டும் தனியாக பறிமுதல் செய்த ஹெராயின் அளவு 343 கிலோ. என்.சி.பி.க்கு அடுத்தபடியாக, போதை பொருள் பறிமுதல் செய்யும் மற்றொரு முக்கியமான ஒன்றிய ஏஜென்சி, டி.ஆர்.ஐ. மற்றும் கஸ்டம்ஸ். 2020 ஆம் ஆண்டு 202 கிலோ மட்டுமே ஹெராயின் பறிமுதல் செய்ததாக அதன் ஆண்டறிக்கைக் கூறுகிறது. ஆக, நார்க்கோட்டிக்ஸ் கண்ட்ரோல் பீரோ, டி.ஆர்.ஐ. மற்றும் கஸ்டம்ஸ் அதிகாரிகள் சிக்கிம் மாநிலத்தில் 2020 ஆம் ஆண்டில் பிடிபட்டதாகக் கூறப்படும் 50 ஆயிரம் கிலோ ஹெராயினை பறிமுதல் செய்யவில்லை.

மணிப்பூர் மாநிலத்தில் பறிமுதல் செய்யப்பட்டதாகக் கூறப்படும் 3 ஆயிரத்து 200 கிலோ ஹெராயினையும் அவர்கள் பிடிக்கவில்லை என்பது இதன்மூலம் தெளிவாகிறது. மீதம் இருக்கக்கூடிய எல்லைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் இதர ஏஜென்சிகள் ஏதேனும் மணிப்பூர் மற்றும் சிக்கிமில் 2020 ஆம் ஆண்டில் பறிமுதல் செய்யப்பட்டதாக உள்துறை அமைச்சகத்தால் கூறப்படும் 53 ஆயிரத்து 200 கிலோ ஹெராயினைப் பறிமுதல் செய்திருக்குமா? என்பதை அறிவதற்காக அந்த ஏஜென்சியின் ஆவணங்களையும் ஆய்வு செய்தனர்.

2020 ஆம் ஆண்டில் என்.சி.அய்.பி. ரிப்போர்ட்டில் பதிவாகியுள்ள இதர ஏஜென்சிகளின் ஹெராயின் பறிமுதல் குறித்த விவரங்களைப் பாருங்கள். அசாம் ரைபிள்ஸ் 2020 ஆம் ஆண்டு 174 கிலோ ஹெராயினைப் பறிமுதல் செய்துள்ளது.

பார்டர் செக்யூரிட்டி ஃபோர்ஸ் 2020 ஆம் ஆண்டு 578 கிலோ 726 கிராம் ஹெராயினை பறிமுதல் செய்திருக்கிறது.

சென்ட்ரல் இண்ட்ஸ்ட்ரியல் செக்யூரிட்டி ஃபோர்ஸ் 2020 ஆம் ஆண்டு 3 கிலோ ஹெராயினை பறிமுதல் செய்திருக்கிறது. சென்ட்ரல் ரிசர்வ் போலீஸ் ஃபோர்ஸ் 2020ஆம் ஆண்டு ஒரு கிலோ 490 கிராம் ஹெராயினை பறிமுதல் செய்திருக்கிறது. இந்தோ திபேத்தியம் பார்டர் போலீஸ் ஃபோர்ஸ் 2020 ஆம் ஆண்டில் ஒரு கிராம் அளவுகூட ஹெராயினை பறிமுதல் செய்யவில்லை.

சாஸ்த்ரா சிம்மபாய்ஸ் 2020 ஆம் ஆண்டில் 4 கிலோ ஹெராயினை பறிமுதல் செய்திருக்கிறது. உண்மையில், சிக்கிம் மாநில காவல்துறையோ ஒரு கிராம் அளவுகூட ஹெராயினை 2020 ஆம் ஆண்டில் பறிமுதல் செய்யவில்லை என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்மூலமாகக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் கொடுக்கப்பட்டது.

மணிப்பூர் மாநில காவல்துறையின் இணையப் பக்கமோ 2020 ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 200 கிலோ ஹெராயினை பறிமுதல் செய்யவில்லை என்று தெளிவுபடுத்துகிறது.

**அப்படி என்றால், கொஞ்சம் கவனமாகப் படியுங்கள், 2018 ஆம் ஆண்டில் சிக்கிம் மாநிலத்தில் பிடிபட்டதாக உள்துறை அமைச்சகம் கூறும் 15 ஆயிரம் கிலோ ஹெராயின், 2020 ஆம் ஆண்டில் அதே சிக்கிம் மாநிலத்தில் பறிமுதல் செய்ததாக உள்துறை அமைச்சகத்தால் கூறப்பட்டிருக்கக் கூடிய 50 ஆயிரம் கிலோ ஹெராயின், அதே 2020 ஆம் ஆண்டில் மணிப்பூர் மாநிலத்தில் கைப்பற்றப்பட்டதாக உள்துறை இணையமைச்சர் நித்தியானந்தராயால் எழுத்துப்பூர்வமாகச் சொல்லப்பட்டு இருக்கக் கூடிய 3 ஆயிரத்து 200 கிலோ ஹெராயின் எங்கே சென்றது? என்ற கேள்வி எழுகிறது அல்லவா!**

## ஒன்றிய அரசின் முன்னுக்குப்பின் முரணான தகவல்!

இந்த விவகாரம் மிகவும் தீவிரமானது என்பதால், மீண்டும் தெளிவான விளக்கம் பெறுவதற்காக, உள்துறை அமைச்சகம் மாநிலங்களவையில் ஹெராயின் பறிமுதல் தொடர்பாகத் தெரிவித்துள்ள பதிலைக் குறிப்பிட்டு, யார் 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டில் ஹெராயினைப் பறிமுதல் செய்தது என சிக்கிம் மாநில காவல்துறைக்கு ஆர்.டி.ஐ. மூலமாகக் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு சிக்கிம் மாநில காவல்துறை கொடுத்துள்ள பதிலைப் பார்ப்போம்.

மிகத்தெளிவாக அவ்வளவு அதிக அளவு ஹெராயின் சிக்கிம் மாநிலத்தில் பறிமுதல் செய்யப்படவே இல்லை என்று சிக்கிம் மாநில காவல் தலைமையகம் பதில் கொடுத்துள்ளது.

> “2018 மற்றும் 2020 ஆம் ஆண்டு உள்துறை அமைச்சகம் பறிமுதல் செய்ததாகக் கூறியிருக்கக்கூடிய 68 ஆயிரத்து 200 கிலோ ஹெராயின் காணாமல் போயிருக்கிறது. இதனுடைய பன்னாட்டு சந்தை மதிப்பு சுமார் 5 லட்சம் கோடி ரூபாய். பறிமுதல் செய்யப்பட்டதாக உள்துறை அமைச்சகம் கணக்கில் காட்டியுள்ள 68 ஆயிரத்து 200 கிலோ ஹெராயின் பறிமுதல் செய்ததாக ஏன் ஒன்றிய அரசாங்கத்தினுடைய எந்த ஏஜென்சிகளும் பொறுப்பேற்கவில்லை? நாட்டின் பொருளாதாரத்தை முற்றிலுமாக சீர்குலைக்கும் வகையிலான 5 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ஹெராயின் ஒன்றிய அரசின் எந்த ஒரு ஏஜென்சிகளும், போதைப் பொருள் தொடர்பான பறிமுதல் ஆவணத்திலோ, ஆண்டறிக்கையிலோ காட்டப்படாமல் இருக்க என்ன காரணம்?”

கூடவே, 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டில் ஹெராயின் மற்றும் பிரவுன் சுகர் தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகள், கைதான நபர்களின் பெயர், எவ்வளவு ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டது என்ற அனைத்துத் தகவல்களையும் கொடுத்துள்ளனர்.

**அதன்படி 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் சிக்கிம் மாநிலத்தில், 16 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. 12 கிராம் ஹெராயினும், 563 கிராம் பிரவுன் சுகரும் தான் சிக்கிமில் மாநில காவல் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டு இருக்கிறது.**

போதைப் பொருள் விவகாரங்களுக்கான நோடல் ஏஜென்சி நார்க்கோட்டிக்ஸ் கண்ட்ரோல் பீரோ மட்டுமே என்பதால், அந்தத் துறைக்கும், உள்துறை அமைச்சகம் மாநிலங்களவையில் ஹெராயின் பறிமுதல் தொடர்பாகத் தெரிவித்துள்ள பதிலைக் குறிப்பிட்டு, சிக்கிம் மற்றும் மணிப்பூர் மாநிலத்தில், எந்த ஏஜென்சி ஹெராயினை பறிமுதல் செய்தது என்கிற கேள்வி முன்வைக்கப்பட்டது.

ஆனால், நார்க்கோட்டிக்ஸ் கண்ட்ரோல் பீரோவின் பொதுத் தகவல் அலுவலர், செக்சன் 24ஐ குறிப்பிட்டு, அந்த விண்ணப்பத்தை நிராகரித்துவிட்டார். ஆனாலும், நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சகம் எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்த பதில் என்பதால், மீண்டும் மேல்முறையீட்டு அலுவலருக்கு விண்ணப்பம் செய்யப்பட்டது. ஆனால், அவரும் ஹெராயின் பறிமுதல் தொடர்பாக கேள்வி கேட்க, விண்ணப்பதாரருக்கு உரிமை இல்லை என்று கூறி, பதில் தர மறுத்துவிட்டார்.

நன்றாகக் கவனிக்கவேண்டும், ஹெராயின் பறிமுதல் தொடர்பாக, நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சகம் கூறிய பதில் தவறானது என்று நார்க்கோட்டிக்ஸ் கண்ட்ரோல்பீரோ கூறவில்லை. மாறாக, பதில் கொடுக்க முடியாது என்றுதான் தெரிவித்துள்ளன.




அப்படியென்றால், 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டு உள்துறை அமைச்சகம் பறிமுதல் செய்ததாகக் கூறியிருக்கக்கூடிய 68 ஆயிரத்து 200 கிலோ ஹெராயின் காணாமல் போயிருக்கிறது. இதனுடைய பன்னாட்டு சந்தை மதிப்பு சுமார் 5 லட்சம் கோடி ரூபாய்.

பறிமுதல் செய்யப்பட்டதாக உள்துறை அமைச்சகம் கணக்கில் காட்டியுள்ள 68 ஆயிரத்து 200 கிலோ ஹெராயின் பறிமுதல் செய்ததாக ஏன் ஒன்றிய அரசாங்கத்தினுடைய எந்த ஏஜென்சிகளும் பொறுப்பேற்கவில்லை?

நாட்டின் பொருளாதாரத்தை முற்றிலுமாக சீர்குலைக்கும் வகையிலான 5 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ஹெராயின் ஒன்றிய அரசின் எந்த ஒரு ஏஜென்சிகளும், போதைப் பொருள் தொடர்பான பறிமுதல் ஆவணத்திலோ, ஆண்டறிக்கையிலோ காட்டப்படாமல் இருக்க என்ன காரணம்?

**கணக்கில் காட்டப்படாத 68 ஆயிரத்து 200 கிலோ ஹெராயினும், 53 ஆயிரத்து 200 கிலோ ஹெராயின், வீட்டை விட்டு மக்கள் வெளிவராத கொரோனா காலகட்டத்தில் பறிமுதல் செய்ததாக உள்துறை அமைச்சகத்தின் அறிக்கை கூறுகிறது. 5 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ஹெராயின், சட்ட விரோதமாகக் கள்ளச்சந்தையில் விற்கப்பட்டு விட்டதா? யாருடைய ஆதரவோடு 5 லட்சம் கோடி ரூபாய் மதிப்பில் - இந்தியாவினுடைய இந்த மாபெரும் ஊழல் அரங்கேறியது?**

இந்தியாவில் மிகச் சிறிய மாநிலங்களான சிக்கிம் மற்றும் மணிப்பூரில் பறிமுதல் செய்யப்பட்ட 68 ஆயிரத்து 200 கிலோ ஹெராயின் விவகாரத்தை உள்துறை அமைச்சகம் கண்டும் காணாமல் இருக்க என்ன காரணம்?




ஹெராயின் கடத்தலுக்கும், தீவிரவாதத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு இருப்பதாக ஒன்றிய அரசு கூறுகிறது. இந்தியாவில் ஹெராயின் கடத்தல் தொடர்பாக தேசிய புலனாய்வு முகமை 11 ஆண்டுகால கட்டத்தில், 16 வழக்குகளைப் பதிவு செய்துள்ளது. அதில் ஒரு ஆச்சரியம் இருக்கிறது.

2.7.2012 ஆம் ஆண்டில் என்.ஐ.ஏ. ஹெராயின் கடத்தல் தொடர்பாக வழக்கு ஒன்றைப் பதிவு செய்துள்ளது. பஞ்சாப் மாநிலத்தில் வெறும் ஒரு கிராம் அளவு ஹெராயின் பிடிபட்டது தொடர்பாக இந்த வழக்குப் பதிவாகியிருக்கிறது. குஜராத் மாநிலம் முந்த்ரா துறைமுகத்தில், 2021 ஆம் ஆண்டு, 2 ஆயிரத்து 988 கிலோ ஹெராயின் பிடிபட்டது குறித்தும் என்.ஐ.ஏ. விசாரித்து வருகிறது. அதுவே, என்.ஐ.ஏ. பதிவு செய்துள்ள வழக்குகளில் அதிகம் ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்ட முந்த்ரா துறைமுக வழக்கு.

### விசாரணைக்கு எடுக்காத மர்மம் என்ன?

ஒரே ஒரு கிராம் ஹெராயின் பறிமுதல் செய்த வழக்கையெல்லாம் விசாரணைக்கு எடுத்த தேசிய புலனாய்வு முகமை சிக்கிம் மற்றும் மணிப்பூர் மாநிலத்தில் பிடிபட்ட 68 ஆயிரத்து 200 கிலோ ஹெராயின் பறிமுதல் விவகாரத்தை விசாரணைக்கு எடுக்காமல் இருக்கும் மர்மம் என்ன?

ஒன்றிய மற்றும் மாநில புலனாய்வு ஏஜென்சிகள் நாடு முழுவதும் பலவிதமான போதைப் பொருள்களைப் பறிமுதல் செய்து வருகிறது.

அதில், 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டில் பறிமுதல் செய்யப்பட்டதாக ஒன்றிய உள்துறை அமைச்சகம் கூறியிருக்கக் கூடிய ஹெராயின் என்ற ஒரே ஒரு போதைப் பொருள் குறித்த கணக்கில் இருந்து 68 ஆயிரத்து 200 கிலோ ஹெராயின் காணாமல் போயிருக்கிறது.

அப்படியென்றால், மீதமிருக்கும் இதர போதைப் பொருள் பறிமுதல் குறித்த கணக்கை ஆய்வு செய்தால், இன்னும் பல பூதாகரமான விவகாரங்கள் வெளிவருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

எந்த ஏஜென்சிகளின் கணக்கிலும் கொண்டுவரப்படாமல், போதைப் பொருள் மருந்துகள் அழிக்கப்பட்ட அதாவது ட்ரக்ஸ் டிஸ்போசல் கணக்கிலும் காட்டப்படாத 68 ஆயிரத்து 200 கிலோ ஹெராயின் என்னவானது?

நாடாளுமன்றத்தில் மூன்று முறை எழுத்துப்பூர்வமாக பதில் கொடுத்துள்ள உள்துறை அமைச்சகம் 68 ஆயிரத்து 200 கிலோ ஹெராயினை யார் பறிமுதல் செய்தது என்ற விவரங்களையும், பறிமுதல் செய்யப்பட்ட ஹெராயின் எங்கே சென்றது என்பது பற்றியும் உரிய பதிலளிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

### நாட்டின் பொருளாதாரத்தை சர்வ நாசமாக்கிவிடும்!

இல்லையேல், 5 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான 68 ஆயிரத்து 200 கிலோ ஹெராயின் இந்த நாட்டின் பொருளாதாரத்தை மட்டுமல்ல, இந்த நாட்டின் ஒட்டுமொத்த இளைஞர் சமூகத்தையும் சர்வ நாசமாக்கிவிடும் என்பது நிதர்சனம்.

## குஜராத் மாநிலம் முந்த்ரா துறைமுகத்தில் ரூ.21 ஆயிரம் கோடி மதிப்புள்ள 2 ஆயிரத்து 988 கிலோ ஹெராயின் பறிமுதல்!



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் நெல்லை மத்திய மாவட்ட துணைசெயலாளர் எஸ்.வி.சுரேஷ் ஏற்பாட்டில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுவிழா, கழகஇளைஞர் அணி மாநாடு தீர்மானம் விளக்கப் பெரும் பொதுக்கூட்டம் மற்றும் 1800 பேர்களுக்குநலத்திட்டஉதவிகள் வழங்கும் நிகழ்வு நெல்லை சிந்து பூந்துறையில்தச்சைபகுதிசெயலாளர் பூ.சுப்பிரமணியன் தலைமையில்நடைபெற்றது. தச்சை பகுதி துணை செயலாளர் 12 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோகுல வாணி சுரேஷ் வரவேற்புரையாற்றினார். இந்நிகழ்வில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் பாடநூல் பிரிவு வாரியத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றினார். உடன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன் கான்,அப்துல்வகாப் எம்.எல்.ஏ.மாநகரசெயலாளர் சுப்பிரமணியன், தலைமைதீர்மானக் குழு உறுப்பினர் சுப. சீதாராமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், இளைஞர் அணிஅமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன், மீரான் மைதீன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் வருவாய் - பேரிடர் மேலாண்மை துறை சார்பில்

# 3161 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. வழங்கினார்!

சென்னை, மார்ச் 12-

தூத்துக்குடி மாவட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 3161 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி வழங்கினார்.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி சத்திய பாமா திருமண மண்டபத்தில் 09.03.2024 அன்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் நடைபெற்ற அரசு விழாவில் கோவில்பட்டி வருவாய் கோட்டத்திற்குட்பட்ட கோவில்பட்டி, எட்டயபுரம்,விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம், கயத்தார் ஆகிய வட்டங்களை சேர்ந்த 352 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களையும்,62 இதர பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டாக்களையும், வீடுகட்டி குடியிருந்து வரும் 1091 பயனாளிகளுக்கு ஆக்கிரமிப்பினை வரன்முறைப்படுத்தி வீட்டுமனை பட்டாக்களையும்; ஆதிதிராவிடர் நலத்துறை நிலங்களில் வீடுகட்டி குடியிருந்து வரும் 1307 பயனாளிகளுக்கு “இ”பட்டாக்களையும்,ஆதிதிராவிடர் நலத்துறை நிலங்களில் காலிமனைகளில் 349 பயனாளிகளுக்கு “இ” பட்டாக்களையும் ஆக மொத்தம் 3161 பயனாளிகளுக்கு ரூ.16.80 கோடி மதிப்பிலான இலவச வீட்டு மனை பட்டாக்களை தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி தலைமையில் வழங்கினார்கள்.

பின்னர் கனிமொழி கருணாநிதி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1 இலட்சம் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கியதைத் தொடர்ந்து தூத்துக்குடி மாவட்டத்தில் பட்டா வேண்டுமென்ற கோரிக்கை வைத்திருந்தவர்களுக்கு இன்று இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்படுகிறது. வீடு என்பது எல்லோருக்கும் இருக்கக்கூடிய ஒரு கனவு. உங்களுடைய கனவை இன்று நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி தந்திருக்கிறார்கள். கோவில்பட்டி தாலுகாவில் 1076, கயத்தார் தாலுகாவில் 610, ஓட்டப்பிடாரம் தாலுகாவில் 557, விளாத்திகுளம் தாலுகாவில் 618, எட்டயபுரம் தாலுகாவில் 300 என மொத்தம் 3161 பேருக்கு இன்று இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த பட்ஜெட் கூட்டத்தில் முத்த மிழறிஞர் கலைஞர் அவர்களின் கனவு திட்டமான கலைஞர் கனவு இல்ல திட்டத்தினை அறிவித்தார்கள். இந்தியாவிலேயே முதன்முறையாக குடிசையில் இருப்பவர்களுக்கு மாடி வீடு கட்டி தரும் குடிசை மாற்று வாரியம் திட்டத்தினை கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்,பெண் குழந்தைகளை படிக்க வைத்தால் திருமண உதவி திட்டத்தை கொண்டு வந்தார்கள். அந்த திட்டத்தின் நீட்சிதான் இன்று புதுமைப் பெண் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார்.

இன்று ஆண்கள் கல்லூரி படிக்க மாதம் ரூ.1000 வழங்கும் திட்டத்தினை கொண்டு வந்துள்ளார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் பெண்களுக்கு சொத்தில் உரிமை உண்டு என்ற சட்டத்தை கொண்டு வந்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நமது மாவட்டத்திற்கு வந்து வேலை வாய்ப்பை பெருக்கும் வகையில் ரூ.16000 கோடி முதலீட்டில் வின்பாஸ்ட் மின்சார கார் உற்பத்தி நிறுவனத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிறுவனம் 15 மாதங்களில் திறக்கப்பட உள்ளது. அந்த தொழிற்சாலையில் நமது மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

கோவில்பட்டியில் டைடல் பார்க் அமைக்கப்படும் என அறிவித்துள்ளார்கள். அதேபோல் கோவில்பட்டியில் மிகவும் பிரபலமான கடலைமிட்டாய் உலகம் முழுவதும் எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. அதை வெளிநாடுகளில் விற்கும் அளவுக்கு விரிவுப்படுத்துவதற்காக இங்கு தனியாக மையத்தை உருவாக்கி தருவேன் என்று அறிவித்துள்ளார்கள்.

நமக்காக செயல்பட்டு கொண்டிருக்கும் ஆட்சி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சி. பெண்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகையாக ரூ.1000 கிடைத்துக்கொண்டிருக்கிறது. வீட்டுமனைப் பட்டா வாங்கும் அனைவருக்கும் வாழ்த்துகள். அழகான வீடு கட்டி மிக மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ. ஜெகன், மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன்,கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஜேன் கிறிஸ்டி பாய், கோவில்பட்டி நகர் மன்றத் தலைவர் கருணாநிதி, கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி.கஸ்தூரி சுப்புராஜ்,வட்டாட்சியர்கள் சரவணப்பெருமாள் (கோவில்பட்டி), நாகராஜன் (கயத்தார்), ராமகிருஷ்ணன் (எட்டயபுரம்), ராமகிருஷ்ணன் (விளாத்திகுளம்), சுரேஷ் (ஓட்டப்பிடாரம்), உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஜனநாயக நிறுவனங்களை பாதுகாப்போம், இல்லையெனில் சர்வாதிகாரம் தலை தூக்கும், எச்சரிக்கை அல்ல, எதார்த்தம்!

**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர் -
கழக உயர்நிலை
செயல்திட்டக்குழு உறுப்பினர்



இந்திய நாடாளுமன்றத்திற்கான தேர்தல் அறிவிப்பு சமீபத்தில் வரவிருக்கின்ற மிக முக்கியமான காலகட்டத்தில் இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணையாளர் அருண்கோயல் அவர்கள் தன்னுடைய பொறுப்பில் இருந்து விலகி இருப்பது பல்வேறு ஐயப்பாட்டிற்கும் கேள்விகளுக்கும் இலக்காகியுள்ளது. அவரது பதவிக்காலம் 2027ல் தான் நிறைவடைகிறது. ஏற்கனவே மற்றொரு ஆணையாளர் அனுப்சந்திராபாண்டே என்பவர் கடந்த பிப்ரவரி மாதம் தான் பணி ஓய்வு பெற்றுள்ளார். அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்ட தேர்தல் பத்திரங்கள் குறித்த வழக்கு தொடர்பான விசாரணைகளை(Electoral Bonds issue) உச்சநீதிமன்றத்தின் விசாரணைக்கு வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் தான் ஆணையாளர் அருண்கோயல் தன் பதவியை ராஜினாமா செய்திருக்கிறார். நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் பொழுது, இந்திய தேர்தல் ஆணையத்தின் தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் மட்டும் தான் தன்னுடைய பொறுப்பில் தொடர்கிறார். இந்தச் சூழ்நிலையில், காலியாக உள்ள இரண்டு தேர்தல் ஆணையாளர்களின் பதவியிடங்கள் கடந்த டிசம்பர் மாதம் 2023 இல் கொண்டுவரப்பட்ட புதிய சட்டத்தின்படி நிரப்பப்பட வேண்டும்.(Chief election commissioner and the office of election commissioners - appointment, conditions of service and Terms of offices - Act, 2023 ) இதற்கான தேர்வு குழுவில் இந்திய ஒன்றியத்தின் பிரதம அமைச்சரும்,அவரால் நியமிக்கப்படும், அவரது அமைச்சர்களில் ஒருவர் மற்றும் நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் என மூவர் அடங்கிய குழுவாகும்.

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் காலிப் பணியிடங்களாக உள்ள இரண்டு தேர்தல் ஆணையாளர்கள் பொறுப்புகளுக்கு ஆணையாளர்களை நியமித்துவிட்டு தேர்தலை நடத்துகிறார்களா? அல்லது தலைமை தேர்தல் ஆணையாளரை மட்டும் வைத்துக்கொண்டு தேர்தலை நடத்த உள்ளார்களா? என்பது இன்று அரசியல் கட்சிகளிடமும், மக்கள் மத்தியிலும் உருவாகியிருக்கும்கேள்வியாகும். இந்திய அரசியல் சட்டம் பிரிவு 324 உட்பிரிவு (2)ன் படியும், நாடாளுமன்றத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் சட்டத்தின் படியும் மற்ற தேர்தல் ஆணையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். இதில் எத்தகைய பிரச்சினைகள் உருவாகும் என்பதை மற்றைய ஆணையாளர்களின் நியமனத்திற்கு பின்னர் தான் அறிந்துகொள்ள முடியும். தேர்தல் ஆணையாளர் அருண்கோயலின் பதவிக்காலம் 2027 ஆம் ஆண்டு தான் நிறைவடைகிறது, இதற்கிடையில் நாடாளுமன்றத் தேர்தல் தொடங்கவுள்ள இந்த காலகட்டத்தில், அவர், தன் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்வதற்கு என்ன காரணம் ? அவர் தனது சொந்த காரணங்களுக்காக ராஜினாமா செய்துள்ளேன் என்று தெரிவிப்பது பொருத்தமான காரணம் என கருதவியலாது. அவரது ராஜினாமாவிற்குப் பின்னர் சில அரசியல் காரணங்களும், நிர்பந்தங்களும் இருக்கும் என்ற எதிர்க்கட்சிகளின் அனுமானங்களை எளிதில் புறந்தள்ளி விட இயலாது. சமீபத்தில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் ஏனைய இரண்டு தேர்தல் ஆணையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். அவர்களை நியமிக்கும் மூவர் குழுவில், நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் மட்டும்தான் உள்ளார் மற்றைய இருவர் பிரதம அமைச்சரும், அவரால் நியமிக்கப்படும், அவரது அமைச்சரவையில் ஒருவர் என சட்டம் கட்டமைக்கப்பட்டுள்ளதால் பிரதம அமைச்சரின் முடிவு தான் அங்கு வெற்றி பெறும் சூழ்நிலை உள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இந்தச்சூழ்நிலையில், எதிர்க்கட்சிகள் தேர்தலில் வாக்குச் சீட்டின் மூலம் வாக்களிக்கும் உரிமை வேண்டும். (EVM) “வாக்களிக்கும் இயந்திரம்” மூலம் வாக்களிக்கும்முறை தவிர்க்கப்பட வேண்டும் என போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான பல்வேறு காரணங்களை பொதுவெளியில் தெரிவித்தும் வருகிறார்கள். தேர்தல் ஆணையம் என்பது இந்திய அரசியல் சட்டத்தால் உருவாக்கப்பட்ட நிறுவனம். (Vide Article 324) இந்த பிரிவின் உட்பிரிவின் (2) படி குடியரசு தலைவர் தேர்தல் ஆணையாளர்களின் எண்ணிக்கையை முடிவு செய்யும் அதிகாரத்தை பெற்றுள்ளார். தற்பொழுது தலைமை தேர்தல் அதிகாரியான ராஜீவ்குமார் மட்டும் தான் பொறுப்பில் தொடர்கிறார். இன்றைய ஊடகச்செய்திகளின் அடிப்படையில் வரும் 15.3.2024ஆம் தேதி பிரதமர் தலைமையில் நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர், மற்றும் பிரதமரால் நியமிக்கப்படும், அமைச்சர் ஒருவர் அடங்கிய குழு காலிஇடங்களை நிறைவு செய்வதற்கு, ஆணையாளர்களைத் தேர்ந்தெடுக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டின்படி ஆய்வு செய்தால் பிரதம அமைச்சர் விரும்புபவர்களை தேர்ந்தெடுப்பதை யாராலும் தடுக்க இயலாது. இதற்கிடையில் குடியரசுத் தலைவர். தேர்தல் ஆணையாளர்களின் எண்ணிக்கையை கூட்டவும், குறைக்கவுமான வாய்ப்பு உள்ளது. எது எப்படி இருப்பினும் பிரதம அமைச்சர் விரும்புகின்றவர்களை மட்டும் உள்ளடக்கிய தேர்தல் ஆணையமாக இந்திய தேர்தல் ஆணையம் அமையவிருக்கிறது என்பதில் ஐயப்பாட்டிற்கு இடமில்லை.

அதுமட்டுமல்ல ராஜினாமா செய்த தேர்தல் ஆணையாளர் அருண்கோயல் மேற்கு வங்க மாநிலத்திற்கு தலைமை தேர்தல் ஆணையாளருடன் சென்று வந்த பிறகு உடனடியாக குடியரசுத் தலைவருக்கு தன்னுடைய ராஜினாமா கடிதத்தை அனுப்பி வைக்கிறார். குடியரசு தலைவரும் உடனடியாக அதனை ஏற்றுக் கொண்டு அறிக்கையை வெளியிடுகிறார். இதில் தேர்தல் ஆணையாளர் அருண்கோயல் அவர்களின் ராஜினாமாவிற்கான உண்மையான காரணங்களை தெளிவாக வெளிப்படுத்தாமையால் அகில இந்திய அளவிலே உள்ள எதிர்க்கட்சிகள் அருண்கோயலின் ராஜினாமா, அரசியல் கட்டாயங்களின் அடிப்படையில் நிகழ்ந்திருக்க கூடுமென பெரிதும் ஐயப்படுகிறார்கள். மேலும் ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் பிரதமஅமைச்சர் மோடி அவர்களுடைய நோக்கங்களுக்கு இசைந்து போக கூடியவர்களாக நடைபெறவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தல் இருக்க வேண்டும் என்பதற்காக திட்டமிட்டு நாடக பாணியில் உருவாக்கப்பட்ட ஏற்பாடு தான் இந்த நிகழ்ச்சிகள் என தெரிவிக்கிறார்கள். அத்தகைய எதிர்க்கட்சிகளின் அனுமானங்களை தவறு என்று சொல்வதற்கு இயலாது. காரணம் நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்ல; இந்திய அரசியல் சட்டம் சுதந்திரமாக செயல்பட வேண்டும். அப்பொழுதுதான் ஜனநாயகம் காப்பாற்றப்படும் என்ற உயர்ந்த நோக்கில் உருவாக்கப்பட்ட நிறுவனம் தான் தேர்தல் ஆணையம். இந்த ஆணையம் வெளிப்படை தன்மை இல்லாமல் அரசியல் காரணங்களால் பழுதுபட்டு போகுமேயானால், ஜனநாயகம் என்பது கேள்விக்குரிய அமைப்பாக மாறிவிடும். (Democracy becames mockery)இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகளான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய கோட்பாடுகள் உருக்குலைந்து போகும். இத்தகைய அரசியல் நெருக்கடி இனிவரும் காலத்தில் உருவாகுமேயானால் அதனைச் சரி செய்து, இந்திய அரசியல் சட்டத்தினுடைய கட்டமைப்பை உருக்குலையாமல் பாதுகாக்க வேண்டிய பெரும் கடமையும், பொறுப்பும் உச்ச நீதிமன்றத்திற்கும் உண்டு என்பதை தெரிவிப்பதோடு, இந்திய அரசியல் சட்டம் என்பது மக்களால் உருவாக்கப்பட்டு, மக்களால் 26.11.1949 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டம். எனவே இந்த தேசிய கடமையை முன்னெடுத்து செல்கின்ற திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகன் தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பின் அணிவகுக்க வேண்டுகிறேன். அதுதான் ஜனநாயகத்தை காக்கும் - அந்த முயற்சிதான் அரசியல் சட்டத்தையும் பாதுகாக்கும். ஆம்! இது எச்சரிக்கையல்ல எதார்த்தம்!!

போதைப் பொருள் கடத்தல்காரர்கள் ஜாமினில் வெளிவர உதவிய

# அ.தி.மு.க. வழக்கறிஞர் பார் கவுன்சிலிலிருந்து நீக்கம்!

## அ.தி.மு.க.வின் இரட்டை வேடம் வெட்ட வெளிச்சம்!

சென்னை, மார்ச் 12–

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் ஜாமினில் வெளிவருவதற்கு அ.தி.மு.க. வழக்கறிஞர் உதவி செய்தது அம்பலமானதை அடுத்து, அவர் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியில் கடந்த 2017ஆம் ஆண்டு அரசுத்தரப்பு சிறப்பு வழக்கறிஞராக, அ.தி.மு.க. வழக்கறிஞர் பிரிவைச் சேர்ந்த சீதாராமன் நியமிக்கப்பட்டார். தொடர்ந்து 2018ஆம் ஆண்டு, இவருக்கு மேலும் மூன்று ஆண்டுகளுக்கு பதவி நீட்டிப்பை வழங்கி அப்போதைய எடப்பாடி பழனிசாமி அரசு உத்தரவிட்டது.

அரசுத்தரப்பு வழக்கறிஞராக செயல்பட்ட சீதாராமன், போதைப் பொருள் கடத்தல் தொடர்புடைய 43 வழக்குகளில், கடத்தல்காரர்கள் எளிதாக ஜாமின் பெறும் வகையில், காவல்துறையின் கோப்புகளை நீதி மன்றத்தில் காலம் தாழ்த்தி தாக்கல் செய்து வந்தார்.

2019 ஆம் ஆண்டு இதைக் கண்டறிந்த உயர்நீதிமன்ற மதுரைக் கிளை, சீதாராமனுக்கு கண்டனம் தெரிவித்தது. மேலும், அரசுத்தரப்பு சிறப்பு வழக்கறிஞராக செயல்படுவதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், அவருக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது.

இந்தச் சூழலில் சீதாராமன் மீது ஒழுங்கு நடவடிக்கைக் கோரி இந்திய பார் கவுன்சிலில் தமிழ்நாடு அரசு முறையிட்டது. இதை விசாரித்த பார் கவுன்சில், வழக்கறிஞர் தொழிலுக்கான நெறிமுறைகளை அ.தி.மு.க. வழக்கறிஞர் சீதாராமன் கடைப்பிடிக்கவில்லை என்று கருத்து தெரிவித்தது.

மேலும், இளைஞர்களை சீரழிக்கும் போதைப்பழக்கத்தை ஊக்குவிக்கும் குற்றவாளிகளுக்கு உதவி செய்ததற்காக அ.தி.மு.க. வழக்கறிஞர் சீதாராமனை தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலில் இருந்து நீக்கி உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் போதைப்பொருள் விவகாரத்தில் அ.தி.மு.க.வின் இரட்டைவேடம் வெட்ட வெளிச்சமாகி உள்ளது.



இராமநாதபுரத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் கண்டுகொள்ளாமல் விடப்பட்ட பாதாள சாக்கடை திட்டம் 17.33 கோடி மதிப்பீட்டில் மறு சீரமைப்பு பணியை மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகர் மன்ற தலைவர் ஆர்.கே. கார்மேகம்,துணைத்தலைவர் பிரவீன்தங்கம் மற்றும் செயற்குழு உறுப்பினர் மிஷா அகமது தம்பி, மாநில விவசாய அணி துணைச் செயலாளர் குணசேகரன், உட்பட நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் புதிய தேர்தல் ஆணைய சட்டப்படி

# தேர்தல் ஆணையர்களை நியமிக்க தடை விதிக்க வேண்டும்!

## உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல்!

புதுடெல்லி, மார்ச் 12–

2023ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியையும் உறுப்பினராகக் கொண்ட தேர்வு குழுதான் தேர்தல் ஆணையர்களை நியமிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு பதிலாக ஒன்றிய அமைச்சரை தேர்வுக்குழுவில் சேர்த்து, ஒன்றிய அரசு கடந்த ஆண்டு சட்டம் இயற்றியது.

இந்த நிலையில், காலியாக உள்ள இரண்டு தேர்தல் ஆணையர் பணியிடங்களை, புதிய தேர்தல் ஆணைய சட்டப்படி நிரப்ப ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக பிரதமர் மோடி தலைமையில் வரும் 15ஆம் தேதி ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இந்தச் சூழலில், புதிய தேர்தல் ஆணைய சட்டப்படி தேர்தல் ஆணையர்களை நியமிக்க தடை விதிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், சார்பற்ற தேர்தல் ஆணையர்களை நியமிப்பதற்கு ஏதுவாக உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி தேர்தல் ஆணையர்களை நியமிக்க உத்தரவிட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய தேர்தல் ஆணைய சட்டப் பிரிவுகள் 7, 8ன் கீழ் தேர்தல் ஆணையர்களை நியமிக்க தடை விதிக்க வேண்டும் என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தொகுதி செங்குளத்து பட்டியில் புதிய ரேஷன் கடையை சரவணகுமார் எம்.எல்.ஏ. அடிக்கல்நாட்டி தொடங்கி வைத்தார். உடன் ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் தங்கவேல், பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டி, கெங்குவார்பட்டி பேரூர் செயலாளர் தமிழன், வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ஸ்டீபன், ஒன்றிய கவுன்சிலர் ராசு மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் மகளிர் மேம்பாட்டிற்காக செயல்படுத்துகின்ற திட்டங்கள் பாராட்டுக்குரியது!

## மக்களை ஏமாளிகளாக நினைத்து அறிவிப்புகளை வெளியிட்டு வருவதா?

# நாடாளுமன்றத் தேர்தலில் மோடிக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்!

### சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் நடைபெற்ற மனிதநேய திருவிழாவில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் உறுதி!



சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதி தி.மு.க 108 (அ) வட்டம் சார்பில், மார்ச்– 1 மக்கள் முதல்வ ரின் மனிதநேயத் திருநாள் ஒன்றியத்தின் முதன்மை ! தமிழ்நிலத்தின் புதுமை ! எனும் தலைமைப்பில் புகழரங்கம் சூரியச் சுடர்–60–வது நிகழ்ச்சி நேற்று முன்தினம் மலையாள கிளப் ஆடிட்டோரியம் சேத்துப்பட்டில் நடைபெற்றது. கே.எஸ்.எம். நாதன் தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலையில், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப. சிதம்பரம் சிறப்புரையாற்றினார். மற்றும் ஜி. விஸ்வநாதன் (வி.ஐ. டி பல்கலைக்கழகம்), சு.ப. வீரபாண்டியன் (திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர்) – (சமூக நீதி கண்காணிப்புக்குழு தலைவர்) அஜய் ரத்னம் (திரைப்பட நடிகர்) ஆகியோரும் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் வி. சுதாகர், சொ.வேலு, கோ.ஏகப்பன்,புனிதவதி எத்திராசன்.டி லோகேஷ்.வே வாசு. துலுக்கானம் பா.ஸ்ரீராமலு, இராஜேஸ்வரி ஸ்ரீதர், ஆர். நிர்மலா தேவி, பரிதிஇளம் சுரிதி, எஸ் ரசூல், டிவி வேலு, எம் மலர்மாறன், கே அன்னபூரணி, எஸ் ஜெகதீசன், வி விஜயகுமார் .எஸ் டால்பின் ஹரி , இ மொய்தீன், வான்மதி கதிரவன் உள்பட மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் ,கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் பாகமுகவர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர் எல்.சுந்தர்ராஜன் நன்றி கூறினார்.

சென்னை,மார்ச்.12-

**“மக்களை ஏமாளிகளாக நினைத்து அறிவிப்புகளை வெளியிட்டு வரும் பிரதமர் மோடிக்கு நாடளுமன்றத் தேர்தலில் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவர்” என்று முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் நடைபெற்ற மனிதநேய திருவிழாவில் உரையாற்றும் போது உறுதிபடக் கூறினார்.**

விழாவில் மேனாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் ஆற்றிய உரை வருமாறு:-

இன்றைய கூட்டத்திற்கு வருகை தந்துள்ள அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு முதலமைச்சருடைய பிறந்த நாள் மார்ச் மாதம் முதல் தேதி. அன்றே வர வேண்டும் என்று அமைச்சர் சேகர்பாபு அவர்கள் வலியுறுத்தினார்கள். ஆனால், கட்சிப் பணிகள் இருந்ததால், நான் ஏறத்தாழ நான்கு வாரங்களுக்கு தமிழ்நாட்டிற்கு வரவில்லை. டில்லியிலேயே பணிகள் இருந்தன. ஆகவே, மார்ச் முதல் தேதியன்று வர முடியாது; பின்னொரு நாளில் வருகிறேன் என்று சொன்னேன். என்னை அழைத்து இந்தத் திருவிழாவில், என்னையும் பங்கேற்க வைத்த அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இந்தியா கூட்டணி: முதல் மாநிலம் தமிழ்நாடு தான்!**

அண்மையில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நான் கொஞ்சம் அலசி பார்த்தேன். கடந்த 15, 20 நாள்களில் நடந்த நிகழ்ச்சிகள் ஒருவகையில் மகிழ்ச்சியைத் தருகிறது. இன்னொரு வகையில் அச்சத்தைத் தருகிறது.

மிகமிக மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால், ‘இந்தியா கூட்டணி’ முழுமை பெற்று, உருவம் பெற்று, கையெழுத்தான முதல் மாநிலம் தமிழ்நாடுதான்.

பாண்டிச்சேரி உள்பட நான்கு இடங்களில் ‘இந்தியா கூட்டணி’ – அதில் அங்கம் வகிக்கக் கூடிய கட்சிகள் எத்தனை இடங்களில் போட்டியிடப் போகின்றன என்பது அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டு விட்டது.

காங்கிரஸ் கட்சி ஏறத்தாழ அரை மணிநேரத்திற்கு முன்னால், கையெழுத்திட்டு இருக்கிறது. தமிழ்நாட்டில் 9 இடங்கள்; புதுச்சேரியில் ஒரு இடம் என்று 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் எந்த இடங்களை, எந்த எண்ணிக்கையில் தந்தார்களோ, அதையே உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். அதுபோலவே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும், விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கும் உறுதி செய்யப்பட்டு இருக்கிறது. அதுபோலவே, மற்ற கட்சிகளுக்கெல்லாம் உறுதி செய்யப்பட்டு இருக்கிறது. இது எதைக் காட்டுகிறது என்றால், 2019-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் எந்த முடிவு வந்ததோ, அது மீண்டும் உறுதி செய்யப்பட்டு இருக்கிறது.

**மகிழ்ச்சியான தொடக்கம் – பாராட்டு!**

இதில் புதிய வரவாக கமலஹாசன் அவர்களும் வந்திருக்கிறார். அவருக்கு மாநிலங்களவை 2024 ஆம் ஆண்டு ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் கமலஹாசன் அவர்கள் சுற்றுப்பயணம் செய்து, இந்தியா கூட்டணிக்குப் பிரச்சாரம் செய்வார் என்று எழுதி, கையெழுத்திடப்பட்டு இருக்கிறது. ஆக, எல்லா வகையிலும், மகிழ்ச்சியான தொடக்கம் இந்தக் கூட்டம் தொடங்கும்பொழுது ஒரு குறை இருந்தது; கையெழுத்தாகுமா, ஆகாதா? என்று. ஆனால், கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுதே, கையெழுத்தாகி விட்டது. அதற்காக என்னுடைய மிகுந்த மகிழ்ச்சியை, பாராட்டை எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**முதல்வரின் நிதானத்தை பாராட்டுகிறேன்!**

இந்தக் கையெழுத்துகள் எல்லாம் முதலமைச்சருடைய உறுதி இல்லாமல் நடந்திருக்க முடியாது. அவர் பேசுவதை நிதானமாகப் பேசுகிறார்; எழுதும்போது நிதானமாக எழுதுகிறார்.

அந்த நிதானத்தைப் பலர், தயக்கம் என்று தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். குழப்பம் என்று சிலர் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். அந்த நிதானம் என்பது தயக்கமும் அல்ல; குழப்பமும் அல்ல. அந்த நிதானம் என்பது, பயணத்தினுடைய முடிவு எது என்று எனக்குத் தெரியும். அந்தப் பயணத்தினுடைய முடிவை எட்டுவதற்கு, பயணம் செய்யும்பொழுது, யாரும் தடுமாறிவிடக் கூடாது என்பதற்கான நிதானம். யாரும் தடுமாறி, தள்ளாடி விழுந்துவிடக் கூடாது என்பதற்காக அந்த நிதானம். யாரும் பாதை மாறி போய்விடக் கூடாது என்பதற்காக அந்த நிதானம். முதலமைச்சருடைய நிதானத்தை நான் பாராட்டுகிறேன்.

அந்த நிதானமானப் போக்கை, கடந்த 15, 20 நாள்களில், அவர் உறுதியாகக் கடைப்பிடிப்பதால்தான், இந்த வெற்றிச் செய்திகள் நமக்கு வந்திருக்கின்றன.

**இந்தியாவில் மனிதநேயம் வளர்ந்திருக்கிறதா?**

இது மனிதநேயத் திருவிழா! அருமை நண்பர் சுப. வீரபாண்டியன் அவர்களின் உரையை நான் பல முறை கேட்டிருக்கிறேன். எப்பொழுதுமே நம்மை சிந்திக்கும் வகையில் பேச வைப்பார்.

இது மனிதநேயம்! மனிதநேயம் என்றால் என்ன? மனிதன், மனிதனை நேசிக்க வேண்டும்.

கடந்த 10 ஆண்டுகளில் மனிதநேயம் இந்தியாவில் வளர்ந்திருக்கிறதா? குறைந்திருக்கிறதா? என்ற கேள்வியைக் கேட்டுப்பாருங்கள்.

நேற்று சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதி மேம்பாடு நிதியின் கீழ், அய்மாஸ் விளக்கை சில இடங்களில் பொருத்தியிருக்கிறோம். ஓர் ஊரில் இரண்டு அய்மாஸ் விளக்குகளைப் பொருத்துகிறார்கள். ஒன்று, கீழப்பள்ளிவாசல் தெரு; இன்னொன்று, பெருமாள் கோவில் தெரு.

கீழப்பள்ளி வாசல் தெருவில் அய்மாஸ் விளக்கைப் பொருத்தியபொழுது, இஸ்லாமியர்களும் இருந்தார்கள், இந்துக்களும் இருந்தார்கள், எல்லா சமுதாய மக்களும் இருந்தார்கள். அது ஒரு சிறிய தெருதான், நெரிசலாகக் கூட்டம் இருந்தது. யார் முஸ்லிம்? யார் இந்து? என்றெல்லாம் பிரித்துப் பார்க்க முடியாது. எல்லோரும் இருந்தார்கள். அதேபோன்று, பெருமாள் கோவில் தெருவில், அந்த விளக்கைப் பொருத்தியபொழுதும் எல்லோரும் இருந்தார்கள். அந்த மனிதநேயம்தான், தமிழ்நாட்டை இத்தனை நாள்களாகக் காத்து வருகிறது.

நான் வருத்தத்தோடு சொல்கிறேன், இதே நிகழ்வு, வடநாட்டில் சில மாநிலங்களில் நடந்திருந்தால், ஒன்று, கீழப்பள்ளி வாசலில் அய்மாஸ் இருக்காது. தப்பித்தவறி இஸ்லாமியர்கள் வாழும் பகுதியில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றால், இந்துக்கள் வரமாட்டார்கள். அதேபோல, இந்துக்கள் பகுதியில் ஒரு நிகழ்ச்சி நடந்தால், இஸ்லாமியர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**வட மாநிலங்களில் அழிக்கப்பட்ட மனிதநேயம்!**

இப்படி இருந்த வடநாடு அல்ல; அலகாபாத், லக்னா போன்ற நகரங்கள் கூட்டுக் கலாச்சாரம் என்று பெருமைப்பட்ட நகரங்கள். இந்துஸ்தானி மொழியே, இந்தி, உருது கலந்த மொழிதான். சுதந்திர இந்தியாவில், எது தேசிய மொழியாக இருக்கவேண்டும் என்று கேட்ட பொழுது, மகாத்மா காந்தி அவர்கள், இந்துஸ்தானி மொழி இருக்கவேண்டும் என்று சொன்னார். காரணம், இந்தி, உருது இரண்டும் கலந்த மொழிதான், அந்த மக்கள் பேசுகின்ற மொழி. அந்த அளவிற்கு மனி

> **ஓய்ந்து உட்காராமல் உழைத்துக் கொண்டிருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!**
>
> **தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் 12 லட்சத்து 91 ஆயிரம் குழுக்கள் இருக்கின்றன. இதில் கடந்த இரண்டரை ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட புதிய குழுக்கள், ஒரு லட்சத்து 14 ஆயிரம் குழுக்கள்.**
>
> **மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபொழுது, ஏற்கெனவே தான் 10 லட்சம் குழுக்கள் இருக்கிறதே, போதாதா? என்று ஓய்ந்து உட்காராமல், இன்னும் ஒரு லட்சத்து 14 ஆயிரம் குழுக்களை உருவாக்கியிருக்கிறார், அதற்காக அவரை நான் பாராட்டுகிறேன்.**

தநேயம் இருந்த இந்தியாவில், வட மாநிலங்களில், இன்றைக்கு மனிதநேயம் முழுக்கமுழுக்க அழிந்துவிட்டது.

மனிதநேயம் மிஞ்சியிருப்பது, தென்னாட்டில்தான். மேற்கு மாநிலங்கள், கிழக்கு மாநிலங்களில் மனிதநேயம் இருக்கிறது; ஆனால், மனிதநேயம் அங்கே கொஞ்சம் தடுமாறிக் கொண்டிருக்கின்றது. மனிதநேயத்திற்கு எதிராக மிகப்பெரிய தாக்குதல்கள் நடைபெறுகின்றன. அசாம், மேற்குவங்காளம், மகாராட்டிரா இங்கெல்லாம் மனிதநேயம் நாள்தோறும் அழிக்கப்படுகிறது; அழிக்க முயற்சி செய்கிறார்கள். தென்னாட்டில் நல்லவேளையாக மனிதநேயம் தொடர்ந்து இருக்கிறது. இந்த மனிதநேயத்திற்கு மிகப்பெரிய ஆபத்து வந்திருக்கிறது என்று நான் அஞ்சுகிறேன். ஆனால், நம்முடைய கூட்டணி வலிமையாக இருந்தால், நம்முடைய கூட்டணி வெற்றிகரமான கூட்டணியாக, தேர்தலுக்குப் பிறகு மீண்டும் எழும்பிவிட்டால், மனிதநேயத்தைத் தமிழ்நாட்டிலிருந்து அழிக்கவே முடியாது, அழிக்கவே விடக்கூடாது.

**காந்தியும் – கோட்சேவும் ஒன்றா?**

பல உதாரணங்களை என்னால் சொல்ல முடியும். நேற்று ஒரு உதாரணம் கல்கத்தா உயர்நீதிமன்றத்திலிருந்து ஒரு நீதிபதி ராஜினாமா செய்திருக்கிறார். அவருக்கு 6 மாதம் பதவிக் காலம் இருக்கிறது. ஆனால், பதவியிலிருந்து விலகும்பொழுது, அவர் சொன்னது சர்ச்சைக்கு ஆளாகியிருக்கிறது.

அந்த நீதிபதியிடம், வங்காள தொலைக்காட்சிக்காக எடுக்கப்பட்ட ஒரு பேட்டியில், காந்தியா? கோட்சேவா? எதைத் தேர்ந்தெடுப்பீர்கள் என்று.

அதற்கு அவர் என்ன பதில் சொன்னார் தெரியுமே கோட்சே என்று சொல்லியிருந்தால்கூட, பரவாயில்லை, இவர் கடவுள் மன்னிப்பார் எனலாம். அதற்கு அவர் என்ன பதில் சொன்னார் தெரியுமா? இதற்கு நான் உடனடியாகப் பதில் சொல்ல முடியாது; சிந்தித்துத்தான் பதில் சொல்வேன். காந்தியா? கோட்சேவா? என்று கேட்டதற்கு, சிந்தித்துப் பதில் சொல்ல வேண்டுமா? என்ன சிந்திக்கிறார் அவர்.

காந்தியை, கோட்சே கொன்றானா? அல்லது கோட்சே குண்டுவீசும்போது காந்தி இடையில் புகுந்துவிட்டாரா என்று சிந்திக்கிறாரா?

காந்தியா? கோட்சேவா? என்பதற்கு ஒரு உச்சநீதிமன்றத்திலிருந்து பதவி விலகிய நீதிபதி, நான் உடனடியாகப் பதில் சொல்ல முடியாது; சிந்தித்துத்தான் பதில் சொல்வேன் என்று சொன்னால், காந்தியும் கோட்சேவும் ஒன்றா? பூவா, தலையா? போட்டுப் பார்க்கப் போகிறாரா? அந்த அளவிற்கு இந்த நாட்டில் நச்சுக் கருத்துகள் தோன்றியிருக்கின்றன. இதையெல்லாம் முளையிலேயே கிள்ளி எறியவேண்டும். 20, 30 ஆண்டுகளுக்கு முன்னால், காந்தியா? கோட்சேவா? என்கிற கேள்வியே எழுந்திருக்காது; அப்படியெல்லாம் கேட்கவேண்டும் என்று யாருக்கும் தோன்றியிருக்காது. அந்த மாதிரி யாராவது கேள்வி கேட்டால், இவ்வளவு பெரிய பாவியாக இருக்கிறீர்களே என்று கேட்பார்கள். ஆனால், இன்றைக்கு அந்தக் கேள்வியையும் கேட்கிறார்கள்; அதற்கு ஒருவர் பதிலையும் சொல்கிறார், நான் சிந்தித்துத்தான் பதில் சொல்வேன் என்று. இதுபோன்ற எத்தனையோ நிகழ்ச்சியை, இந்த நாடு பார்த்து வருகிறது; அதுதான் எனக்கு அச்சம் தருகிறது.

**அச்சம் மக்களுக்கு ஏன் வந்தது?**

இந்த நிகழ்ச்சி தொடர்ந்து நடந்தால், இந்தியாவில் இன்றைக்கு இருக்கின்ற 170 கோடி மக்கள் ஒரு நாட்டு மக்களாக இருக்க முடியும்? இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களும், இஸ்லாமிய மக்களும் வடநாடுகளில், சிறிய கிராமங்களிலிருந்து வெளியேறி இருக்கிறார்கள். ஏன்? 10, 15 குடும்பம் இஸ்லாமிய குடும்பம்; 20 குடும்பம் தாழ்த்தப்பட்ட குடும்பம் இருக்கிறது. எங்களுக்குப் பாதுகாப்பு கிடையாது என்று, நகரங்களுக்குப் போகின்றனர். கான்பூர், லக்னோ, அலகாபாத் நகரங்களுக்குப் போகிறார்கள்.

காரணம், அங்கேயெல்லாம் பல லட்சம் இஸ்லாமிய மக்கள் இருக்கிறார்கள்; அவர்களோடு சேர்ந்து இருந்தால், நமக்குப் பாதுகாப்பு என்று நினைக்கிறார்கள். இந்த அச்சம் ஏன் வந்தது? இந்த அச்சம் வரலாமா? இந்தியாவில் உள்ள ஒரு குடிமகனுக்கு இந்த அச்சம் வரலாமா?.

நாம் ஒற்றைக் குடும்பமாக இருந்தாலும், நாம் பாதுகாப்பாக இருப்பேன் என்ற நம்பிக்கை அல்லவா வரவேண்டும். அந்த நம்பிக்கை இன்றைக்கு அழிந்து போகிறதே! கொஞ்சம் கொஞ்சமாக அந்த நம்பிக்கை அழிந்துபோனால், எப்படி மக்கள் ஒன்றாக இருக்க முடியும்? எப்படி ஒன்றாக வாழ முடியும்?இதையெல்லாம் பார்க்கும்பொழுதுதான் மனிதநேயத்தினுடைய முக்கியத்துவம் புரியும்.

**மனித நேயத்தை வளர்ப்போம்!**

நான் பல நேரங்களில் வேடிக்கையாக சொல்லியிருக்கிறேன், இது ஒன்றும் கற்பனைக்கு எட்டாத கருத்து அல்ல. ஒரு மருத்துவமனையில், பிரசவ பிரிவில், இரண்டு தாய்க்கு ஒரே நேரத்தில் குழந்தை பிறந்தது என்றால், தப்பித்தவறி குழந்தைகள் மாறிவிட்டால், ஒரு முஸ்லிம் தாய், ஒரு இந்து தாய் குழந்தைகள் மாறிவிட்டால், இந்தக் குழந்தை முஸ்லிமாக வளரும்; அந்தக் குழந்தை இந்துவாக வளரும்.

இப்பொழுதுதான் டி.என்.ஏ. பரிசோதனை எல்லாம் வந்திருக்கிறது. அந்தக் காலத்தில் டி.என்.ஏ. பரிசோதனை கிடையாது. அதனால், பிறக்கும்பொழுதே ஒருவர் தலையில், மகன், ஜாதியெல்லாம் எழுதி வைக்கவில்லை. தாய் தந்தை என்ன மதத்தைப் பின்பற்றுகிறார்களோ, அதைத்தான் குழந்தைகள் பின்பற்றுகின்றனர். 18 வயதில் ஓட்டு, 18 வயதில் உன்னுடைய மதத்தை நீ தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும் என்றா விதி இருக்கிறது. நியாயமாக அப்படித்தான் விதி இருக்கவேண்டும். 18 வயதில்தான் எனக்கு வாக்குரிமை; எனக்கு அறிவு வளர்ந்திருக்கிறது என்று அரசமைப்புச் சட்டம் சொல்கிறது. ஆக, 18 வயதில், என்னுடைய மதத்தை, என்னுடைய ஜாதியை நான் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும் என்றா, போராட முடியும்? இந்தப் பிளவுகள் எல்லாம், மனிதன் உருவாக்கிய பிளவுகள். இதே மாதிரிதான் பல நாடுகளில் இருக்கின்றன.

அமெரிக்காவில், கருப்பர்களுக்கும் வெள்ளையர்களுக்கும் 200 ஆண்டுகளாகப் போர் நடக்கிறது. அய்ரோப்பாவில், யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் அதற்குமுன்னாலேயே போர் நடக்கிறது. ஆப்பிரிக்காவில், இன்றுகூட இந்தக் கூட்டம் அந்தக் கூட்டம் என்று போர் நடக்கிறது. இருவரும் கருப்பர்கள்தான். இருவர் உடலிலும் ஓடுவது சிவப்பு ரத்தம்தான்.

ஆனால், இந்தக் கருப்பு இன மக்கள் ஒரு கூட்டம் என்றும், அந்தக் கருப்பு இன மக்கள் ஒரு கூட்டம் என்று பிரிந்து சண்டை போடுகிறார்கள். இரண்டு நாடுகளுக்கிடையே சண்டை நடக்கிறது. ஒரு நாட்டில், இரண்டு பிரிவினருக்கிடையே சண்டை நடக்கிறது.

ஆக, மனிதநேயம்தான் இருக்கிறதே என்று நினைக்காதீர்கள். மனிதநேயத்தைப் பாதுகாக்க வேண்டும். மனிதநேயத்தை வளர்க்கவேண்டும். மனிதநேயத்திற்கு மீறிய செயல்களை எதிர்க்கவேண்டும்; எழுதவேண்டும், பேசவேண்டும். மனிதநேயத்தை சிதைக்கின்ற சக்திகள் அதிகம். மனிதநேயத்தை பாதுகாக்கும் சக்திகளாக நம் மக்கள் இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மகளிர் மேம்பாட்டிற்காக தி.மு.கழக அரசின் திட்டங்கள்!**

இந்த மனிதநேயத்தின் ஒரு பகுதிதான் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை என்பது. ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை கிடையாது என்பார்கள். இன்றைக்கும் முழுக்க முழுக்க கிடையாது. இதை நம்புகிறீர்கள் என்றால், சம உரிமை இருக்கிறது என்று நினைத்தீர்கள் என்றால், உங்களுக்காக நான் அனுதாபப்படுகிறேன். சம உரிமை கிடையாது. சம உரிமையைப் போராடித்தான் பெறவேண்டும். அப்படிப் போராடும்பொழுது, அரசு துணை நிற்கவேண்டும்; அரசை நடத்துகின்ற கட்சி பெரும் துணையாக இருக்க வேண்டும். அதுதான், கட்சிக்கு கட்சி வேறுபடும். சில கட்சிகள், ஆணும் பெண்ணும் சமம் இல்லை என்று சொல்வார்கள். ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் பல தலைவர்கள், பெண்களுடைய கடமை வீட்டைப் பாதுகாப்பது, வீட்டு வேலைகளைச் செய்வது, குடும்பத்தைக் காப்பாற்றுவது என்று பகிரங்கமாகப் பேசுகிறார்கள். அவர்களுக்கு ஆண் பெண் சமம் என்ற கருத்தில் அவர்கள் உடன்படவில்லை. சில கட்சிகள், பேசும், ஆனால், செயல்படாது. சில கட்சிகள்தான் ஆணும் பெண்ணும் சமம்; அதற்காக நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்; அதற்காகத் திட்டங்களைப் போடவேண்டும்; அதற்காகச் சட்டங்களைப் போடவேண்டும் என்று சொல்லும். அதற்கான காரியங்களைச் செய்வது சில கட்சிகள் தான்.

**அண்மைக்காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக அரசு, மகளிர் மேம்பாட்டிற்காக செய்த காரியங்கள் எல்லாம், எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், திருப்தியையும் தந்திருக்கின்றன.**

**ரூ.75 ஆயிரம் கோடி கடன் வழங்கல்!**

**தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் 12 லட்சத்து 91 ஆயிரம் குழுக்கள் இருக்கின்றன. இதில் கடந்த இரண்டரை ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட புதிய குழுக்கள், ஒரு லட்சத்து 14 ஆயிரம் குழுக்கள்.**

**மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபொழுது, ஏற்கெனவே தான் 10 லட்சம் குழுக்கள் இருக்கிறதே, போதாதா? என்று ஓய்ந்து உட்காராமல், இன்னும் ஒரு லட்சத்து 14 ஆயிரம் குழுக்களை உருவாக்கியிருக்கிறார், அதற்காக அவரை நான் பாராட்டுகிறேன்.**

**இந்தக் குழுக்களுக்கு இதுவரை 75 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டு இருக்கிறது. 75 ஆயிரம் கோடி ரூபாய் என்பது ஒரு பெரிய தொகைதான். ஆனால், என்னைப் பொறுத்தவரையில், இது இரண்டு மடங்காக, நான்கு மடங்காக உயரவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.**

**வீட்டுப் பெண்கள் விடுதலை பெற உரிமைத்தொகை!**

**நண்பர் சுப.வீரபாண்டியன் குறிப்பிட்டார், புதுமைப் பெண் திட்டம், மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் என்று பல புரட்சிகரமான திட்டங்களை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று. மாதம் ஆயிரம் ரூபாய் என்பது ஒரு சிறிய தொகையாகத் தெரியும். ஆனால், அது சிறிய தொகையல்ல. மாதம் ஆயிரம் ரூபாய் என்பது ஒரு வீட்டில் கண்ணுக்குத் தெரியாத கயிறால் கட்டிப் போட்டதிலிருந்து விடுதலை ஆயிரம் ரூபாய் என்பது வீட்டுப் பெண்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தருகிற ஆயிரம் ரூபாய். நம்முடைய கைகளில் பணம் இருக்கிறது; நம்மால் ஓரிடத்திற்குப் போக முடியும்; ஒரு பொருளை வாங்க முடியும்; செலவழிக்க முடியும் என்பதே விடுதலை.**

**இந்த ஆயிரம் ரூபாயை, ஆயிரம் ரூபாயாகப் பார்க்காதீர்கள்; இந்த ஆயிரம் ரூபாய் என்பது உரிமைத் தொகை என்ன உரிமை? பல உரிமைகளைப் பெற்றுத் தருகின்ற உரிமைத் தொகை. இதையே உரிமை என்று நினைக்காதீர்கள்; இந்த உரிமையின் மூலமாக பல உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

**நமக்குத் தேவையான புத்தகங்களை வாங்கிப் படிக்கலாம்; நமக்கு வேண்டும் என்கின்ற பொருள்களை வாங்கலாம். நம்முடைய குழந்தைக்கு நாம் விரும்பிய உடையை வாங்கலாம். தொகை சிறியதாக இருக்கலாம் ஆனால், அந்த உரிமைத் தொகையின் மூலமாக எத்தனை உரிமைகள் கிடைக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.**

**ஒரு கோடியே 15 லட்சம் குடும்பங்கள் பயனடைகின்றன. இதில் ஜாதியா பார்த்தார்கள்? மதமா பார்த்தார்கள்? கட்சியா பார்த்தார்கள்?**

**எல்லா ஜாதிப் பெண்களுக்கும் கிடைக்கிறது அல்லவா! எல்லா மதத்தைச் சார்ந்த பெண்களுக்கும் கிடைக்கிறது அல்லவா! அதுதான் வெற்றி! இதுதான் சமுதாயத்தைப் பிணைக்கும் மக்களை இணைக்கும்.**

**பெண்களுக்கு வாய்ப்பு இருந்தால் சாதிப்பார்கள்!**

**ஒரு தாய் வயிற்று மக்கள்; தமிழ்நாட்டு மக்கள் தமிழர்கள் என்ற உணர்வை இணைக்கும். ஒரு கோடியே 15 லட்சம் குடும்பத் தலைவிகள் இன்றைக்கு ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள் அதை நான் பெருமையாக இங்கே சொல்கிறேன். அதனுடைய விளைவுகள் இப்பொழுதே தெரிகிறது. தொடர்ந்து பெண்களுக்காக இருந்த அரசுகள், தமிழ்நாட்டில் செய்த ஒவ்வொரு காரியத்தினுடைய பலன்களும் இப்பொழுதுதான் தெரிகிறது. சென்ற ஆண்டு குரூப்1 தேர்வு நடந்தது. அய்.ஏ.எஸ்.சிற்கு அடுத்த தேர்வு என்று பல பேர் விரும்புகின்ற தேர்வு. தமிழ்நாட்டில் குரூப்1 தேர்வில் 65 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்; அதில் 40 பேர் பெண்கள். குரூப்2 தேர்வு இந்த ஆண்டு நடந்தது. முதல் ரேங்க் பெண்; இரண்டாவது ரேங்க் பெண்; மூன்றாவது ரேங்க் பெண்; நான்காவது ரேங்க் பெண். பதிமூன்றாம் ரேங்க் வரை பெண்கள்தான்.**

**இது எதைக் காட்டுகிறது? பெண்களுக்கு வாய்ப்பு, பெண்களுக்கு உரிமை, பெண்களுக்குச் சுதந்திரம், பெண்களுக்கு விடுதலை வந்தால், நிச்சயமாக ஆண்களுக்கு நிகராக எதையும் செய்ய முடியும் என்று காட்டுவார்கள்.**

இதில் வேடிக்கை என்னவென்றால், ஒரு 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது. அதனை ஒப்புக்கொள்வதில் வெட்கமில்லை.

ராஜீவ் காந்தி அவர்கள், பஞ்சாயத்து ராஜ் சட்டத்தைக் கொண்டு வந்து, பிறகு பெண்களுக்கு ஒதுக்கீடு செய்தார். 33 சதவிகிதம் இருந்தது, பிறகு 50 சதவிகிதமாக ஆயிற்று. பல பெண்கள் பஞ்சாயத்துத் தலைவர்களாக, உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால், அந்த நாற்காலிகளுக்குப் பின்னால், ஒரு ஆண் நின்று கொண்டிருப்பார். இல்லை என்று சொல்லவில்லை, நிச்சயம் இருந்தார்கள்.

இன்றைக்கு அது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்திருக்கிறது. ஏனென்றால், பெண்கள் நாங்களே நடத்த முடியும் என்று இன்றைக்கு உரிமையை வலியுறுத்துவதால், அன்றைக்குப் பின்னால் நின்ற மெய்க்காப்பாளர் வெளியே போயிருக்கிறார்கள்.

வடநாட்டில் பல மாநிலங்களில் இருக்கிறது. அதற்குப் பெயரே வைத்திருக்கிறார்கள். பஞ்சாயத்துத் தலைவருக்குப் பெயர் பிரதானம் இது சமஸ்கிருத வார்த்தை. பஞ்சாயத்துத் தலைவர் பெண்ணாக இருந்தால், அவருக்குப் பின்னால் நிற்கின்ற மெய்க்காப்பாளருக்கும் பெயர் வைத்திருக்கிறார்கள்; பதிப்பிரதான் என்பதுதான் அது.

இன்றைக்கும் அது நடக்கிறது. ராஜஸ்தானில், பீகாரில், உத்தரப்பிரதேசத்தில் இதுபோன்ற நிலைமை இன்னும் இருக்கிறது. இன்னும் ஒரு 10 ஆண்டுகளில் அந்த நிலைமை மாறும் என்று நம்புகிறோம். ஆனால், பெண்கள் தங்களுக்கு சம உரிமை கிடைத்துவிட்டதாக நினைக்கக் கூடாது. சம உரிமை கிடைக்கத் தொடங்கியிருக்கிறது. இன்னும் நீண்ட பயணம் இருக்கிறது. அந்த நீண்ட பயணத்தை முடிக்கின்ற வரையில் ஓயக் கூடாது; ஓய்வெடுக்கக் கூடாது.

**கலைஞரின் கனவு இல்லம்!**

கலைஞருடைய கனவு இல்லம் என்று நண்பர் சுப. வீரபாண்டியன் அவர்கள் குறிப்பிட்டார் இங்கே. அதை நான் பாராட்டுகிறேன்.

ஒரு லட்சம் வீடுகளைக் கட்டப் போகிறது தமிழ்நாடு அரசு. ஒரு வீட்டிற்கு மூன்றரை லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இன்றைய விலைவாசியில், மூன்றரை லட்சம் ரூபாயில் ஒரு சிறிய வீட்டைக் கட்டலாம். குறிப்பாக கிராமப் பகுதிகளில் கட்டலாம்.

அதற்காக 3 ஆயிரத்து 500 கோடி ரூபாயை முதலமைச்சர் ஒதுக்கியிருக்கிறார். 2 ஆயிரம் கிலோ மீட்டர் கிராமச் சாலைகள் மேம்பாட்டிற்காக ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார். 5 ஆயிரம் நீர் நிலைகளைப் புதுப்பிப்பதற்கு 500 கோடி ரூபாய். 4,457 நகர்ப்புறச் சாலைகளுக்கு 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய்.

அடையாறு ஆற்றைத் தூய்மைப்படுத்துவதற்கு, கூடுவாஞ்சேரியிலிருந்து சைதாப்பேட்டைவரை ஆயிரத்து 500 கோடி ரூபாய். ஆயிரம் புதிய வகுப்பறைகள் கட்டுவதற்கு ஆயிரம் கோடி ரூபாய். எப்படி பணத்தை செலவழிக்கவேண்டும் என்றால், இப்படித்தான் செலவழிக்கவேண்டும்.

**கட்டுமான வசதிகள்!**

எப்படி பணத்தை செலவழிக்கக் கூடாது என்பதற்கு பல உதாரணங்களைச் சொல்ல முடியும். எப்படி பணத்தைச் செலவழிக்கவேண்டும் என்பதற்கு உதாரணம் இதுதான் கல்வி, மருத்துவம், சாலைகள், நீர்நிலைகள், தூய்மையான காற்று, தூய்மையான நீர், வீடு இவற்றிற்காக ஓர் அரசு செலவழிக்கவேண்டும். மற்றவற்றிற்காக செலவழிக்கவேண்டாம் என்று சொல்லவில்லை.

ஆனால், நம்முடைய முக்கியமான நோக்கம் என்னவென்றால், மனிதனுடைய ஆற்றல் வெளிப்படுவதற்கு, மனிதன் சுயமாக பல தொழில்களைத் தொடங்குவதற்கு, கண்டுபிடிப்புகளை செய்வதற்கு, இந்தக் கட்டுமானம் மிகவும் முக்கியம்.

தொடர்ச்சி 10 – ஆம் பக்கம்

# முதல்வரின் மனிதநேயம்தான் தமிழ்நாட்டைக் காத்து வருகிறது!

## முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் பேச்சு! 9– ஆம் பக்கத் தொடர்ச்சி

அந்தக் கட்டுமானத்தில் தமிழ்நாடு அரசு மேலும் மேலும் அக்கறை காட்டுகிறது என்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இதே பாதையில் தொடர்ந்து கட்டுமான வசதிகளிலே தமிழ்நாடு அரசு தொடர்ந்து அக்கறை காட்டவேண்டும் என்று முதலமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**கோவில் நிலங்கள் மீட்பு:**
**அமைச்சர் சேகர் பாபுக்கு பாராட்டு!**

இங்கே அமைச்சர் சேகர்பாபு அவர்கள், மனிதநேயத் திருவிழாவை நடத்துகிறார். மிகப்பெரிய மனிதநேய செயல் என்ன தெரியுமா? 6 ஆயிரத்து 809 ஏக்கர், 5 ஆயிரத்து 953 கோடியை மீட்டிருக்கிறாரே, அதுதான் உண்மையான மனிதநேயச் செயல். பராசக்தி திரைப்படத்தில் ஒரு வசனம் வரும். கோவில்கள் எல்லாம் கொள்ளையர்களின் கூடாரமாக மாறிவிட்டது என்று.

நான் கேட்கிறேன், யார் இந்த நிலங்களையெல்லாம் அபகரித்தார்கள்? வெளிநாட்டிலிருந்தா படையெடுத்து வந்து அபகரித்தார்கள்? அல்லது சுப.வீரபாண்டியன் போன்ற நாத்திகர்கள் அபகரித்தார்களா?

இதை கையாடியது, அபகரித்தது வெளிநாட்டுப் படையல்ல; உள்நாட்டு நாத்திகர்கள் அல்ல. ஆஸ்திகர்கள் அல்லவா அபகரித்தார்கள். நீங்கள் நாத்திகர்கள் கைகளிலிருந்து கோவிலை மீட்பதற்கு முன்பு ஆத்திகர்கள் கைகளிலிருந்து கோவிலை மீட்க வேண்டும். அதைத்தான் நம்முடைய அன்பிற்குரிய சேகர்பாபு அவர்கள் செய்கிறார்கள். நான் அவரை ஒவ்வொருமுறையும் பார்க்கும்பொழுது கேட்பேன், "இன்றைக்கு என்ன டோட்டல்" என்று. இன்றைக்கு வரைக்கும் 6 ஆயிரத்து 809 ஏக்கர்; 5 ஆயிரத்து 953 கோடி ரூபாய் என்று.

ஒரு சிறிய மாநிலத்தின் பட்ஜெட்டுக்கு ஈடானது இது. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், மதத்தின் பெயரால் நல்ல காரியமும் செய்யலாம்; மதத்தின் பெயரால் தவறான காரியங்களையும் செய்யலாம். அது மதத்தினுடைய குற்றம் அல்ல. மனிதனுடைய குற்றம் அது. மதத்தை நம்புபவர்கள் நம்பட்டும்; யார் வேண்டாம் என்கிறார்கள்.

சுப.வீரபாண்டியன் மிகத் தெளிவாகச் சொன்னார், "நான் மதத்தை நம்பவில்லை; ஆனால், நீங்கள் மதத்தை நம்பினால், நான் மதிக்கிறேன்" என்று.

**கடவுள் பற்றி**
**கலைஞர் சொன்னது என்ன?**

கலைஞரிடம் ஒரு கேள்வி கேட்டார்கள், "நீங்கள் கடவுளை நம்புகிறீர்களா?" என்பது கேள்வி. அவருக்கே உரிய சாதுரியம், பளிச்சென்று பதில் சொன்னார் "நான் கடவுளை நம்புகிறேனா என்பது முக்கியமல்ல; கடவுள் என்னை நம்புகிறாரா என்பதுதான் முக்கியம்" என்று. ஆக, கடவுளை நம்புகிறவர்களைப் பார்த்து நான் கேட்கிறேன், "கடவுள் உங்களை நம்புகிறாரா?" கடவுளை நம்புகிறவர்கள்தானே, கோவில் நிலங்களை அபகரித்தார்கள்.

இப்பொழுது சேகர்பாபு வந்து அதனை மீட்க வேண்டும் என்று எழுதியிருக்கிறது அல்லவா! ஆக, கோவில்கள் தவறல்ல; மதத்தில் தவறில்லை. அதனைத் தவறாகப் பயன்படுத்துவதுதான் தவறு. இன்றைக்குக்கூட சில கிராமங்களில் உள்ள கோவில்களில் தாழ்த்தப்பட்ட சமுகத்தைச் சேர்ந்தவர்களை அனுமதிப்பது கிடையாது. அதனை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்? ஏனென்றால், ஏற்றுக்கொள்ள முடியாது?

**2 ஆயிரம் ஆண்டு கலாச்சாரம்!**

இன்றைக்கு முகநூலில் ஒரு செய்தியைப் பார்த்தேன்; அது எந்த அளவிற்கு உண்மை என்று எனக்குத் தெரியவில்லை.

அந்தப் பெண்ணும், மாப்பிள்ளையும் நாங்கள் இந்துக்கள் என்று சொல்கிறார்கள். அந்தப் பெண்ணுக்கு கிறித்துவ பெயர் போன்று இருப்பதால், இந்துக் கோவிலில் கல்யாணம் செய்யக் கூடாது என்று தடுத்துவிட்டார்கள்.

அவர்கள் இருவரும் நாங்கள் இந்துக்கள் என்று எழுதிக் கொடுத்தார்கள். நாங்கள் இந்து மதத்தின்மீது நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்று.

என்னைப் பொறுத்தவரையில், கோவில்கள் என்பது, தமிழ்நாட்டுக் கோவில்கள் என்பது மிகப் பெரிய வரலாற்றுச் சொத்து. கலாச்சார சொத்து. கலாச்சார களஞ்சியம்.

தமிழ்நாட்டினுடைய வளர்ச்சியை, தமிழ்நாட்டினுடைய வரலாறையெல்லாம் முழுமையாகத் தெரிந்துகொள்ளவேண்டும் என்றால், கோவில்களில், கோவில்களில் உள்ள கல்வெட்டுகளில், கோவில்களின் தலபுராணங்களில்தான் தெரிந்து கொள்ளலாம்.

அந்த அளவிற்குக் கோவில்களை, அது கோவில் என்பதற்காக நான் மதிக்கிறேன். அந்தக் கோவில்களில்தான் 2 ஆயிரம் ஆண்டுகளுடைய வரலாறு அடங்கியிருக்கிறது. 2 ஆயிரம் ஆண்டுகளுடைய கலாச்சாரம் அடங்கியிருக்கிறது. அந்தக் கோவில்களைப் பாதுகாக்கவேண்டிய கடமை எல்லோரையும் சார்ந்தது. நாத்திகர்கள், ஆத்திகர்கள் ஆகிய எல்லோரையும் சார்ந்தது. அந்தக் கடமையை செவ்வனே செய்யக்கூடிய அருமை நண்பர் சேகர்பாபு கூட்டிய இந்த நிகழ்வில் கலந்துகொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

**மக்கள் என்ன ஏமாளிகளா?**

தேர்தல் வருகிறது அதற்குக் கட்டியம் கூறுவதுபோன்று, சமையல் கியாஸ் சிலிண்டருக்கு 100 ரூபாய் குறைத்திருக்கிறார் பிரதமர் மோடி என்று சுப.வீரபாண்டியன் சொன்னார்.

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு பாலைவனத்தில் போகின்ற ஒட்டகத்தினுடைய முதுகில், மிகப்பெரிய சுமையை ஏற்றி வைத்தார்களாம். அப்படி ஏற்றி வைத்துவிட்டு, ஒரு கம்பை மட்டும் எடுத்து, அந்த ஒட்டகம் பார்க்கும்படியாக ஒட்டகத்தின் முன்பு போடுவார்களாம்; அந்த ஒட்டகம் நம்புமாம்; அடடே, பெரிய சுமையை இறக்கி வைத்துவிட்டார்கள் என்று.

அதுபோன்று, 700 ரூபாய் உயர்த்திவிட்டு, 100 ரூபாயைக் குறைக்கிறீர்கள். 700 ரூபாய் உயர்த்திவிட்டு, 100 ரூபாய் குறைத்தால், இங்கே இருக்கின்றவர்கள் எல்லாம் ஏமாளிகளா? நான் கேட்கிறேன், 700 ரூபாய் விலையை உயர்த்திவிட்டு, 100 ரூபாய் குறைத்தால், நீங்கள் எல்லாம் ஏமாளிகள் என்று நம்பித்தானே செய்கிறார்கள்.100 ரூபாய் குறைத்ததை நான் வரவேற்கிறேன். ஆனால், நான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், 100 ரூபாய் கூட்டமாட்டேன் என்று சொல்லவேண்டும் அல்லவா!

**பெட்ரோல்– டீசல் விலை!**

நாங்கள் ஆட்சியில் இருக்கும்பொழுது ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 146 டாலர். சவுதி அரேபியாவின் தலைநகரில் உலகம் தழுவிய மாநாடு ஒன்று நடைபெற்றது. அதில், எப்படி கச்சா விலையைக் கட்டுப்படுத்துவது? எப்படி பெட்ரோல் விலையைக் கட்டுப்படுத்துவது? டீசல் விலையை எப்படிக் கட்டுப்படுத்துவது? என்பதற்காகவே ஒரு மாநாடு நடைபெற்றது.

எல்லா நாட்டு நிதியமைச்சர்களும், பெட்ரோலியத் துறை அமைச்சர்களும் வந்திருந்தார்கள். நானும், நட்வர்சிங் அவர்களும் இந்தியாவின் சார்பில் அந்த மாநாட்டிற்குச் சென்றிருந்தோம்.

எங்களுடைய கோரிக்கை, இதற்குமேல் விலையை அதிகரிக்கக் கூடாது. எண்ணெய் வளம் உள்ள நாடுகள், இந்த அளவிற்குமேல் விலையைக் குறைக்கக் கூடாது.

கீழேயும் ஒரு கோட்டை வரைந்து, மேலேயும் ஒரு கோட்டை வரைந்து அந்தக் கோட்டிற்குள்தான் கச்சா எண்ணெய் விலை இருக்கவேண்டும் என்று நிர்ணயம் செய்யுங்கள் என்று சொன்னோம்.

பல பேர் அதனை ஆதரித்தார்கள். எண்ணெய் தயாரிக்கும் நாடுகள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. பல நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த மாநாடு தோல்வியில் முடிந்தது.

அன்றைக்குக் கச்சா விலை ஒரு பீப்பாவிற்கு 146 டாலராக இருந்தது.

அந்த நேரத்தில்கூட, இந்திய அரசு பெட்ரோல் விலையை 70 ரூபாய்க்குமேல் உயர்த்தவில்லை. டீசல் விலை 60 ரூபாய்க்குமேல் இல்லை. நரேந்திர மோடி பிரதமராக வந்தபொழுது, கச்சா எண்ணெய்யின் விலை மளமளவென்று சரிந்தது. 40 டாலராக இருந்தது. இன்றைக்கு 80 டாலர். ஆனால், அவர் ஆட்சிக்கு வந்தபொழுது 40 டாலர். அப்பொழுதுகூட பெட்ரோல், டீசல் விலையை அவர் குறைக்கவில்லை.

ஆண்டொன்றிற்கு இரண்டரை லட்சம் கோடி ரூபாய் அவர்களுக்கு ஆதாயமாகக் கிடைத்தது விலையைக் குறைக்காததினால். 40 டாலராக குறைந்தபொழுதும், அப்பொழுதுகூட விலையை அவர்கள் குறைக்கவில்லை. இன்றைக்கும் 80 டாலராகத்தான் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெயின் விலை இருக்கிறது. ஆனால், ஒரு லிட்டர் பெட்ரோல் 101 ரூபாயாக இருக்கிறது.

இந்த அளவிற்கு விற்கவேண்டிய தேவையே இல்லை. இந்த விலை என்பது நம்மீது வைத்திருக்கக் கூடிய சுமை. சமையல் எரிவாயு சிலிண்டர் 1100 ரூபாய் என்பது, நம்மை ஒட்டகமாக வைத்து, பொதியை சுமக்க வைக்கிறார்கள். பிறகு 100 ரூபாய் குறைப்பதுபோன்று, ஒட்டகத்தின்முன் போடுவதுபோன்று, நம்மை ஏமாளிகள் என்று நினைக்கிறார்கள்.

**உரத்த குரலில்**
**சொல்ல வேண்டும்!**

நாம் ஏமாளிகள் அல்ல என்பதை உரத்தக் குரலில் சொல்வதற்கு ஒரு வழி இருக்கிறது. இன்றைக்குச் சொல்லவேண்டாம்; மனதில் வைத்துக் கொள்ளுங்கள்! சொல்லவேண்டிய நாள் சொல்லவேண்டிய முறை உங்களுக்கெல்லாம் தெரியும்.

நாங்கள் ஏமாளிகள் அல்ல நீங்கள் எங்களை ஏமாற்றுகிறீர்கள்; ஆனால், நாங்கள் ஏமாளிகள் அல்ல என்று சொல்லவேண்டிய நாள் வரும் பொழுது, உரத்த குரலில் சொல்லவேண்டும் என்று உங்களையெல்லாம் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது தேர்தல் வரப் போகிறது; தேர்தல் வருவதற்கான அறிகுறிகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. தேர்தல் வரும் பொழுதுதான், திடீர் திடீரென்று அறிவிப்புகள் எல்லாம் வரும்.

பிப்ரவரி 24 ஆம் தேதியிலிருந்து மார்ச் 7 ஆம் தேதிவரை கணக்கெடுத்தேன். இந்த 14 நாள்களில், பிரதமர் போகாத மாநிலமே கிடையாது; புதிய திட்டங்களை அறிவிக்காத நாளே கிடையாது.

அறிவித்த கூட்டுத்தொகை 5 லட்சத்து 90 ஆயிரத்து 661 கோடி ரூபாய். தமிழ்நாட்டிற்கு வந்த ஒரு நாள் 17 ஆயிரத்து 300 கோடி ரூபாயை அறிவித்திருக்கிறார். அப்படி அவர் அறிவித்தவுடன், எல்லோரும் வாயைத் திறந்து வியந்து பார்க்கிறார்கள்.

**அறிவிப்பு மட்டும் தான்:**
**திட்டங்கள் இருக்காது!**

இதில் கசப்பான உண்மை என்னவென்றால், 5 லட்சத்து 90 ஆயிரத்து 661 கோடி ரூபாய்க்கு தமிழ்நாடு உள்பட 17 ஆயிரத்து 300 கோடி ரூபாய்க்கு 31 மார்ச் மாதம் முடிகின்ற பட்ஜெட்டிலும், 1.4.2024 இல் தொடங்குகின்ற பட்ஜெட்டிலும் ஒரு ரூபாய்கூட ஒதுக்கவில்லை.

முடிந்த ஆண்டில் ஒதுக்கியிருக்கிறார்களா, என்றால் இல்லை! அல்லது தொடங்குகின்ற ஆண்டிலாவது ஒதுக்கியிருக்கிறார்களா, என்றால் கிடையாது!

இவையெல்லாம் அறிவிப்புகள்தான். திட்டமே இருக்காது! டி.பி.ஆர். என்று சொல்வார்கள்; டீடெய்ல் புராஜெக்ட் ரிப்போர்ட்டே இருக்காது.

தோன்றியதையெல்லாம் அறிவிப்பார்கள்; இன்னும் அறிவிப்பார்கள். அவர்கள் அறிவிக்கின்றவரையில் தேர்தல் தேதி வராது; அறிவிப்புகள் எல்லாம் முடிந்துவிட்டால்தான், தேர்தல் தேதி அறிவிப்பு வரும். 11 ஆம் தேதி தேர்தல் என்றைக்கு என்கிற அறிவிப்பு வரும் என்று முதலில் சொன்னார்கள். 13 ஆம் தேதி மோடி குஜராத்திற்குப் போகிறார். அதற்குப் பிறகுதான் தேர்தல் தேதி அறிவிப்பு வரும். இன்னும் தொடர்ந்து அறிவிப்புகள் வரும். கூட்டுத் தொகை 10 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டினாலும் தாண்டும்.

எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், மக்களை ஏமாளிகளாக நினைத்து இவற்றையெல்லாம் அறிவிக்கிறார்கள். மக்கள் அவ்வளவு ஏமாளிகள் அல்ல என்று நான் நினைக்கிறேன். சில நேரங்களில் மக்கள் ஏமாறுகிறார்கள்.

2014 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலிலும், 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலிலும் இந்தியாவில் உள்ள ஒரு பகுதி மக்கள் ஏமாந்து வாக்களித்தார்கள்; நான் இல்லை என்று சொல்லவில்லை.

**தொடர்ந்து ஏமாற மாட்டார்கள்!**

ஆனால் தொடர்ந்து ஏமாளிகளாக மக்கள் இருப்பார்கள்; தொடர்ந்து எல்லா இந்தியர்களும் ஏமாறுவார்கள் என்று நினைப்பது தவறு.

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள் . எல்லோரையும் எல்லா நேரத்திலும் ஏமாளிகளாக நினைத்து ஓர் அரசு நடந்துகொண்டிருக்கிறது. அதற்கு எப்படி விழிப்படைந்த தமிழ்நாடு, குறிப்பாக விழிப்படைந்த தமிழ்நாட்டுப் பெண்கள் எப்படி பதில் சொல்கிறார்கள் என்பதை நான் எதிர்பார்த்து நிற்கிறேன்.

உரத்த குரலில், துணிவோடு துணிவே துணை! துணிவே துணை!

அச்சமில்லை, அச்சமில்லை, அச்சம் என்பதில்லையே.

உச்சிமீது வானிடிந்து விழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை, அச்சம் என்பதில்லையே! என்று உரத்த குரலில் நீங்கள் சொல்லி, வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு மேனாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் உரையாற்றினார்.

---



சிங்கம்புணரி ஒன்றியப் பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் முடிவுற்ற பணிகளை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கணேசன், அம்பலமுத்து சோமசுந்தரம், பாலசுப்பிரமணியன், பூமிநாதன், கதிர்வேல், சிவக்குமார், ராசு, ஆனந்த கிருஷ்ணன், புகழேந்தி, சிவசுப்பிரமணியன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

### நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் பேட்டை பகுதி

# 18வது வார்டில் ஏழை மூதாட்டிக்கு வீடு - திண்ணைப் பிரச்சாரம்!

### மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில்!

நெல்லை.மார்ச்.12- முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் பேட்டை பகுதி 18 வது வார்டில் வசிக்கும் நரிக்குறவர் காலனியில் அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று தார்ப்பாயில் குடும்ப நடத்தி வந்த ஏழை மூதாட்டிக்கு அழகான கூரை வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து "இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்"திண்ணைப் பிரச்சார செய்யப்பட்டது.

நெல்லை மாநகராட்சிக்கு உட்பட்ட பேட்டை பகுதி 18 வது வார்டு நரிக்குறவர் காலனியில் வசிக்கும் அந்த பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் தார்ப்பாயில் குடும்ப நடத்தி வந்த ஏழை மூதாட்டிக்கு கூரை வீடு வழங்கும் நிகழ்வு நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் தலைமையில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லதுரை,18 வது வார்டு மாமன்ற உறுப்பினர் சுப்பிரமணியன், வட்ட பிரதிநிதிகள் பாலகிருஷ்ணன், தர்வேஸ் மைதீன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மத்திய மாவட்ட அவை தலைவர் வி.கே.முருகன் பங்கேற்று கூரை வீட்டை துவக்கி வைத்து அந்த பகுதி மக்களுக்கு இனிப்பு வழங்கி மூதாட்டியிடம் வீட்டை ஒப்படைத்தார்.

அதனைத் தொடர்ந்து வீட்டில்"இல்லந் தோறும் ஸ்டாலினின் குரல்"என்ற திண்ணைப் பிரச்சார ஸ்டிக்கர் ஒட்டப்பட்டது.

நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி ஜவகர், வேங்கை வெங்கடேஷ், வட்டச் செயலாளர்கள் மாரிமுத்து, சடாமுனி, கேபிள் குமரேசன், மகளிர் அணியினர் பத்மாராஜேஸ்வரி, ஹமீதா, கழக நிர்வாகிகள் ஷெட்டி, சித்திக், செந்தில்குமார்,மகாராஜன், பெப்சி சரவணன், சார்லஸ், ராமச்சந்திரன், மைக் மணி, மார்க்கெட் நயினார், கிருஷ்ண குமார், அந்தோணி ராஜ், துரை, அருள்ராஜ், சண்முகராஜா, டைட்டஸ் கண்ணன், ரகுமான்ஷா, வினோத், பத்து, பாபநாசம், சாலமோன், கார்த்திக், மணிகண்டன், சுரேஷ், சங்கர், சங்கர நாராயணன், ராஜ்குமார், வேலாயுதம், ஐயப்பன், கார்த்திக் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நெல்லை மாநகர தி.மு.க சார்பில் நரிக்குறவர் காலனி பகுதியில் வசிக்கும் மக்களின் கஷ்டங்களை உணர்ந்து தொடர்ந்து அவர்களுக்கு கூரை வீடு கட்டிக் கொடுக்க உரிய நடவடிக்கையை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் எடுத்து வருகிறார். இது அப்பகுதி மக்களின் மத்தியில் மிகுந்த வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.

---

### திருச்சி தெற்கு மாவட்ட - மாநகர இளைஞர் அணி சார்பில்–

# இரண்டாவது இளைஞர் அணி - மாநில மாநாட்டின் 25 தீர்மானங்கள், திராவிட மாடல் அரசின் நிதிநிலை அறிக்கை- இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் விளக்க தெருமுனை கூட்டம்!



### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு !

கழக இளைஞர் அணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, திருச்சி தெற்கு மாவட்ட, மாநகர இளைஞர் அணி சார்பில் கீழ்க்கண்ட தேதிகளில் – இடங்களில் தலைமைக் கழக பேச்சாளர்கள்கலந்து கொண்டு இரண்டாவது இளைஞர் அணி மாநாட்டின் தீர்மான விளக்கம்,மற்றும் திராவிட மாடல் அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க தெருமுனைபிரச்சார கூட்டம் நடைபெறுகின்றது .

| வ.எண் | தேதி | கூட்டம் நடைபெறும் இடம் | இளைஞர் அணி அமைப்பாளர் | பேச்சாளரின் பெயர் |
|---|---|---|---|---|
| 1. | 13.03.2024 | மார்க்கெட் பகுதி | G.P.ராஜ்குமார் | கலைமணி பாரதி |
| 2. | 13.03.2024 | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | M.சரவண குமார் | வண்ணை அரங்கநாதன் |
| 3. | 14.03.2024 | திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் | சி.சுதாகர் | சேலம் சுஜாதா |
| 4. | 14.03.2024 | பாலக்கரை பகுதி | S.கார்த்திக் ராஜா | வி.பி.ராஜன் |
| 5. | 15.03.2024 | மணப்பாறை ஒன்றியம் | கோ.சக்தி பிரகாஷ் | புதுக்கோட்டை விஜயா |
| 6. | 15.03.2024 | திருவெறும்பூர் பகுதி | S.ஜோதி பாசு | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி |
| 7. | 16.03.2024 | துவாக்குடி நகரம் | S.செல்வம் | அத்திப்பட்டு சாம்ராஜ் |
| 8. | 16.03.2024 | கலைஞர் நகர் பகுதி | S.சரவணகுமார் | நெல்லிக்குப்பம் புகழேந்தி |
| 9. | 17.03.2024 | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | J.கார்த்திக் | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி |
| 10. | 17.03.2024 | மணப்பாறை நகரம் | நா.முகமது ஆசிப் | ஆண்டாள் பிரியதர்ஷினி |
| 11. | 18.03.2024 | வையம்பட்டி வடக்குஒன்றியம் | கி.கண்ணதாசன் | காவேரிப்பட்டினம் இளையராஜா |
| 12. | 18.03.2024 | அரியமங்கலம் பகுதி | M.தங்கபாண்டியன் | தமிழன் பிரசன்னா |
| 13. | 19.03.2024 | பொன்மலை பகுதி | S.வெங்கடேஷ்குமார் | வாசு விக்ரம் |
| 14. | 19.03.2024 | மருங்காபுரி மத்திய ஒன்றியம் | K.S.S.கார்த்திகேயன் | சைதை சாதிக் |
| 15. | 20.03.2024 | பொன்னம்பட்டி பேரூர் | S.வேல்மணி | கே.என்.சேகரன் |
| 16 | 20.03.2024 | கூத்தைப்பார் பேரூர் | A.ரஞ்சித் குமார் | ஆரணி மாலா |
| 17. | 21.03.2024 | காட்டூர் பகுதி | செ.தயாநிதி | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி |
| 18. | 21.03.2024 | மருங்காபுரி வடக்கு ஒன்றியம் | சோலை.சதீஷ் | சூரியா வெற்றிகொண்டான் |

**மு.ர.முத்து தீபக்**
மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்
திருச்சி மாநகரம் (கிழக்கு)

**அ.வெங்கடேஷ் குமார்**
மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்
திருச்சி தெற்கு மாவட்டம்

இக்கூட்டத்தை மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகசெயலாளர்களுடன் இணைந்து, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திட வேண்டுமாய் கேட்டுகொள்கின்றேன் .

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

---

### திருப்பத்தூர் ஒன்றியம்

# கவரையூரில் பேனா வடிவ சிலை - அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

திருப்பத்தூர், மார்ச் 12- திருப்பத்தூர் தொகுதி கவரையூர் கிராமத்தில் கலைஞரின் பேனா சிலையை அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்.

திருப்பத்தூர் ஒன்றியம், கவரையூர் கிராமத்தில் அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலில் கலைஞரின் புகழை போற்றும் வகையில் பேனாசிலைநிறுவப்பட்டது. அதனை எம்.எல்.ஏ. அ.நல்லதம்பி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றியக் குழு தலைவர் விஜியா அருணாசலம், துணை சேர்மன் டி.ஆர்.ஞான சேகரன், மு. கூட்டுறவு சங்க தலைவர் தேவராஜன், மாவட்ட பிரதிநிதி சிவலிங்கம், ஒன்றிய கவுன்சிலர் கஸ்தூரிரகு, ஊராட்சிமன்ற தலைவர்கள். கோமதி கார்த்திகேயன், சரஸ்வதிஜெயகுமார், ஸ்தபதிஞானவேல், திருமலை வாசன், எ.ஆதித்யா, சிவ பிரகாசம், பாலாஜி, கர்ணன், சாம்ராஜ், கோவிந்தராஜ், ஆனந்தன், துணைத்தலைவர். தீபா, திருப்பதி, பெருமாள் உள்ளிட்ட கழக முன்னோடிகள், இளைஞர்கள், தாய்மார்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து அருகில் உள்ள கோனேரிகுப்பம் கிராமத்தில் கழகத் தலைவர் பிறந்த நாள் விழா மற்றும் பட்ஜெட் விளக்க தெருமுனைகூட்டம் சிறப்பாக நடைபெற்றது. இதில் கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் கரூர் முரளி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

ஒன்றிய அவைத்தலைவர் சின்னதம்பி, ஒன்றியதுணை செயலாளர்கள் கழகரசு, சின்னதம்பி, விஜியா, மாவட்ட பிரதிநிதிகள் ராஜேந்திரன், சரவணன், சிவலிங்கம், ஒன்றிய பொருளாளர் செல்வம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த கூட்டத்தின் இறுதியில் ஊராட்சிமன்ற தலைவர் சரஸ்வதிஜெயக்குமார் நன்றி கூறினார்.



நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் பேட்டை பகுதி 18 ஆவது வார்டு நரிக்குறவர் காலணியில் அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று தார்ப்பாயில் குடும்பம் நடத்தி வந்த ஏழை மூதாட்டிக்கு கூரை வீடு அமைத்து கொடுத்து ஒப்படைக்கும் நிகழ்வு நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் தலைமையில் நடைபெற்றது. மாநகர செயலாளர் சுப்பிரமணியன் முன்னிலையில் கூரை வீட்டை மத்திய மாவட்ட அவைத்தலைவர் முருகன் திறந்து வைத்து மூதாட்டியிடம் வழங்கினார்.நிகழ்வில் அப்துல் கையூம்,அன்டன் செல்லதுரை, மாமன்ற உறுப்பினர் சுப்பிரமணியன் உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.வீட்டில்இல்லந் தோறும் ஸ்டாலினின் குரல்என்ற திண்ணை பிரச்சாரம் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டது.

# வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் மோடி ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டும்!

## திருவல்லிக்கேணி வியாபாரிகள் சங்க விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, மார்ச் 12-**

**சென்னை, சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில், திருவல்லிக்கேணி வியாபாரிகள் சங்கத்தின் 49வது ஆண்டு விழா, நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.**

அப்பொழுது அவர் பேசியதாவது:-

இங்கே அண்ணன் வி.பி.மணி அவர்கள் பேசும்பொழுது, `தொடர்ந்து மூன்று வருடங்களாக இந்த நிகழ்ச்சிக்கு என்னை எப்படியாவது வரவழைக்க வேண்டும்' என்று முயற்சி செய்ததாகச் சொன்னார். இன்று கடைசியாக அவர் வெற்றிப் பெற்றிருக்கிறார்.

உண்மையாகவே அவர் சொன்னதுபோல நான் இந்த நிகழ்ச்சியில் அமைச்சராகக் கலந்து கொள்ளவில்லை. சட்டமன்ற உறுப்பினராகக் கலந்து கொள்ளவில்லை. எனவே எந்தக் கோரிக்கையையும் என்னிடம் வைக்க முடியாது. ஆனால், நான் உரிமையோடு சொல்வேன். உங்கள் வீட்டுப் பிள்ளையாக, இந்தச் சேப்பாக்கத்தின் செல்லப் பிள்ளையாகத் தான் நான் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னொரு உறுதி மொழியும் நான் தருகின்றேன். மூன்று வருடமாக நான் வரவில்லை. இன்றைக்கு மிகச் சிறப்பாக 49 வது ஆண்டு விழாவை, இங்கு மாலை நாலு மணியிலிருந்து சிறப்பாகக் கொண்டாடி கொண்டிருக்கிறீர்கள். அடுத்த ஐம்பதாவது ஆண்டு, சிறப்பான நிகழ்ச்சியில் அடுத்த வருடம் நான் உங்களை எல்லாம் சந்திக்க ஆசைப்படுகிறேன். அந்த நிகழ்ச்சியில் நிச்சயம் கலந்துகொள்வேன் என்ற வாக்குறுதியையும் தருகிறேன்.





**குடும்பங்களின் விழா!**

நான் வரும்பொழுது வெறும் வணிகர்கள் தான் இருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டு வந்தேன். ஆனால் இங்கு வந்து பிறகு தான் பார்க்கிறேன் நீங்கள் அத்தனை பேரும் குடும்பத்தோடு வந்திருக்கிறீர்கள். எனவே, உங்கள் குடும்பத்துடன் என்னையும் இணைத்துக் கொள்ளுங்கள். அதனால்தான் நான் பெருமையாகச் சொல்கிறேன். நான் உங்கள் வீட்டுப் பிள்ளை. உங்கள் வீட்டு செல்லப் பிள்ளையாகத்தான் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறேன்

இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த அண்ணன் வி.பி.மணி அவர்களுக்கு மீண்டும் என்னுடைய பாராட்டுகள். அனைத்து நிர்வாகிகளுக்கும் என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கு அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் மிக மிக முக்கியமான தேர்தல். இன்னும் 50 நாட்களில் நம் நாட்டின் பிரதமர் யார் என்று தேர்ந்தெடுக்கப் போகின்ற தேர்தல்.

**பிரச்சாரத்தை முன்னெடுக்க வேண்டும்!**

கண்டிப்பாக தமிழ்நாட்டில் நிச்சயம் ஒன்றிய பா.ஜ.க. அரசை ஓடத்தான் விடப்போகிறோம். தமிழ்நாட்டு மக்கள் என்றைக்கும், பா.ஜ.கவிற்கு ஆதரவாக இருக்க மாட்டார்கள். நம் தலைவர் யாரை முடிவு செய்கிறாரோ அவர்தான் அடுத்த பிரதமராக அமர வேண்டும்.

இந்த வணிகர் பெருமக்களாகிய நீங்கள்தான் பொதுமக்களோடு தினமும் பழகுகின்ற வாய்ப்பைப் பெற்றவர்கள். குடும்பங்களுடன் பேசக்கூடியவர்கள் அவர்களின் பிரச்சினைகளைக் கேட்கக் கூடியவர்கள். எனவே நீங்கள் இந்தப் பிரச்சாரத்தை முன்னெடுக்க வேண்டும்.

அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள், 'இது வியாபாரிகள் மாநாடு. நாம் சாதாரண வியாபாரிகள் முதல் பெரிய வியாபாரிகள் வரை அத்தனை வியாபாரிகளையும் இன்று சந்தித்துக்கொண்டு இருக்கிறோம்' என்று சொன்னார்கள்.

ஆனால், மோடி அவர்களுக்குத் தெரிந்த அந்த ஒரே ஒரு வியாபாரி யார் என்று உங்களுக்கே தெரியும். அவர் பெயர் அதானி. அதானி யார் என்று பார்த்தால் மிகப்பெரிய வியாபாரி. உலகப் பணக்காரர் பட்டியலில் இரண்டாவது இடம்.

**ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டும்!**

கம்பெனி ஆரம்பித்து, கடந்த 9 வருடத்தில் இவ்வளவு பெரிய வளர்ச்சி. அதற்கு எப்படிக் காரணம் அவர் மோடி அவர்களின் மிக மிக நெருங்கிய நண்பர். இருக்கின்ற அனைத்துப் பொதுத் துறைகளையும் ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் இந்த எட்டு ஒன்பது வருடத்தில் அதானியிடம் தூக்கிக்கொண்டு போய் கொடுத்துவிட்டார்.

அதானி ஏர்போர்ட் வந்துவிட்டது, அதானி ரயில்வே ஸ்டேஷன் வந்துவிட்டது. அதானி தண்ணீர் வந்துவிட்டது. அதானி ட்ரெயில் வந்துவிட்டது. இப்படி அனைத்துப் பொதுத் துறைகளையும் தனியார் துறை ஆக்கியதுதான் இந்தக் கடந்த ஒன்பது வருடம் மோடியின் ஆட்சி லட்சணம். எனவே இந்த ஆட்சிக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்றால், அடுத்து வருகின்ற தேர்தலில், நீங்கள் அத்தனை பேரும் உதயசூரியன் சின்னத்திற்கும் நம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கும் வாக்களிக்க வேண்டும்.

நம் தலைவர் யாரை அறிவிக்கிறார்களோ அந்தக் கூட்டணி ஏன் ஜெயிக்க வேண்டும்' என்ற பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஏனென்றால், நீங்கள் எல்லாம் உழைப்பால் உயர்ந்தவர்கள். அதானி போல மோடியின் தயவால் நீங்கள் எல்லாம் உயர்ந்தவர்கள் கிடையாது. அண்ணன் வி.பி.மணி அவர்கள் அவர் எப்படிப் படிப்படியாக உழைப்பால் உயர்ந்தார் என்பதை சொன்னார்கள்.

இங்கு வந்திருக்கின்ற அத்தனை பேரும் உழைப்பால் உயர்ந்தவர்கள். உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என் வாழ்த்துகளைத் தெரிவித்து, இங்குக் கலைநிகழ்ச்சிகள் தொடர்ந்து நடக்கப் போகிறது என்று சொன்னார். எனவே அந்தக் கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளையும் என்னுடைய வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினரும் கழகத்தின் விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளருமான தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, வணிகர் சங்கத் தலைவர் வி.பி.மணி, பகுதிக் கழகச் செயலாளர் காமராஜ், சங்கத்தின் பொதுச் செயலாளர் பால்பாண்டியன், பொருளாளர் காசி பாண்டியன், அறக்கட்டளைத் தலைவர் குணசேகரன், வணிகர் சங்கப் பேரமைப்பு இணைச் செயலாளர் சந்திரசேகர், சங்கத்தின் சட்ட ஆலோசகர் மாமன்ற உறுப்பினர் சிவ.ராஜசேகரன், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ் உள்பட கழக நிர்வாகிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

### திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில்

## ரூ. 2.50 கோடியில் முடிவடைந்த 19 வளர்ச்சி திட்டப்பணிகள்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை, மார்ச் 12-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஊராட்சி பேரூராட்சி பகுதிகளில் ரூபாய் 2 கோடியே 32 லட்சத்தில் முடிவுற்ற 19, திட்டப்பணிகள் துவக்க விழா மாவட்ட வருவாய் அலுவலர் மோகன சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த திட்டப்பணிகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் மக்களுக்கு அர்ப்பணித்து சிறப்புரையாற்றினார்.

சிங்கம்புணரி ஒன்றியம் கோழிகுடிப்பட்டி, ஆறுகுடிப்பட்டி ஆகிய ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி ரூபாய் 6 லட்சத்திலும், கல்லம்பட்டி ஊராட்சியில் ரூபாய் 6 லட்சத்தில் பயணியர் நிழற்குடையும், ரூபாய் 8.50 லட்சம் மதிப்பீட்டில் கலையரங்கம், முறையூரில் ரூபாய் 25 லட்சத்து 99 ஆயிரம் மதிப்பில் புதிதாக ஊராட்சி மன்ற கட்டட அலுவலகம், சொக்கலிங்கம் புதூர் ஊராட்சி இடையன்குடி பட்டியில் ரூபாய் 7.50 மதிப்பீட்டில் கலையரங்கம், நேமத்தான்பட்டி, ஜமீன்தார் பட்டி, அரளிக் கோட்டை, ஒப்பிலான் பட்டி,எஸ்.வையாபுரிபட்டி ஆகிய ஊராட்சிகளில் ரூபாய் 13.45 மதிப்பில் புதிய மின்மாற்றிகள்,

கொத்தமங்கலம் ஊராட்சியில் ரூபாய் 8.50 லட்சம் மதிப்பிலான கலையரங்கம் கானாடுகாத் தான் வசந்தம் நகரில் ரூபாய் 8.50 லட்சம் மதிப்பிலான கலையரங்கம், கோட்டையூர் பேரூராட்சி வார்டு 1 வேலங்குடி புதூரில் ரூபாய் 7.50 லட்சத்தில் கலையரங்கம், வார்டு, 5ல் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 45 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பில் வளம்மீட்பு பூங்கா உரம் தயாரிக்கும் உலர் களத்திற்கு மேற்கூரை மற்றும் 8 மின்கல வாகனங்கள் துவக்கி வைத்தல், வார்டு. 5ல் 15வது மான்யக்குழு மூலமாக ரூபாய் 25.90 மதிப்பிலான பூங்கா, வார்டு 15ல் ரூபாய் 21 லட்சத்தில் பூங்கா, பாரிநகரில் ரூபாய் 12 லட்சத்தில் பயணியர் நிழற்குடை ஆக மொத்தம் 19 முடிவுற்ற பணிகளை மக்களுக்கு அர்ப்பணித்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். இதன் மதிப்பு ரூபாய் 2 கோடியே 32 லட்சம் ஆகும்.

இந்த நிகழ்ச்சியில் திட்ட இயக்குனர் சிவராமன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் புவனேஸ்வரி, தாமரைச்செல்வன், மலைராஜ், மெய்யப்பன், என். எம்.சுரேஷ், பேரூராட்சி மன்றத் தலைவர்கள் திருமதி ராதிகா கார்த்திக் சோலை, ஒன்றியக் குழு ஒன்றியச் செயலாளர்கள் கே.பாலசுப்பிரமணியன், பூமணி, கே.ஆர்.ஆனந்த், சுப.சின்னத்துரை, துணைச் செயலாளர்கள் முத்துக் குமார் சிவபுரி சேகர், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி உட்பட கழக நிர்வாகிகள், கலந்து கொண்டார்கள்.

### சின்னசேலம் அருகே தெங்கியாநத்தம்

## ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி நூற்றாண்டு விழா!

### உதயசூரியன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கள்ளக்குறிச்சி சின்னசேலம் மார்ச் 12 -

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் ஒன்றியத்துக்கு உட்பட்ட தெங்கியாநத்தம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நூற்றாண்டு விழா, நூற்றாண்டு நினைவு கொடிக்கம்பம் மற்றும் கல்வெட்டு திறப்பு விழா, மகளிர் தின விழா என முப்பெரும் விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினருமான உதயசூரியன் கலந்துகொண்டு தலைமை ஏற்று விழாவினை தொடங்கி வைத்து, பள்ளி நூற்றாண்டு விழா நினைவு கொடிக்கம்பம் மற்றும் கல்வெட்டு திறந்து வைத்தார்.

மேலும் இந்த பள்ளியில் பயின்று அரசு பணிகளில் சேர்ந்துள்ள முன்னாள் மாணவர்களுக்கு சால்வை அணிவித்து பாராட்டி நினைவு பரிசு வழங்கியும், குழந்தைச் செல்வங்களுக்கு பல்வேறு கருத்துக்களை வழங்கி மகளிர் தின விழாவை முன்னிட்டு மகளிர்க்கு சால்வை அணிவித்து வாழ்த்துக்களையும் தெரிவித்து விழாவை சிறப்பித்து சிறப்புரையாற்றினார்.

## சமூக வலைத்தளங்களில் வலம் வருவது!




## மானாமதுரை நகராட்சியில் ரூ.1 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகள்!

### முதல்வர் காணொளி மூலம் துவக்கி வைத்தார்!

சிவகங்கை, மார்ச் 12 –

சிவகங்கை மாவட்டம், மானா மதுரை நகராட்சியில் நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் ஒரு கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் விரிவாக்க கட்டிடங்களை சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மானாமதுரை நகராட்சி அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசாஅஜித், நகர்மன்றத் தலைவர் எஸ்.மாரியப்பன் கென்னடி துணைத்தலைவர் பாலாசுந்தர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் திருப்புவனம் பேரூராட்சி மன்றத் தலைவர் த.சேங்கை மாறன், ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி லதா அண்ணாதுரை, நகராட்சி ஆணையாளர் திருமதி ரங்கநாயகி, பொறியாளர் சீமா, மானாமதுரை நகரக் கழகச் செயலாளர் க.பொன்னுச்சாமி மானாமதுரை, மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.அண்ணாதுரை உட்பட நிர்வாகிகள், வார்டுக் கவுன்சிலர்கள், மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.



## நாடாளுமன்றத் தேர்தலை நடத்த அஞ்சும் பா.ஜ.க.!

இந்தியா முழுவதும் இதுவரை 350 தொகுதிகளில் பா.ஜ.க.வுக்கு எதிராக வலுவான போட்டியை ஏற்படுத்தும் வகையில், இந்தியா கூட்டணி தொகுதிப் பங்கீடு முடிந்துள்ளது.

இதன் உள்ளடக்கம் யாதெனில்,

இந்தியா முழுமையும் பற்றி எரியும் பா.ஜ.க. எதிர்ப்பலைதான்.

பா.ஜ.க. தலைமையிலான கூட்டணித் தொகுதிப் பங்கீடுகளை முடிக்கத் திணறி வருகிறது.

பா.ஜ.க. மீதான கடும் எதிர்ப்பலை,

டெல்லி விவசாயிகள் போராட்டம்,

தேர்தல் பத்திரம் ரத்து,

S.B.I மீதான கண்டனங்கள்

பலவும் ஒன்றிணைந்து தேர்தலையே தள்ளி வைக்க, பா.ஜ.க முயற்சிப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

தேர்தல் ஆணையரின் ராஜினாமாவும், சில மணி நேரங்களிலேயே ஜனாதிபதி அதை ஏற்றுக் கொண்டதும், சந்தேகத்தைக் கூடுதலாக்கியுள்ளது.

ஒரே நாடு, ஒரே தேர்தல் என்றார்கள்.

இப்போது ஒரே நாடு, தேர்தலே எதற்கு? என்கிறார்களோ?

பா.ஜ.க வீட்டுக்கும் நாட்டுக்கும்

தேர்தலுக்கும் கேடு.

**-சூர்யா சேவியர் முகநூல் பதிவிலிருந்து...**

## ஃப்ளாஷ்பேக்



தமிழ்ச்செல்வன்



### வரவேற்பு, வாழ்த்து!

முரசொலி நாளிதழில் பணிபுரிந்த என் தந்தை கயல் தினகரன், பின்னர், கழக இலக்கிய அணி இணைச் செயலாளராகவும் சென்னை நூலக ஆணைக் குழுவின் தலைவராகவும் பொறுப்பில் இருந்தவர். அவருடைய அழைப்பின் பேரில், அன்றைய சென்னை மாநகராட்சி மேயரும் இளைஞர் அணிச் செயலாளருமான தளபதி அவர்கள்,1999-ஆம் ஆண்டு பிப்ரவரி 14-ஆம் தேதி நடைபெற்ற தமிழ்ச்செல்வன்- மாலதி ஆகிய எங்களுடைய வரவேற்பு நிகழ்வில் பங்கேற்று வாழ்த்தினார்.

**-தமிழ்ச்செல்வன்,**
**புரசைவாக்கம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பாதுகாப்பு நிதி தந்த தி.மு.க!

1962-இல் சீன ஆக்கிரமிப்புக்கு எதிராகவும், நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஆதரவாகவும் நடைமுறை சாத்திய மானதுமான முதல் ஆதரவுக் குரலைக் கொடுத்தது தி.மு.கழகமே. எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் கூட்டத்தைக் கூட்டி, நாட்டைப் பாதுகாப்பதற்கான நிதியாக 35 ஆயிரம் ரூபாய் தி.மு.கழகத்தின் சார்பில், அளிக்கப்பட்டது. சீனப் போரில் பாதுகாப்பு நிதியாக, ஒரு கட்சியின் சார்பாக ஒரு சில மணி நேரத்தில், திரட்டிக் கொடுக்கப்பட்ட அதிகபட்ச நிதியாக இது அமைந்தது.

## முதல் முதலில் 2

## ‘முன்னோடி’ பந்தல்கள்!

**ந.வினோத்குமார்**





**மறைந்துவிட்ட முன்னோடிகளின் பெயர்களில் ‘மாநாட்டு வாயில்கள்’ ஏற்படுத்தப்பட்டிருக்கும்.**

2024-ஜனவரி 21 அன்று, இந்தியாவே திரும்பிப் பார்த்த திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாடு, சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் பிரமாண்டமாக நடைபெற்றது.

பொதுவாக, திராவிட இயக்க மாநாடுகளில் மாநாட்டுப் பந்தல்கள், தோரண வாயில்கள் ஆகியவற்றுக்கு மறைந்த நம் இயக்கத் தலைவர்களின் பெயர்களைச் சூட்டுவது மரபு. அதன் காரணம், அந்த மாநாட்டில் அவர்களை முன்னிலைப்படுத்தி நினைவுகூர வேண்டும் என்பதுதான். மேலும் அந்தத் தலைவர்கள் யார், அவர்கள் செய்த சாதனைகள் என்ன என்பவை குறித்து இளைய தலைமுறையினரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதும் அந்தப் பெயர் சூட்டலின் நோக்கம்.

இந்த மரபு எங்கிருந்து, எப்போது தொடங்கியது? 1929-ஆம் ஆண்டு பிப்ரவரி 17, 18 ஆகிய தேதிகளில் அன்றைய சென்னை மாகாணம், செங்கல்பட்டில், சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநாட்டை முன்னெடுத்தார் பெரியார். அந்த சுயமரியாதை மாநாடு நடைபெற்ற மாநாட்டுத் திடலுக்கு ‘சர் பிட்டி தியாகராயர் பெயர்’. மாநாட்டுப் பந்தலுக்கு ‘பனகல் அரசர்’ பெயர். மாநாட்டு மேடைக்கு ‘நாயர் அரங்கம்’ என்று பெயர்.

திராவிட இயக்க முன்னோடிகளின் பெயர்களை மாநாட்டுத் திடலுக்கும், பந்தலுக்கும், மேடைக்கும், நுழைவுவாயில்களுக்கும் வைத்து, நன்றி கூறும் உயரிய பண்பு, அந்த மாநாட்டில் இருந்துதான் தொடங்கியது.

இதில் இன்னொரு சிறப்பு என்னவென்றால், எந்தப் பகுதியில் மாநாடு நடைபெறுகிறதோ அந்தப் பகுதியைச் சார்ந்த, மறைந்துவிட்ட முன்னோடிகளின் பெயர்களில் ‘மாநாட்டு வாயில்கள்’ ஏற்படுத்தப்பட்டிருக்கும். பின்னாட்களில், மாநில மாநாடுகள் மட்டுமல்லாது, கழகத்தின் சார்பாக நடைபெறுகின்ற இதர மாநாடுகளுக்குக் கூட இந்த மரபு பின்பற்றப்பட்டுள்ளது. 1968-ஆம் ஆண்டு ஜூலை 12 அன்று மாயவரம் வட்டம் மணல்மேட்டில் நடைபெற்ற இரண்டு நாள் சமுதாயச் சீர்திருத்த மாநாட்டில், கழக முன்னோடி ‘வெள்ளைச்சாமிப் பந்தல்’ என்று மாநாட்டுப் பந்தலும், ‘மாணவர் சாரங்கபாணி’ பெயரில் அரங்கமும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

சேலத்தில் நடைபெற்ற நம் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில், ‘பெரியார் நுழைவாயில்’, ‘அண்ணா திடல்’, ‘கலைஞர் அரங்கம்’, ‘பேராசிரியர் மேடை’, ‘வீரபாண்டியார் கொடி மேடை’, ‘முரசொலி மாறன் புகைப்படக் கண்காட்சி அரங்கம்’ ஆகியவற்றோடு வீரபாண்டி ஆ.ராஜா, வீரபாண்டி செழியன், சந்திரசேகர், நீட் போராளிகள் அனிதா மற்றும் தனுஷ் ஆகியோரின் பெயர்களாலும் தோரண வாயில்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## பாசறை படிப்பறை


**கௌதம் ராஜ்** 2

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## ‘உடுமலை’ உடன்பிறப்பு!

தி.மு.கழகம் தொடங்கப்பட்ட முதல் சில ஆண்டுகளில் பல்வேறு தடைகளை மீறி வீறுகொண்டு வளர்ந்த வரலாறு சுவாரசியம் நிறைந்தவை. ஆனால், அவற்றில் பெரும்பாலானவை பதிவு செய்யப்படாமல் தொண்டர்களின் நினைவுகளாகத் தேங்கி மறைந்தவை. விதிவிலக்காக எஞ்சி நிற்கும் சில புத்தகங்களும் உண்டு. அப்படியான நூல்தான் புலவர் பண்ணன் எழுதியுள்ள ‘ப.நா.வுடன் 16 ஆண்டுகள்’.

அமைப்பைக் கட்டவும், மக்களைத் திரட்டவும், மிட்டா மிராசுகள் நிறைந்திருந்த காங்கிரஸ் கட்சியை எதிர்கொள்ளவும், சுயமரியாதைச் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பவும், பல்வேறு போராட்டங்களை நடத்தவும், கழகத் தொண்டர்கள் எடுத்துக்கொண்ட சிரத்தை ஏராளம். அப்படி ப.நாராயணன் அவர்கள் மேற்கொண்ட பணிகளையும், அந்தப் பணிகளின்போது ஏற்பட்ட அனுபவங்களையும் உணர்வுப்பூர்வமான நடையில் விவரித்துள்ளார் புலவர் பண்ணன். ப.நா.வுடன் இணைந்து செயல்பட்ட 16 ஆண்டு கால நினைவுகளைத் தொகுத்துப் புத்தகமாக நமக்களித்துள்ளார் பண்ணன். இந்நூலை வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு என்பதை விடவும், கழகத்தைப் பற்றிய நினைவுக்குறிப்பு என்றால் தகும்.




தமிழ்நாட்டின் மேற்கு மண்டலத்தில் கழகம் வளர்க்க, தொண்டாற்றிய முன்னோடிகளில் முக்கிய மானவர் உடுமலை ப.நாரா யணன். எளிய குடும்பத்தில் பிறந்து சைக்கிள் கடை வைத்து, அந்த சைக்கிள் கடையைக் கழக அலுவலகமாகப் பயன்படுத்தி, ஓயாமல் கழகப் பணியாற்றி, ஒருங்கிணைந்த கோவை மாவட்டச் செயலாளராகவும், இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்படும் நிலைக்கு உயர்ந்தார் ப.நா.

ஒலிப்பெருக்கியுடன், கழகக் கொள்கை சார்ந்த துண்டுப் பிரசுரங்களைத் தூக்கிச் சுமந்து சைக்கிளில் பிரச்சாரத்தைத் தொடங்கியது முதல், கோவை மாவட்டத்தில் வலுவான தொழிற்சங்கங்களைக் கட்டி எழுப்பியது வரையிலான வரலாற்றை பண்ணன் விவரிக்கிறார்.

புலவர் பண்ணன் மற்றும் உடுமலை ப.நா ஆகியோருக்கு இடையில் நிலவிய நெருக்கமான நட்பும், பல்வேறு முரண்பாடுகளுக்கு இடையிலும் அந்த நட்பு நீடித்து நிலைத்த விதத்தையும், நாடாளுமன்ற உறுப்பினராகிய பின்னரும் நன்றி மறவாமல் நட்புக்காகச் செய்த உதவிகளையும், அந்தக் காலத்தில் இரண்டு கழகத்தவருக்கும் இடையே நிலவிய உறவை வெளிப்படுத்துகிறது.

பெரியாரின் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தை, பேரறிஞர் அண்ணா தொடங்கிய போது கோவையிலிருந்து பல முக்கிய தலைவர்கள் உருவாகினர். ஈ.வெ.கி.சம்பத், சாதிக் பாட்சா, கே.ஏ.மதியழகன், கோவை.செழியன், மு.இராமநாதன், பி.ஏ.சாமி நாதன், மு.கண்ணப்பன் இப்படியான மேற்கு மண்டலத்தின் பெரும் படையில் உடுமலை ப.நாராயணன் அவர்களின் பங்கு முக்கிய மானது என்பதைத்தான் புலவர் பண்ணன் எழுதியுள்ள இந்நூல் நமக்கு உணர்த்துகிறது.


2000-ஆம் ஆண்டு இந்த நூலின் முதல் பதிப்புக்கு மறைந்த இனமான பேராசிரியர் அவர்கள் அணிந்துரை எழுதியுள்ளார். கழகத்தவர்களால் எழுதப்படும் தன் வரலாறுகளும், நினைவுக் குறிப்புகளும் ஏன் முக்கியமானவை என்பதை ஒட்டி, இந்த அணிந்துரை அமைந்துள்ளது. மேற்கு மண்டலத்தில் கழகம் வளர்ந்த கதையையும், கழகம் வளர்த்த முன்னோடிகளையும், தொண்டருக்கும் தலைவருக்கும் இடையில் நிலவிய அணுக்கமான உறவையும் அறிந்துகொள்ள இந்நூல் அவசியம் உதவும்.

23 ஆண்டுகளுக்குப் பிறகு மறுபதிப்பு கண்டுள்ள இந்த நூல், சமகால வாசிப்புக்கும் அவசியமாகிறது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

415

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.